


# 1

மலைப் பாதையில், ஊட்டி ரயில் மெதுவாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

சுற்றிலுமிருந்த இயற்கைக் காட்சிகள், அனைவரின் இதயத்தையும் கொள்ளை கொள்வதாக இருந்தன.

ஒரு கைதேர்ந்த ஓவியனின் கருத்தில் உதித்து, தூரிகையில் வெளிக்கொணரப்பட்ட சிறந்த ஓவியமாய், மலையழகு பார்ப்பவர்களைத் தன்வசப்படுத்திக் கொண்டிருந்தது.

இயற்கை எழுதிய இனிய கவிதையாய்.... மலைமகள்! தூரத்து வைரச் சுடராய் சூரியன்....! தூரத்துப் பச்சை விரிப்பாய் மரங்கள்....! தூரத்துப் படகாய் வானில் மேகங்கள்....! தூரத்து வெண்புகையாய் அருவி!

மலைவாழ் மக்களைப் பற்றிய ப்ராஜெக்ட் ஒன்றை செய்வதற்காக, சென்னையிலிருந்து உதவிப் பேராசிரியர் ஒருவரும், எம்.ஏ. சரித்திரம் பயிலும் மாணவ மாணவிகள் ஆறு பேரும், அந்த ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

ஒரே கூச்சலும், கும்மாளமுமாகப் பயணம் இனிதாகச் செல்ல, ஆசிரியர் சிவசுப்ரமணியமும் எல்லாவற்றையும் அமைதியாக ரசித்துக் கொண்டு இருந்தார்.

அவ்வப்போது இறங்கி, சுற்றிலும் படர்ந்திருந்த வண்ண மலர்களை பறித்து எறிவார்கள்; இருண்ட குகைக்குள் ரயில் செல்லும் போதெல்லாம், 'ஓ'வென்ற உற்சாகக் குரலுடன் ஆர்ப்பரிப்பார்கள்.

மலைமகளைப் பார்த்ததும் உற்சாகம் பீறிட்டு ஊற்றாய்க் கிளம்ப, ரசித்து மகிழ்ந்த அந்தக் குழுவில் நான்கு மாணவர்களும் இரு மாணவிகளும் இருந்தனர்.

ரயிலின் ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்த மானசா, இயற்கையழகை விழிகளால் படமெடுத்து, இதயத்தில் பதித்துக் கொண்டிருந்தாள்.

அருகிலிருந்த அவள் தோழி சுதாவும், தன் மனதை இயற்கையிடம் பறிகொடுத்திருந்தாள்.

மானசாவுக்கு, மலைப்பாக இருந்தது. செயற்கையாக மனிதன் படைத்த எத்தனையோ விஷயங்களைவிட, இறைவன் படைத்த இயற்கைதான் எவ்வளவு அழகு என்று, மனதில் பிரமிப்பு வந்தது.

இந்தப் பதினைந்து நாட்களில், மலை வாசம் ஆளையே மாற்றிவிடுமோ என்ற யோசனையும் மனதினுள் படர்ந்தது.

குன்னூர் வந்தவுடன் இறங்கி, ஓட்டலில் சாப்பிட்டுவிட்டுப் பிறகு பயணத்தைத் தொடர்ந்த அனைவரும், அங்கிருந்து ஒரு மலைப் பாதையில் வேனில் மலையேற ஆரம்பித்தனர்.

மாலை நேரம் வருவதற்குள்ளேயே, அங்கு குளிர ஆரம்பித்திருந்தது. நரம்புகளை நலம் விசாரிக்கும் குளிர்ந்த பனிக் காற்றின் வருடல், தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது.

ஆசிரியரிடம் திரும்பிய மானசா, ''இன்னும் எவ்வளவு தூரம் போகணும் சார்? அங்கே நமக்கு, எல்லா ஏற்பாடும் செஞ்சிருப்பாங்களா...?'' என்றாள் ஆர்வமாய்.

''அந்த மலைக் கிராமத்திலே, என் அப்பாவோட நண்பர் தர்மலிங்கம் பெரிய பண்ணை வச்சிருக்கார். அவர்தான் எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்கார். 'ஃபாரெஸ்ட் கெஸ்ட் ஹவுஸ்' ஒண்ணு ஏற்பாடு பண்ணி இருக்காம். சமையலுக்கும் அங்கேயே ஆட்கள் இருக்கறதா சொன்னாங்க. அங்கிருந்து, உள்ளே - காட்டுக்குள்ளே போய்தான் நமக்கு வேண்டிய தகவல்களை எல்லாம் சேகரிக்கணும்'' என்றார்.

அனைவருக்கும், ஏதோ ஒரு புது உலகத்துக்கு வந்தது போலிருந்து, முகங்களில் மகிழ்ச்சியும் ஆர்வமும் மிகுந்து தெரிந்தன.

அந்த விருந்தினர் இல்லத்திற்குச் சென்றடைந்தபோது, வானம் இருட்டிக் கொண்டு வர - இரவின் அணைப்பில் - சூரியன் மறைந்து கொண்டிருந்தான். ஓடுகள் வேயப்பட்டு, சுற்றிலும் வெராந்தாவுடன், அழகிய பெரிய குடில் போலிருந்தது, அந்த இல்லம்.

சமையலறையைத் தவிர, அங்கு மூன்று அறைகள் இருந்தன. மாணவர்கள் ஒரு அறையிலும், மானசாவும் சுதாவும் ஒன்றிலும், மற்றொன்றில் சிவசுப்ரமணியமும் தங்கிக் கொண்டனர்.

அங்கு சமைப்பதற்கென்று இருவரும், ஒரு வாட்ச்மேனும் இருந்தனர். உடனே சூடான டீயும் பிஸ்கட்டும் - குளிருக்கு இதமாகப் பரிமாறப்பட்டன.

அன்றிரவு, வெகு நேரம் வரை அவர்கள் உறங்கவில்லை. அந்த வீட்டுக்கு முன், காய்ந்த சுள்ளிகளைப் போட்டுத் தீ மூட்டி, அதைச் சுற்றி அமர்ந்து குளிர் காய்ந்தபடி உற்சாகமாகப் பேசிக் கொண்டு இருந்தனர்.

திலீப், மானசாவிடம், ''இந்த வருஷம் படிப்பு முடிஞ்சதும் என்ன செய்யப் போறே மானசா?'' என்றான் இயல்பாக.

''தெரியலை திலீப்.... அப்பாம்மா, எனக்குக் கல்யாணம் செஞ்சி வச்சிடணும்னு ரொம்பப் பிடிவாதமா இருக்காங்க....

ஆனா, நான் அவங்ககிட்டே, 'ஒரு வேலைக்குப் போய், சொந்தக் கால்லே நின்னதுக்கு அப்புறம்தான் கல்யாணமெல்லாம்'னு தீர்மானமா சொல்லிட்டேன்.''

''ஏன்... இப்ப மட்டும் என்ன... இரவல் கால்லேயா நிக்கறே....?'' - உடனே கிண்டலாக வந்தது பரணியின் குரல்.

''இல்லை.... அவ அப்பாவோட கால்லே நிக்கறா!'' என்றான் வாசு, குறும்புடன்.

மானசா 'ப்ச்' என்று புன்னகையுடன் தலை அசைத்தபோது முகத்தில்



படர்ந்த மஞ்சள் வெளிச்சமும், அந்தக் கன்னக் குழியும், காதுகளில் ஆடிய தோடுகளும், அவள் அழகை மேலும் அதிகப் படுத்தின.

''சுதா... நீ ?'' விக்ரம் கேட்க, ''எனக்கு சின்ன வயசுலேயே, என்னோட மாமா பையன்தான் மாப்பிள்ளைன்னு முடிவாயிடுச்சி. இந்த வருஷம் படிப்பு முடிச்சவுடனே, கல்யாணம்தான்!'' என்றாள் சுதா.

''அப்பாடா.... கல்யாண சாப்பாடு சாப்பிட்டு ரொம்ப நாளாச்சேன்னு நினைச்சேன். நல்ல வேளை!'' என்றான் வாசு.

''சரியான சாப்பாட்டு ராமன்டா நீ... அது, உன்னைப் பாத்தாலே தெரியுது!'' என்று கூறிய சுதாவின் குரலில் இதமான கேலி!

சிவசுப்ரமணியமும் இளவயதென்பதால், இதை எல்லாம் மௌனமாகக் கேட்டு ரசித்தபடி அமர்ந்திருந்தார்.

சால்வையையும் மீறி குளிர் தேகத்தினுள் ஊடுருவ ஆரம்பித்த பிறகுதான், அவர்கள் எல்லோரும் உறங்கச் சென்றனர்.

மறுநாள் காலையில் சீக்கிரமே காட்டுக்குள் செல்ல வேண்டுமென்று சிவசுப்ரமணியம் கூறி இருந்தார். விடியலில், சூரியன் விழிக்கலாமாவென்று சோம்பலாய் யோசித்திருக்க, காலையில் எழுந்து வெளியில் வந்து பார்த்தால்.... எல்லோருக்கும் குளிரில் கன்னங்கள் சிவந்து, பேசும்போது வாயிலிருந்து மெல்லிய புகை கசிந்து வந்தது.

காட்டிலாகா ஊழியர்கள் இருவரின் துணையுடன் அனைவரும் கிளம்பி அந்த அடர்ந்த காட்டுக்குள் சென்றனர்.

பலவித மரங்களின் நறுமணம் அவர்களின் நாசியை வருடிச் செல்ல, சுற்றிலும் அடர்ந்த காடும் உயர்ந்த மரங்களும், மனதில் ஒரு வித பயத்தை வர வழைத்தன.... மரங்கள், சீறலாய் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தன!

சிறிது தூரம் நடந்த பிறகு, மலை வாழ் மக்களின் குடிசைகள் கண்களுக்குத் தெரிய ஆரம்பித்தன.

ஆண்கள், காலையிலேயே எழுந்து தேன் சேகரிக்கவும், மரம் வெட்டும் கூலி வேலைக்கும் கிளம்பிச் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு கூட்டமாகக் கிளம்பிய அவர்களை நிறுத்திய அந்த ஊழியர்கள் இருவரும், விபரத்தைக் கூறிவிட்டு அவர்களை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தினர்.

அங்கு தலைவர் போல் இருந்தவரிடம், சிவசுப்ரமணியம் பொதுவாகப் பேசியபடி தங்களின் வருகைக்கான காரணத்தைக் கூறிக் கொண்டிருந்தார்.

நவீன உடைகளில் நின்றிருந்த மாணவர்களைப் பார்த்தவுடன், அந்த மக்களிடம் மெலிதான கூச்சம் வந்திருந்தது. சுதாவும் மானசாவும் அங்கிருந்த பெண்களிடம் சென்று பேச ஆரம்பித்தனர்.

பெண்கள், தங்கள் கைகளில் பெரிதாய் அடுக்கிய வளையல்களுடன், வண்ண வண்ண உடைகளணிந்து, காதுகளில் பெரிய தோடுகளுடன், உல்லன் போர்வையைச் சுற்றியபடிக் காட்சி அளித்தனர்.

குழந்தைகளை சில பெண்கள் பின்புறம் தூளியாக்த் தொங்க விட்டிருக்க, அங்கிருந்த வயது முதிர்ந்தவர்கள் தானியங்களைக் காய வைத்துக் கொண்டும் உல்லன் சால்வைகளைப் பின்னிக்கொண்டும் இருந்தனர்.

அவர்கள் எல்லோரிடமும் பேசிக் குறிப்பெடுத்து விட்டு, மதியம் திரும்பி வந்து கொண்டிருந்த போது, இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி மெதுவாகப் பின்னால் வந்து கொண்டிருந்தாள் மானசா.

திடீரென அருகில் சருகுகள் மிதிபடுவது போல் ஏதோ சப்தம் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால், பக்க வாட்டிலிருந்த ஒரு ஒற்றையடிப் பாதையில் வந்து கொண்டிருந்தான் அந்த உயரமான மனிதன்.

தன் பேண்ட் பாக்கெட்டிற்குள் கை விட்டபடி ஒரு வித அலட்சியமான நடையுடன் வந்து கொண்டிருந்தவனை, 'யாரிவன்' என்ற யோசனையுடன் வியப்பாய்ப் பார்த்தாள் மானசா!

அந்த நிமிடம், அவனுடைய விழிகளும் அவள் மேல் பதிந்தன. ஒரு கணம் கூர்மையாய் அவளை ஊடுருவிய அவன் பார்வை, உடனே இறுக்கத்துடன் விலகி, வேறு புறம் திரும்பியது.

முன்னே சென்று கொண்டிருந்த ஊழியர்கள், அந்தப் புதியவனைக் கண்டதும் நின்று பவ்யமாய் வணக்கம் கூறிவிட்டு, அவனிடம் பேசினர்.

ஏனோ, அவளைக் கண்டதும் வெறுப்புடன் திரும்பியவன், அவர்களிடம் இயல்பாகப் பேசினான்.

அவனுடைய அசாத்திய உயரமும் தீர்க்கமான கண்களும் அழுத்தமான கடுமை கலந்த முகமும் அந்த அலட்சியப் போக்கும், அவன் யாரென்று அறிந்து கொள்ளும் ஆர்வத்தை அவளிடம் வரவழைத்தன.

மானசா நல்ல அழகு! கோதுமை நிறத்தில், அழகிய பேசும் விழிகளுடன், நல்ல உயரமாய், குழிந்த கன்னங்களும் இடை வரை நீண்ட கூந்தலுமாய் ஓவியப் பாவை போலிருப்பாள்.

தன்னைக் கண்டதுமே, இயல்பாகவே ஆண்களின் கண்களில் தெரியும் பிரமிப்பையும் ஆர்வத்தையுமே இதுவரை அறிந்திருந்தவளுக்கு, ஏனோ அவனுடைய பாராமுகம் மனதில் வியப்பைத் தூண்டுவதாய்!

ஒரு சரிவில் இறங்கியவன் வேகமாக வேறு புறம் சென்று விட, அவர்கள் அனைவரும் இல்லத்திற்கு வந்தனர்.

அன்றிரவு, அவர்களின் பேச்சு முழுவதும் அந்த மலைவாழ் மக்களைப் பற்றியே இருந்தது. அவர்களுடைய வாழ்க்கை புதிய உலகமொன்றை அவர்களுக்கு அறிமுகம் செய்தது.

எல்லோரும் படுத்த பிறகு, மானசா தனக்குப் பிடித்த நாவலாசிரியர் 'சுமேதன்' எழுதிய நாவலை சிறிது நேரம் படித்துவிட்டு, பிறகுதான் உறங்க ஆரம்பித்தாள்.

மறுநாளும் இப்படியே பொழுது செல்ல, அன்றிரவு மானசாவுக்கு லேசான காய்ச்சல் வந்தது.

பனி அதிகமாய் இருந்ததால் - அதுவேறு உடலைக் குளிரச் செய்ய,



சுதாதான் அவளை கவனித்துக் கொண்டாள். மருந்துகள் கைவசமிருந்ததால், போட்டுக் கொண்டு படுத்த மானசாவின் மனம், அந்த நிமிடம் அம்மாவின் அருகாமையை மிகவும் வேண்டியது.

அப்போது, அவளுடைய 'செல்' ஒலிக்க, சுதா அதை எடுத்தபோது மானசாவின் அப்பா வெங்கடேசன்தான் பேசினார். மகளுக்குக் காய்ச்சல் என்றதுமே பதறிப் போனவர், தான் உடனே கிளம்பி வருவதாகக் கூறினார்.

சுதா உடனே, ''அங்கிள்! பயப்படற மாதிரிஒண்ணுமில்லை. அவ நல்லாதான் இருக்கா! லேசா ஃபீவர்.... அவ்வளவுதான். மாத்திரை போட்டுட்டுப்படுத்திருக்கா. அவகிட்டயே பேசுங்க'' என்று கூறி அவளிடம் 'செல்'லைக் கொடுத்தாள்.

''அப்பா.... ஒண்ணும் பயப்படாதீங்க. நான் நல்லா இருக்கேன்! அம்மா கிட்டேயும் சொல்லுங்க. சுதா என்னைப் பாத்துக்கறா.... நாளைக்குக் காலையிலே சரியாயிடும்.... கவலைப்படாதீங்க.... குட்நைட்!'' என்று கூறிவிட்டு 'செல்'லை அணைத்தாள் மானசா.

**ம**றுநாள் காலையில் எழுந்த போதே, நல்ல மழை பெய்து கொண்டு இருந்தது.

அடைமழையில் காட்டுக்குள் செல்ல முடியாதென்பதால் பக்கத்திலிருந்த ஒரு டவுனுக்கு ஆண்கள் மட்டும் சுற்றிப் பார்க்கச் சென்றிருக்க, சுதா அவளுக்குத் துணையிருந்தாள்.

அன்று மதியத்துக்கு மேலாகியும், ஏனோ டவுனுக்குச் சென்ற யாருமே திரும்பி வரவில்லை.... மழையும் விடாமல் பெய்து கொண்டு இருந்தது.

மாலையாகி இருட்டும்வரை ஒருவரும் திரும்பி வராததால், சுதா பயந்து போனாள். மானசா காய்ச்சலில் சுருண்டு படுத்திருந்ததால் எதையும் உணரும் நிலையில் இல்லை.

வாசலில் ஒரு மலைவாழ் மனிதன், காவலாளியிடம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, என்னவென்று வெளியே சென்று விசாரித்தாள் சுதா.

அவன், அவளைக் கண்டதும், ''அம்மா ! நீங்க வர்ற வழியில பாத்து இருப்பீங்களே, ஒரு பெரிய பாலம்.... அது உடைஞ்சி போச்சாம். மண் சரிஞ்சு, மரமெல்லாம் வழியில விழுந்து கிடக்காம். பாதை சரியாகறதுக்கு எப்படியும் ரெண்டு மூணு நாளாகும்னு, பெல்லி வந்து சொல்லிட்டு போறான்'' என்றான் பதட்டமாக.

சுதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. காற்று, 'உஸ்' என்ற சப்தத்துடன் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது.

தொலைபேசியை எடுத்துப் பார்த்தால், அதுவும் உயிரை விட்டிருந்தது. யாருமில்லாத் தனிமை, அவள் விழிகளில் பயத்தைப் படரவிட்டது.

ஜீப்பில் போனவர்கள் என்ன ஆனார்களோ என்ற கவலை மனதில் கலக்கத்தை வரவழைக்க.... தாங்கள் இருவரும் இங்கு தனித்திருப்பது வேறு,

கலக்கமாய் இருந்தது.

யோசனையுடனிருந்த சுதாவுக்கு, எங்கோ இசையாய் அழைக்கும் குயிலின் ஒசை கேட்ட போதுதான், மானசாவின் 'செல்' அழைப்பது புரிந்தது.

ஓடிச் சென்று அதை எடுத்த போது, மானசாவும் சோர்வுடன் எழுந்து அமர்ந்தாள். செல்லில் சிவசுப்ரமணியம்தான் பேசினார்.

''சுதாவா....? நான் சிவசுப்ரமணியம்தான் பேசறேம்மா. இங்கே வழியில பாலம் உடைஞ்சு, மண் சரிஞ்சு, மரமெல்லாம் குறுக்கே விழுந்து கிடக்கு. நாங்க எல்லாரும் இங்கேயே தங்கி இருக்கற மாதிரி ஆகிடும் போலிருக்கு.... மானசா எப்படி இருக்கா?'' என்றார்.

''அவ நல்லா இருக்கா, சார்! பாதை சரியாக, ரெண்டு மூணு நாளாகும்னு லாரென்ஸ் சொல்றாரு. அப்படின்னா, நீங்கள்லாம் அதுவரைக்கும் எங்க தங்குவீங்க?'' என்றாள் சுதா கவலையுடன்.

''என்ன பண்றது சுதா? இங்க ஒரு ஓட்டல்லேயே தங்கிக்கறோம். மாத்திக்கறதுக்குத் துணிங்க கூட இல்லை.... இங்கேயே வாங்கிடலாம்னு இருக்கோம். அங்கே, நீங்க ரெண்டு பேரும் தனியா இருக்க வேணாம்.... நான் தர்மலிங்கம் சார் கிட்டே போன்ல எல்லாம் பேசிட்டேன்! அவர் தன்னோட காரியக்காரரை அனுப்பறேன்னாரு. நீங்க ரெண்டு பேரும் அவர் கூடப் போங்க! '' என்றார்.

''அவங்க யாரையுமே எங்களுக்குத் தெரியாதே சார்! எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை, உங்களோட திங்க்ஸ் எல்லாம் வேற, இங்க அப்படியே இருக்கு! '' என்றாள்.

''நீ ஒண்ணும் கவலைப்பட வேணாம் சுதா! ராமையான்னு ஒருத்தர் வருவாரு, லாரென்ஸுக்கு அவரை நல்லாத் தெரியும். அதோட, தர்மலிங்கம் ஐயா, இந்த ஊரிலேயே பெரிய மனுஷர்! அவரும் அவர் மனைவியும் மட்டும் தான் வீட்டில இருக்காங்க. நீங்க தைரியமா அங்கே தங்கலாம். பக்கத்து கிராமம்.... அதைச் சுத்தி இருக்கற தோட்டமெல்லாம் கூட அவருதுதான். நீங்க ரெடியாகுங்க! '' என்று கூறிவிட்டுப் போனை வைத்தார்.

மானசாவிடம் எல்லா விபரங்களையும் கூறிவிட்டு, மற்றவர்களின் பொருட்களை எல்லாம் எடுத்து ஒரே அறையில் வைத்து, அந்த அறையைப் பூட்டிவிட்டுத் தயாரானாள் சுதா.

தங்களுடைய பொருட்களுடன், இருவரும் முன் ஹாலில் காத்திருந்தனர். மானசாவுக்குக் காய்ச்சல் குறைந்து விட்டதால், எழுந்து தயாராகி அமர்ந்திருந்தாள்.

அந்த மலையில் பெரும் நிலச் சரிவு ஏற்பட்டிருந்தது. பூமிக் காதலியை மலைக் காதலன் முத்தமிட விரும்பி ஆசையாய் அவள் மடியில் சரிந்திருந்தான்.

வாசலில் ஜீப் வந்து நிற்கும் ஒலி கேட்க, லாரென்ஸ் உள்ளே வந்து, பெரிய



வீட்டிலிருந்து ஆள் வந்திருப்பதாகக் கூறினான்.

அப்போது உள்ளே வந்த ஒருவர், ''வணக்கம்மா! என் பேர் ராமையா... பெரிய ஐயா வீட்டில காரியக்காரரா இருக்கேன். ஐயா எல்லாம் சொன்னாங்க.... அம்மா, உங்களை உடனே அழைச்சிட்டு வரச் சொன்னாங்க.... கிளம்பலாமாங்க?'' என்றார், இருவரையும் பார்த்து.

''நாங்க ரெடியா இருக்கோம் சார்... போகலாம்'' என்ற சுதாவிடமிருந்து பொருட்களை வாங்கி ஜீப்பில் ஏற்றிவிட்டு, லாரென்ஸிடம் விடை பெற்றுக் கொண்டு, அவர்களை அழைத்துச் சென்றார் அவர்.

செல்லும் வழியெல்லாம் மானசாவின் மனம் பலத்த யோசனையிலிருந்தது. முகம் தெரியாத ஒருவரின் வீட்டில் எப்படித் தங்குவது என்ற தயக்கம், அவளுக்குள் அதிகமாய் வியாபித்தது.

ஏதோ ஒருவித பயம் மனதை நிறைக்க, தன் வீட்டையும் பாதுகாப்பான தங்கள் வாழ்க்கையையும் நினைவிற்குக் கொண்டு வந்த நெஞ்சம், மிரட்சியைத் தத்தெடுத்தது.

சிறுவயது நினைவுகள், மனதில் ஏக்கமாகத் தன் சிறகு விரித்தன. காய்ச்சல் வந்தபோது கஞ்சி வைத்துக் கொடுத்து, தைலம் தேய்த்து, தைரியம் கொடுத்து, பக்கத்தில் அமர்ந்து வாஞ்சையுடன் தலைகோதிவிட்ட அம்மாவின் நினைவு!

பக்கத்து வீட்டுப் பெண் சைக்கிள் வைத்திருக்கிறாள் என்று இவள் கண்ணைக்கசக்கியதும், உடனே ஒரு சைக்கிளை வாங்கி வந்து, ஓட்டக் கற்றுக் கொடுத்து அவளைப் பாசமாய் பாதுகாத்த அப்பாவின் நினைவு!

வானத்தில் நிலவு காட்டிச் சோறூட்டிய பாட்டியின் நினைவு!

தமிழை நல்ஆசானாய் ஊட்டி, அவளுக்குள் படிக்கும் ஆர்வத்தினை விதைத்து, இன்றும் நினைத்தாலே நெஞ்சம் கசியச் செய்து அவளுக்குள் கவிதைகளைத் தன் மரணத்தின் மூலம் அறிமுகப்படுத்திய தாத்தாவின் நினைவு!

பிரியமானவர்களுடைய பாசத்தை, அவர்களுடனே இருந்து அதிகமாய் அனுபவிக்கும் சந்தோஷம்.... அது எவ்வளவு பெரிய வரமென்று பிரிவில் புரிய, பின்னோக்கிப் பயணிக்கின்ற இயற்கையில், ஒரு பெருமூச்சுடன் தன் கவனத்தை செலுத்தினாள் மானசா.

மனம் மெல்ல மெல்ல, சுற்றிலும் தெரிந்த பசுமையில் தன்னைப் பதித்துக் கொண்டது.

## 2

ஜீப் வேகமாகச் சென்று அந்த வீட்டின்முன் நின்றதும், இறங்கிய மானசாவும் சுதாவும் பிரமித்துப் போயினர்.

முன்புறம் விரிந்திருந்த தோட்டத்துடன், நடுவே பெரிய மாளிகை

போன்ற பிரம்மாண்டமான அமைப்புடன், சுற்றிலும் புல் வெளியுடன், மிக அழகாக இருந்தது, அந்த வீடு!

மானசாவையும் சுதாவையும் வாசலுக்கே வந்து வரவேற்றனர் அந்தத் தம்பதிகள். அவர்தான் 'பெரிய ஐயா' என்பது பார்த்த உடனே புரிந்தது.

ஆனால், மானசாவுக்குத்தான் அவரை முன்பே எங்கேயோ பார்த்த நினைவு, மனதில் மெல்லஇழை கோர்த்தது.

அந்த அம்மா கனிவான புன்னகையுடன் அன்பாக அவர்களை வரவேற்றார்.

''வாங்கம்மா...! சிவசுப்ரமணியம் எல்லா விபரமும் சொன்னார். அதான் உடனே ஜீப்பை அனுப்பினோம். இதை, உங்க வீடு மாதிரி நினைச்சிக்கலாம்.... இங்கே வேறு யாரும் கிடையாது. நீங்க நிம்மதியா இருக்கலாம்! எங்களுக்கும், நம்ப வீட்டில சின்னப் பொண்ணுங்களே இல்லாததுக்கு, நீங்க வந்தது ரொம்ப சந்தோஷமாக இருக்கு!'' என்றார் பரிவுடன்.

அவரின் மனம் நிறைந்த புன்னகை, அவர் முகத்தில் பாசமாய் வெளிப்பட, மானசாவின் மன்ம் ஏனோ அவரிடம் உடனே ஒட்டிக் கொண்டது.

சிலரிடம் மட்டும், கண்டவுடனே ஒரு ஒட்டுதல் வருவது, எப்போதுமே அவளுக்குப் புரியாத புதிர்!

அவர்கள் இருவரையும் ஒரு அறைக்கு அழைத்துச் சென்ற அந்த அம்மா, பெரிய இரட்டைக் கட்டிலுடன் விசாலமாக இருந்த அறையில், அவர்களுடைய பொருட்களை வைத்து விடும்படி வேலையாளிடம் கூறிவிட்டுத் திரும்பினார்.

''இந்த அறையிலேயே தங்கிக்கங்கம்மா! ஏதாவது வேணும்னா, தயங்காம என்கிட்டக் கேளுங்க. ஏம்மா உன் முகம் எல்லாம் சிவந்துபோய் இருக்கு? உடம்பு சரியில்லையா....?'' என்று மான்சாவிடம் கேட்டார்.

''அவளுக்கு நேத்திலேருந்து ஃபீவர்ம்மா! அதனாலதான் நாங்க ரெண்டு பேரும், சாரோட டவுனுக்குப் போக முடியலை'' என்றாள் சுதா.

உடல்நலமில்லாத அந்த நிலையிலும், துடைத்து வைத்த வெள்ளிக்குத்து விளக்கைப் போல் பளிச்சென்றிருந்த மானசாவின் முகம் அவரைப் பெரிதும் கவர்ந்தது.

அவளுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, ''இப்ப சூடு குறைஞ்சுதான் இருக்கு! நீ, பேசாம படுத் ஓய்வெடுத்துக்க... உன் பேர் என்னம்மா?'' என்றார் கனிவுடன்.

அவள் ''மானசா'' என்றவுடன், ''ரொம்ப நல்ல பேர்.... அந்த மானசாதேவி அம்மனோட பேர்! '' என்றார் ஏதோ நினைவுடன்.

பிறகு சுதாவிடம் திரும்பி, ''நீ என் கூட வரம்மா. நான் ஒரு கஷாயம் போட்டுத் தரச் சொல்றேன்.... மானசாவுக்குக் கொண்டு வந்து கொடு! இன்னிக்கே உடம்பு சரியாப் போயிடும்! ஆமாம்... உன் பேர் என்னம்மா?''



என்று கேட்டுக் கொண்டே, அவளை அழைத்துச் சென்றார்.

சுதா கஷாயத்துடன் திரும்பி வந்தபோது, மானசா உறங்கியிருந்தாள். அவளை எழுப்ப மனமில்லாமல், ஜன்னலருகே சென்று பார்த்தபோது, மழை வந்து முத்துக் குளித்துக் கொண்டு இருந்தது. மின்கம்பிகளில் எல்லாம் நீர் முத்துக்கள் தெரிந்தன.

பின்புறம் ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பியபோது, அவளின் பின்புறம் நின்று மானசாவும், பொழியும் மழையை ரசித்துக் கொண்டிருந்தாள்.

துளித் துளியாய் ஓடுகளிலிருந்து வழிந்த நீர், பூமியில் ஜலதரங்கம் வாசிப்பது போலிருந்தது.... பக்க வாத்தியமாய் காற்றின் சீறல்!

''மானு! எழுந்திரிச்சிட்டியாடி.... உனக்கு அந்த ராஜேசுவரி அம்மா கஷாயம் போட்டுக் கொடுத்தாங்க. ப்ளீஸ் அதைக் கஷ்டப்பட்டாவது குடிச்சிடுடி!'' என்றாள் சுதா.

மானசா, இதழ்களில் உறைந்த சிறு முறுவலுடன், 'சரி' என்றபடி அதை மெதுவாகக் குடித்தவள், உடல் சோர்வாக இருந்ததால், அப்படியே சுருண்டு படுத்துக் கொண்டாள்.

''மானு.... உன்னோட ஆசிரியரோட நாவலைப் படிக்கலையே ரெண்டு நாளா....? அது இல்லைன்னா, உனக்குத் தூக்கமே வராதே! ஏண்டி.... வர இடத்துக்கெல்லாம் கூட அதை வாங்கி எடுத்துட்டு வரணுமா? அப்படி அதுல என்னதான் இருக்கோ, தெரியலை! '' என்றாள் சலிப்புடன்.

'உனக்கென்ன தெரியும்' என்பது போல் மானசா புன்னகைத்த போது 'செல்' ஒலிக்க ஆரம்பித்தது.

நிலச் சரிவைப் பற்றிக் கேள்விப் பட்டவுடனே பதறிப் போய் பேசினார், அவளுடைய தாய் அலமேலு.

''மானு! நீ உடனே கிளம்பி வந்துடுடா! எனக்கு நியூஸைப் பாத்தா ரொம்ப பயமா இருக்கு. இப்ப எங்க தங்கி இருக்கிங்க?'' என்றார்.

''அம்மா.... இப்ப நானே நினைச்சாக் கூடக் கிளம்பி வர முடியாது.... வழி சரியாக ரெண்டு நாளாகும்! ஒண்ணும் பயமில்லை. நானும் சுதாவும், இங்க சாரோட நண்பர் தர்மலிங்கம் ஐயா வீட்டில இருக்கோம். அவங்க எங்களை நல்லாப் பாத்துக்கறாக. அப்பா கிட்டயும் சொல்லுங்க! ஒரு நிமிஷம் இருங்க, சுதா பேசறா! '' என்று கூறி, சுதாவிடம் கொடுத்தாள்.

நடந்தவற்றை சுதாவும் விபரமாகக் கூறிய பிறகு ஓரளவு சமாதானமாகி, பிறகு பேசுவதாகக் கூறிவிட்டு வைத்தார் அலமேலு.

அன்று இரவுச் சாப்பாட்டை அவர்களின் அறைக்கே வேலைக்காரம்மா எடுத்துக் கொண்டு வந்து தந்துவிட, இருவரும் சீக்கிரமே படுத்து விட்டனர்.

மறுநாள் காலையில் எழுந்த போதே, மானசாவுக்கு உடல்நிலை சரியாகி இருக்க - நன்றாகப் புத்துணர்வுடன் இருந்தாள்.

வெந்நீரில் குளித்து விட்டு வந்து, ஜன்னல் வழியே தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தபோது, தோட்டத்து நடைபாதையில், அன்று காட்டில் பார்த்த அந்த உயரமான மனிதன் நடந்து வந்து கொண்டிருந்தான்.

அந்த வீட்டுப் பெரியவரைப் பார்ப்பதற்கு வருகிறானோ என்ற எண்ணத்துடன், அவனையே ஒரு நொடி அளவிட்டாள் மானசா.

இயல்பாகத் திரும்பிய அவன் விழிகளில், ஒரு கணம் அவளைக் கண்டதும், ஆச்சர்யமும் யோசனையும் ஒருங்கே தோன்றின.

ஏனோ மனம் இனம் புரியாமல் படபடக்க, உடனே ஜன்னல் அருகிலிருந்து விலகித் தன் பெட்டியிலிருந்த புத்தகத்தை எடுத்து படிக்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்தில் சுதாவும் குளித்து விட்டு வர, வெளியே செல்ல எழுந்த போதும் மனதிற்குள் ஏனோ அவன் முகமே மையம் கொண்டிருந்தது.

தலையைக் குலுக்கியபடி ''சுதா! அந்த அம்மாவைப் பாத்து 'தேங்க்ஸ்' சொல்லணும். அவங்க குடுத்த கஷாயத்தாலே, இப்ப ஃபீவர் சரியாயிடுச்சி.... உடம்பே லேசா இருக்கு! போலாமா?'' என்று கேட்டாள்.

இருவரும் அறையை விட்டு வெளியே வந்து முன்னறைக்குச் சென்றபோது, அங்கிருந்த சோபாவில் அந்த வீட்டு உரிமையாளனைப் போல் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் அந்த உயரமான மனிதன்.

'இவன் ஏன் இங்கு வந்து அமர்ந்திருக்கிறான்?' என்ற யோசனையுடன் மானசா திரும்பியபோது, ராஜேசுவரி அம்மா அங்கு வருவது தெரிந்தது.

அவர்கள் இருவரையும் கண்டவுடன், புன்னகையுடன், ''இப்ப உடம்பு பரவாயில்லையா? மெதுவா எழுந்திரிச்சிருக்கலாமேம்மா....? நீங்க ஒய்வெடுத்துட்டு இருப்பீங்கன்னுதான் உங்களைத் தொந்தரவு செய்யலை'' என்றபடி, அவளுடைய நெற்றியில் தன் விரல்களைப் பதித்தார்.

அவருடைய கையைப் பிடித்துக் கொண்ட மானசா, ''ரொம்ப நன்றிம்மா! நீங்க கொடுத்த மருந்தாலே, இப்ப நான் நல்லாயிருக்கேன்'' என்றாள், கன்னம் குழியப் புன்னகைத்தபடி!

உடனே அந்தப் புதியவன் ஏனோ அசுவாரசியமாக எழுந்தான்.

அவனிடம் திரும்பிய ராஜேசுவரி, ''சித்தார்த்! இங்கே, படிப்பு விஷயமா ரெண்டு பேர் வந்திருக்கறதா, காலையில நான் சொன்னேனே.... இவங்கதான் அது! இது மானசா.... இவ சுதா! இவங்களோட வந்தவங்கள்லாம் டவுன்லே இருக்காங்க. பாதை சரியான பிறகுதான் அவங்க வரமுடியும்'' என்றார்.

பெண்களிடம் திரும்பி, ''இவன் சித்தார்த்... எங்களோட ஒரே மகன்'' என்றார் பெருமையாக.

சோம்பலுடன் அவள் மேல் படர்ந்த அவன் விழிகளில் ஒரு வித அலட்சியம் இருந்தது. லேசாகத் தலையாட்டிவிட்டு வேகமாக உள்ளே சென்று விட்டான் அவன்.



''சித்து எப்பவுமே இப்படித்தான்! யார்கிட்டேயும் அவ்வளவா பழக மாட்டான். என்னோடவும், அவரோடவும் மட்டும்தான் பேசுவான். அது கூட அளவாதான்.... அவனுடைய உலகமே வேற....!'' என்றார் ராஜேசுவரி.

அவருடன் பேசிக் கொண்டிருந்ததில், அன்றைய பொழுது இனிமையாகக் கழிந்தது.

அந்த வீட்டின் பின்புற வெராந்தாவில் போடப்பட்டிருந்த பெரிய ஊஞ்சல், மானசாவைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவயதில், தன்னுடைய பாட்டி வீட்டில் இது போல ஊஞ்சலாடியது, உடனே ஞாபகம் வந்தது.

ராஜேசுவரியிடம், ''நான் இந்த ஊஞ்சலிலே ஆடலாமா?'' என்றாள் மானசா தயக்கத்துடன்.

''ஏம்மா! இதையெல்லாம் என்கிட்டே கேக்கணுமா, என்ன? உங்களை மாதிரி சிறுவயசுப் பொண்ணுங்க இல்லாமே, இந்த வீடே வெறிச்சோடிப் போயிருந்தது. இப்ப என்னவோ திடீர்னு வீட்டில் விளக்கு ஏத்தி வைச்சா மாதிரி இருக்குன்னு நினைச்சிட்டு இருக்கேன், போம்மா! '' என்றார் சந்தோஷத்துடன்.

திடீரென இடைமறித்தது ஒரு குரல்!

''அண்ணி! வேலைக்காரங்க லைட்டைப் போட்டிருக்காங்க.... நீங்க வேற.... ஏதோ தப்பா நினைச்சிப் பேசிட்டு இருக்கீங்க!'' பின்னாலிருந்து நக்கலாக வந்தது, சித்தார்த்தின் குரல்.

மானசா வியப்புடன் அவனைப் பார்த்துவிட்டு, அவரிடம் திரும்பினாள். அவன் பேச்சை விட, தன் அம்மாவை, அவன் 'அண்ணி' என்று அழைத்த விதம், வித்தியாசமாய்....!

கேள்விக்குறியுடன் தெரிந்த மானசாவின் பார்வை, ராஜேசுவரியைப் பேச வைத்தது.

''சித்து எங்க சொந்தப் பையன் இல்லைம்மா. எங்க வீட்டுக்காரரோட தம்பி! அவங்க ரெண்டு பேருக்கும், வயசு வித்தியாசம் ரொம்ப அதிகம். சித்து பிறந்த உடனே, எங்க மாமியார் இறந்துட்டாங்களாம். இவனை மாமாதான் வளத்திருக்காங்க. நான் கல்யாணம் பண்ணிக்கிட்டு இங்கே வரும்போது, அவனுக்கு ஏழு வயசு'' என்றவர், நிறுத்திவிட்டு ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தார்.

''சித்துவுக்கு சின்ன வயசில இருந்தே முரட்டுத்தனம் அதிகம். யார் பேச்சையும் கேட்க மாட்டான். அன்பால மட்டும்தான் அவனைக் கட்டுப்படுத்த முடியும். நான்தான் அவனை வளர்த்தேன்! எங்க மாமாவும், ரெண்டு வருஷத்திலே காலமாயிட்டாங்க! எங்களுக்கும் குழந்தைங்க இல்லையா.... அவனை எங்க குழந்தையாவேதான், இன்னிக்கு வரைக்கும் நாங்க நினைக்கிறோம்.'' அவர் குரலில், ஒரு தாயின் பாசம் தெரிந்தது.

சிறுவயதில், தாயின் அன்பையும் அரவணைப்பையும் அறியாமல் வளர்ந்ததுதான், இவனுடைய முரட்டுத் தனத்துக்குக் காரணமோ என்றும் மானசாவுக்குத் தோன்ற, அதுவே ஒரு பரிதாபத்தை வரவழைப்பதாய்!

அன்றிரவும், அம்மாவும் அப்பாவும் அவளிடம் பேசினார்கள். வர்களிடம் தர்மலிங்கம் ஐயாவைப் பற்றியும், ராஜேசுவரி அம்மாவைப் ற்றியும் பெருமையாகக் கூறினாள் அவள்.

அவர்களுக்கு, மனம் சிறிது ஆறுதலடைந்தது. மானசா, வீட்டிற்கு ஒரே சல்லப் பெண். இதுவரை அவளைப் பிரிந்து அவர்கள் இருந்ததே இல்லை.

மறுநாள் காலையில், தொலைபேசியில் பேசிய சிவசுப்ரமணியம், வர்கள் வருவதற்கு இன்னும் இரண்டு நாட்களாவது ஆகுமென்றார்.

ஆனால் அந்த வீடும், ராஜேசுவரியின் அன்பும் அவர்களைக் கவலை காள்ள விடாமல் செய்தன.... பாதுகாப்பாய் ஒரு கூட்டிலிருக்கும் ணர்வை வரவழைத்தன.

மனசா, அன்று விடிகாலையில் தோட்டத்தில் போடப்பட்டு இருந்த கல் பஞ்சில் அமர்ந்து, சுமேதனுடைய நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள்.

அதிலேயே மனமொன்றி இருந்ததால், காலையில் உலாவச் சென்று காண்டிருந்த சித்தார்த், தன்னையும் தன் கையிலிருந்த புத்தகத்தையுமே நோதமாகப் பார்த்து விட்டுச் சென்றதை அவள் அறியவில்லை.

சுதா குளித்துவிட்டு வந்தவுடன் சமையலறைக்குச் சென்று, ராஜேசுவரி அம்மாவைப் பார்த்துவரலாமென்று இருவரும் போனபோது, பின் வராந்தாவில் கூடைகூடையாகப் பலவகையான மலர்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஆர்க்கிட்ஸ், சாமந்தி, கோழிக்கொண்டை, ரோஜா, ஜெனியா, டேலியா னப்பலவிதமான வண்ண மலர்கள் கண்ணைப் பறித்தன.

ராஜேசுவரியிடம், "இவ்வளவு பூக்கள் எதுக்கும்மா? இன்னிக்கு வீட்டிலே ஏதாவது விசேஷமா?" என்று கேட்டாள் மானசா. "இன்னிக்கு வெள்ளிக் கிழமையாச்சே....! அதனால, நம்ப தோட்டத்துலயிருந்து நிறையப் பூ வந்துடும். பூஜை அறையில சாமி படத்துக்கெல்லாம் வைச்சிட்டு, மீதியை ஆளுங்க எடுத்துட்டுப் போயிடுவாங்க" என்று கூறிவிட்டு உள்ளே சென்றார்.

மானசாவுக்கு உடனே, தானும் தன் அம்மாவும் சேர்ந்து தங்கள் வீட்டுப் பூஜை-அறையில் செய்யும் மலர் அலங்காரம் உடனே நினைவில் வந்தது.

மானசா, அவள் பெற்றோருக்குப் பத்து வருடங்களாகக் குழந்தை இல்லாமலிருந்து, தவமிருந்து கிடைத்த பெண்!

குழந்தை இல்லாமல் வெங்கடேசன் - அலமேலு தம்பதியர், மனம் நொந்திருந்த வேளையில், வடநாட்டுக்குச் சென்று கங்கையில் மூழ்கிவிட்டு வந்தால், குழந்தை பிறக்குமென உறவினர்கள் கூறவும், இருவரும் அங்கு சென்றனர்.

அப்படியே எல்லா கோயில்களுக்கும் சென்று தரிசித்தபோது, ஹரித்துவாரில் மானசா தேவியின் ஆலயத்தில், பெண் குழந்தை பிறந்தால் அந்த அம்மனின் பெயரையே வைப்பதாக, இருவருமே வேண்டிக்



கொண்டனர்.

ஹரித்துவாருக்குச் சென்று வந்த அடுத்த மாதமே, மானசா கருவில் உதி அந்த தேவியிடம் சமர்ப்பித்த தங்கள் கோரிக்கை பலித்து விட்டதை அறி மிகவும் மகிழ்ந்தார் அலமேலு.

அன்றிலிருந்து, மானசா தேவிக்கு பூஜை செய்கிற நாட்களில், பண்டி சமயங்களில், மானசாவின் பிறந்த நாளின் போது என்று, எப்போது வீட்டின் பூஜை அறையில் பெரிதாக, ரங்கோலி போல் மலர்க் கோல போடுவது, அவர்கள் வீட்டில் வழக்கம்.

தன் வீட்டு நினைவில், இதழ்களில் உறைந்த புன்னகையுடன் யோசனையாக நின்றிருந்த மானசாவை, கிழித்துக் கூறு போட்டது.... ஒ சீற்றமான குரல்.

தாய்ப்பறவையின் அரவணைப்பிலேயே கதகதப்பாய் ஒளிந்திருக்கும் சிறு பறவையொன்று வெளி உலகிற்கு வந்த போது பெரும் பருந்தின் சடசடப்புக்கு அஞ்சி, சிறகுகள் படபடக்க அடைக்கலம் தேடி ஓடுவது போல், அவள் மனம் ஒரு கணம் குலுங்கியது.

---

## 3

---

மானசா, தன் நினைவுகளிலிருந்து கலைந்து பதட்டத்துடன் நிமிர்ந்தபோது, எதிரில் கோபமாக நின்றிருந்தான் சித்தார்த்.

"இப்படி வழியை மறைச்சிட்டு நின்னு, யோசிக்கற மாதிரி நடிச்சா, எல்லாரும் மயங்கிடுவாங்கன்னு நினைப்பா? இல்லை.... இதுதான், ஆண்களை உங்க காலடியில் விழ வைக்க, நீங்க போடற நாடகமா....?" சித்தார்த்தின் குரல் எகத்தாளமாக வந்தது.

"சாரி!" என்று பதறி விலகியபோதுதான், தான் வழியை மறித்து நின்று யோசித்துக் கொண்டிருப்பதையே அவள் உணர்ந்தாள்.

அவனுடைய அழுத்தமான ஆழ்ந்த குரலில் வந்த வார்த்தைகள், மானசாவின் மனதைக் கீறி, வலிக்கச் செய்தன.

ஒரு பெருமூச்சுடன் விரைந்து செல்லும் அவளை ஒரு விதமாகப் பார்த்துவிட்டு, மாடிக்குச் சென்றான் சித்தார்த்.

அவளுக்கு யாரிடமும் இது போன்ற குத்தலான மொழிகளைக் கேட்டுப் பழக்கம் இல்லாததால், உடனே துவண்ட மனதை எதிலாவது செலுத்தத் தோன்றியது.

நேராக சமையலறைக்குள் சென்றவள், "அம்மா! நான் அந்தப் பூக்களை வச்சி, பூஜையறையிலே அலங்காரமாக கோலம் போடவா?" என்றாள் தயக்கத்துடன்.

உதடுகளில் புன்னகை விரிய நிமிர்ந்த ராஜேசுவரி, "தாராளமா செய் மானசா! இது உங்க வீடு மாதிரி.... இதுக்கெல்லாம் என்கிட்ட அனுமதி கேக்க

வேணாம். இதெல்லாம் உரிமையா எடுத்துச் செய்ய இங்க ஆளில்லையேன்னு, நானே ஏங்கிட்டு இருக்கேன்....'' என்றார்.

சுதாவும் உதவி செய்ய, அழகான வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து பெரிய மலர்க் கோலத்தை, ஒரு மணி நேரத்தில் செய்து முடித்தாள் மானசா!

சமையலை மேற்பார்வை செய்துவிட்டு அங்கு வந்த ராஜேசுவரியின் விழிகள் வியப்பால் விரிந்தன.

மகிழ்ச்சியுடன், ''மானசா! எவ்வளவு அழகா செஞ்சிருக்கேம்மா.... ரொம்ப நல்லா இருக்கு! நீ மருமகளாப் போற வீடு, ரொம்பக் குடுத்து வச்சிருக்கணும்'' என்றார் பிரமிப்பு நீங்காத குரலில்.

''அவளுக்கு இந்த மாதிரி அழகுணர்ச்சி அதிகம்மா! மானசா நல்லா கவிதை எழுதுவா! எங்க காலேஜிலே, எந்த விழான்னாலும் இவளோட இந்த மலர் அலங்காரம் கட்டாயம் இருக்கும். எங்க பிரின்சிபாலுக்கு, இவளை ரொம்பப் பிடிக்கும்!'' - சுதா பெருமையாகக் கூறினாள்.

''ஏய்! சும்மா இருடி சுதா! இவ மட்டும் என்னவாம்? எல்லா விளையாட்டுப் போட்டியிலயும், ஸ்கூல் படிக்கும் போதிலிருந்தே இவதான் முதலா வருவாம்மா! எங்க காலேஜியிலேயே சிறந்த வாலிபால் ப்ளேயர் இவதான். எனக்கு அதெல்லாம் தெரியாது. அவமாதிரி எக்ஸர்சைஸ் செஞ்சேன்னா, அவ்வளவுதான்.... நான் ஒரே நாள்லே படுத்துடுவேன்!''

''போதும்டி! நம்ம ரெண்டு பேர் புராணத்தையும் கேட்டுட்டு, அவங்க பயந்துடப் போறாங்க'' என்றாள் சுதா கேலியாக.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. இவ்வளவு உயிராப் பழகுற உங்க ரெண்டு பேரையும் நினைச்சா, ரொம்பப் பெருமையா இருக்கு!'' என்றார், ராஜேசுவரி ஏதோ ஞாபகத்துடன்.

''அதோட.... அம்மா! எங்களுக்கு உங்களை மாதிரியெல்லாம் ருசியா சமைக்கவோ, இந்த மாதிரி அழகா ஒரு வீட்டை நிர்வாகம் பண்ணவோ, சுட்டுப்போட்டாக்கூட வராது. அதெல்லாம் உங்க கிட்டதான் கத்துக்கணும். அந்த விஷயத்துல உங்களைப் பாத்தா, பிரமிப்பா இருக்கு'' என்றாள் மானசா.

திடீரென இடைமறித்தது, ஒரு குரல்!

''அதெல்லாம் செய்யறதுக்கு இங்கே நிறையப் பேர் இருக்காங்க! அந்த மாதிரி எண்ணத்தோட இங்க யாரும் பழக வேண்டாம்.... அவங்கவங்க, வந்த வேலயப் பாத்துட்டு ஊருக்குப் போய் சேரலாம்!'' என்றான் சித்தார்த் கடுமையாக.

'என்ன இவன்.... நான் எப்போது பேசினாலும், வார்த்தைகளாலேயே தேளாய்க் கொட்டுகிறான்! நான் என்ன தவறு செய்தேன்....?' என்ற சுயதேடல் அவளை ஆக்ரமித்து, மனதைத் தொய்ந்து போகச் செய்தது.

சுதா அவளுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வேகமாகத் தங்கள் அறைக்குச் சென்று விட்டாள்.

செல்லும் வழியில் திரும்பிப் பார்த்தபோது, ராஜேசுவரி அம்மா



அவனிடம் ஏதோ கூறுவதும், அவள் செய்திருந்த மலர் அலங்காரத்தை பார்த்து விட்டு சித்தார்த் ஏளனமாக உதட்டைப் பிதுக்கி தோளை குலுக்கியபடி செல்வதும், கண்ணோரம் பட்டது, மானசாவுக்கு!

சுதா அவளிடம், ''ஏன்டி! உனக்கு இதெல்லாம் தலையெழுத்தா....! நா பாட்டுக்கு வந்தமா.... நம்ம வேலையைப் பாத்தமான்னு இல்லாம, எதுக்கு இதெல்லாம் செய்யறே? அவரு என்ன பேச்சு பேசறார் பாத்தியா புரிஞ்சிக்கத் தெரியாத ஜடம்....! எனக்கு என்னவோ, அந்த ஆளைப் பாத்தாலே பிடிக்கலை!'' என்றபோது, அவள் குரலில் மிகுந்த கோபமிருந்தது.

''ப்ச்.... விடு சுதா! எல்லாரும் ஒரே மாதிரியேவா இருப்பாங்க....? ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதம்! அந்த அம்மா முகத்துக்காகத்தான் நான் அதை செஞ்சேன். அந்த சித்தார்த்துக்காக இல்லையே! அப்ப, நாம ஏன் அவர் சொல்றதப் பெரிசா எடுத்துக்கணும்?'' என்று கூறிய போதும், மனதின் ஒரு மூலையில் மெலிதாய் வலித்தது அவளுக்கு!

அவர்களுடைய பேச்சை கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் ராஜேசுவரி. ''நீங்க ரெண்டு பேரும் தப்பா நினைச்சுக்காதீங்கம்மா! சித்தார்த் ரொம்ப நல்லவன்! இந்த அஞ்சாறு வருஷமாத்தான் இப்படி ஆயிட்டான். அதுக்கும் ஒரு காரணம் இருக்கு.... அது ஒரு பெரிய கதை!'' என்றார் கண்ணீர் மல்க.

உடனே, ''நாங்க ஒண்ணும் மனசிலே வச்சுக்கலைம்மா! நீங்க கவலைப் படாதீங்க. அவர் சுபாவம் அப்படின்னு புரிஞ்சி போச்சு.... இனிமே, நாங்க கவனமா இருப்போம்'' என்றாள் மானசா.

''இல்லைம்மா! அவனை இப்படி மாத்தினதே, ஒரு பொண்ணுதான்! நான், எல்லாத்தையும் சொன்னாதான் உங்களுக்குப் புரியும்'' என்று கூறிவிட்டு, அவர்களிடம் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார் ராஜேசுவரி.

''எங்க அம்மா வீடு, சாதாரணமான மிடில் கிளாஸ் குடும்பம்தான். இந்த மாதிரி வசதியில்லை.... நிறையப் பசங்க வேறே....! சொந்தம்கிறதாலே, என்னை இவர் விரும்பிக் கல்யாணம் செஞ்சுக்கிட்டாரு! எங்களுக்குக் குழந்தையில்லாததாலே, என் தம்பியும் இங்கேயே வந்துட்டான். ஐயாதான், சித்துவுக்குத் துணையா இருக்கட்டுமேன்னு அவனை அழைச்சிட்டு வந்திட்டாங்க.... சித்துவை விட ஒரு வயசு பெரியவன் தான், ராமு!'' என்று நிறுத்தியவர், ஒரு பெருமூச்சுடன் தொடர, காட்சிகள் அவர் கண்முன்னால் விரிந்தன.

சிறு வயதிலிருந்தே சித்துவும் ராமுவும் அந்த வீட்டில் ஒன்றாகவே வளர்ந்தார்கள்.... உயிராகப் பழகினார்கள்!

குன்னூரிலுள்ள ஒரு கான்வென்ட்டில் அவர்கள் படிக்க, ராஜேசுவரிக்கு இருவருமே செல்லப் பிள்ளைகள்தான்.

பாரபட்சமின்றி தாய்மையுடன் இருவரிடமும் அவர் அன்பு செலுத்த, சித்து அண்ணியிடமும், ராமு தன் மாமாவிடமும், மிகவும் நெருக்கமானார்கள்.

சிறுவயதிலிருந்தே, சித்துவை விட்டு ராமு ஒரு நாள் கூட இருந்ததில்லை.

அதே போல், சித்துவும் அவனை விட்டு விட்டு ஒரு வேளை கூடத் தனியாக சாப்பிட மாட்டான்.

இருவருக்கிடையேயும் இனம் புரியாத நட்பும், அன்யோன்யமும் இழை கோர்த்திருந்தன.

விடுமுறைக்கு கிராமத்திற்குச் சென்றாலும் ஒன்றாகவே இருவரும் சென்று வருவார்கள்.

ஒரு முறை, கிராமத்தில், கூட விளையாடிய ஒரு பையன், ராமுவை அடித்து விட்டான்.

உடனே அவனைப் பிடித்து கீழே தள்ளிய சித்தார்த், அவனுடைய மண்டையை உடைத்துவிட, அதிலிருந்து அவர்களை ஊருக்கு அனுப்புவதையே நிறுத்திவிட்டார் தர்மலிங்கம்.

பிறகு, ராமு சென்னையில் ஒரு கல்லூரியில் இன்ஜினியரிங் சேர, அவனைப் பிரிய மனமின்றி மறு வருடம் அதே கல்லூரியில் தானும் இன்ஜினியரிங் சேர்ந்தான் சித்தார்த்!

இருவரும், அங்கு ஒரு வீடு எடுத்துத் தங்கிப் படிக்க, சமையலுக்கு ஒரு ஆளையும் உடன் அனுப்பியிருந்தார் தர்மலிங்கம்.

சித்து மிகவும் முரட்டுத்தனமானவன்.... கோபக்காரன்.... எதற்கெடுத்தாலும் சட்டென்று உணர்ச்சி வசுப்படுகின்ற சென்சிடிவ் டைப்! ஆனால் ராமு மிகவும் அமைதியானவன்!

யாரிடமும் அதிகம் பேசாமல், பழகாமல் சித்துவிடம் மட்டுமே நட்புடன் இருப்பவன். அப்படிப்பட்டவன், ஒருநாள் தங்கள் கல்லூரியில் படிக்கும் ஒரு பெண்ணை விரும்புவதாகக் கூறியபோது, சித்தார்த்திற்கு பெரும் அதிர்ச்சி!

அவ்வளவு அமைதியானவனாகவும், சங்கோஜத்துடனும் காணப்படுபவன், ஒரு பெண்ணிடம் தன் மனதை இழந்து விட்டானென்பதை சித்துவால் நம்பவே முடியவில்லை.

- ஆனால், ராமு அவளை உயிராய் விரும்புவதை அறிந்தவன், அந்தக் காதலுக்கு பல வகையிலும் உதவ ஆரம்பித்தான்.

இந்தக் காதலைப் பற்றிப் பெரியவர்களிடம் கூறி தங்கள் இருவரையும் சேர்த்து வைக்கின்ற பொறுப்பையும் அவனிடம்தான் ராமு ஒப்படைத்தான்.

இருவரும் வெவ்வேறு ஜாதி என்பதால், இரு குடும்பங்களிலும் வரும் பிரச்னைகளை எதிர்நோக்கி, அவற்றை சரிசெய்யும் வழியையும் யோசித்து வைத்திருந்தான் சித்து.

பணம் ஒரு பிரச்னையாக குறுக்கே நின்றால் தன் அண்ணனிடம் கூறி சொத்தில் ஒரு பகுதியை ராமுவின் பெயருக்கு எழுதி வைத்து விடச் சொல்லலாம் என்றும் முடிவு செய்திருந்தான்.



ராமு, இறுதி வருடப் பரீட்சை முடிந்து சோகமாகக் கிளம்பியபோது அவனுக்கு ஆறுதல் கூறி, எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்வதாக தைரியமளித்து அனுப்பி வைத்தான்.

அப்போது, சித்தார்த்திற்கு செமஸ்டர் பரீட்சைகள் மீதமிருந்தன.

ஊருக்குப் போனவுடனே தர்மலிங்கத்திடமும் ராஜேசுவரியிடமும் எல்லாவற்றையும் கூறி, ராமுவை கிண்டல் செய்யவேண்டும் என்ற இனிய கற்பனையுடன், தேர்வுகளில் கவனத்தை செலுத்தினான் அவன்.

செமஸ்டர் முடிந்து உற்சாகத்துடன் ஊருக்குச் சென்ற போது, எப்போதும் போல் குன்னூருக்கு அவனை அழைக்க வந்திருந்த கார் டிரைவர் கோதண்டம், மிகவும் அமைதியாக இருந்தார். ராமு உடன் வரவில்லை.

அவரிடம், அண்ணன் அண்ணியைப் பற்றியும் ராமுவைப் பற்றியும் சித்து விசாரிக்க, அவர் சோகத்துடன் புன்னகைத்து ஒரு தலையசைப்பை மட்டுமே பதிலாகத் தந்தது ஏனென்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

ஆனால், வீட்டிற்குச் சென்றவுடன் கிடைத்த செய்தி அவனை இடியாய் தாக்கி, மனதை சுக்குநூறாய் சிதறச் செய்தது.

அவனைக் கண்டதும், தலையிலறைந்து கொண்டு அழ ஆரம்பித்தார் தர்மலிங்கம்.

அன்று விடிகாலையில், எதிரிலிருந்த மலையுச்சியிலிருந்து குதித்து ராமு தற்கொலை செய்து கொண்டதாக அவர் கூறியபோது, உடைந்து போன சித்துவின் உணர்வுகள் மரத்துப் போயின.

ராஜேசுவரி அதிர்ச்சியில் மயங்கியிருக்க, சித்து மலையடிவாரத்திற்கு ஓடிச் சென்றான்.

அங்கு பெரும் கூட்டம் கூடியிருந்தது. அப்போதுதான் போலீஸ் ராமுவின் உயிரற்ற சடலத்தை அப்புறப் படுத்திக் கொண்டிருந்தனர்.

உடல் வெகுவாய் சிதைந்திருக்க, சித்துதான் பிரமை பிடித்தவன் போல் ஆனான்.

ராமுவின் ஈமக்கிரியைகள் முடிந்து வீட்டிற்கு வந்தபோதுதான், துக்கம் விசாரிக்க வந்திருந்த ராமுவின் ரூம் மேட் கிஷோர் அந்தத் திடுக்கிடும் உண்மையைக் கூறினான்.

ராமு, பரீட்சை முடிந்து ஊருக்குக் கிளம்பும் நாளன்று, அவனுடைய காதலி அவனைத் தேடி வந்திருக்கிறாள்.

தனக்கு பெரிய பணக்கார இடத்தில் மாப்பிள்ளை பார்த்திருப்பதாகவும் குடும்பத்தினரின் கட்டாயத்தாலும், வெளிநாடு செல்ல ஒரு பெரிய வாய்ப்பு அமைந்ததாலும் தானும் சம்மதித்து விட்டதாகவும் கூறியிருக்கிறாள்.

வாழ்க்கையில் பணம் மிகவும் முக்கியம் என்றும், வலிய வரும் அதிர்ஷ்டத்தை உதறித்தள்ள மனம் வரவில்லையென்றும், தன்னை மறந்து விடும்படியும் கெஞ்சியிருக்கிறாள்.

தான் கடைசியாக அவனைச் சந்திக்க வந்ததாகக் கூறிவிட்டு அவள் விடைபெற்றுச் சென்றிருக்கிறாள். அதுவே ராமுவின் முடிவிற்கும் காரணமாக அமைந்திருக்கிறது. இந்த விஷயம் கிஷோருக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது.

அவன் எல்லாவற்றையும் கூறக்கூற, உடைந்து சிதறியது சித்துவின் மனது!

காதல் தோல்வியின் கொடுமையைத் தாங்க முடியாமல் அவன் தற்கொலை செய்து கொண்டதை, சித்து தாமதமாகத்தான் உணர்ந்து கொண்டான்.

அப்போதுதான் புரிந்தது.... ராமுவின் மரணத்தை அவன் காதலியிடம் அவன் நண்பர்கள் கூறியும், ஒரு சிறு விசாரிப்பு கூட இல்லாமல் மனித நேயமின்றி அவள் ஒதுங்கிய விதம்!

அவளுடைய துரோகமும், நம்பவைத்து ஏமாற்றிக் கழுத்தறுக்கும் குணமும் அவனுள் எரிமலையை தகிக்கச் செய்தன.

ராமு ஊருக்குக் கிளம்பிய அன்று இரவு, அவன் மிகவும் சோர்ந்து போய் தெரிந்ததன் காரணம் இப்போதுதான் விளங்கியது சித்தார்த்திற்கு!

காதலியைத் தற்காலிகமாகப் பிரிகின்ற சோகம் என்று நினைத்தானே ஒழிய, காதலியை நிரந்தமாகப் பிரிந்த சோகம் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

தன்னுடன் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்பவன், இந்த விஷயத்தை மட்டும் எப்படி மறைத்தான் என்று தவித்துத் துடித்தது சித்துவின் நெஞ்சம்.

எல்லாவற்றையும் தர்மலிங்கத்திடம் கூறி, அந்தப் பெண்ணை பழி வாங்க வேண்டுமென்று அவன் துடித்தபோது, இருவருமே அவனை அடக்கி விட்டனர்.

தங்களுக்கு என்று இருந்த இரு மகன்களில் ஒருவன் திரும்பி வரமுடியாத இடத்திற்குப் போய்விட்டதையும், சித்து மட்டுமாவது தங்களின் பிள்ளையாக இருக்க வேண்டுமென்றும், தங்களைப் புரிந்து கொள்ளும்படியும் ராஜேசுவரி கதறிய போது, சித்துவால் அதை மீற முடியவில்லை.

ஆனாலும், ராமுவின் கொடூரமான மரணத்தையும், அது தன் மனதில் விளைவித்த ரணத்தையும் அவனால் சுலபத்தில் மறக்க முடியவில்லை.

அந்தப் பெண்ணின் துரோகமும், ராமுவின் முடிவும் அவன் மனதில் வடுக்களாய் பதிந்திருந்தன.

அதிலிருந்து பெண்மை.... காதல்.... திருமணம்.... இவை கசப்பின் அடையாளமாய் மனதில் தடம் பதிக்க, அவனுக்குள் தாங்க முடியாத வெறுப்பும்.... சீற்றமும் படிந்தன.

**ரா**ஜேசுவரியின் விழிகள் கலங்கியிருக்க நினைவுகளிலிருந்து கலைந்து தொடர்ந்தார்:

''இப்பக்கூட, தான் கல்யாணமே செஞ்சிக்கமாட்டேன்னு சித்து



சொல்லிட்டான்.... ஒரு பெண்ணை நம்பி தன் வாழ்க்கையை ஒப்படைக்கிற முட்டாள்தனத்தை நிச்சயமா செய்யமாட்டேன்னுட்டான். எங்க ரெண்டு பேருக்கும் அதான் வருத்தமே....!'' - கூறி விட்டு அழ ஆரம்பித்தார்.

மானசாவும் சுதாவும் அவரை சமாதானப்படுத்தினார்கள்.

''அழாதீங்கம்மா! இறப்புங்கறது வாழ்க்கையில் சகஜம்னாலும், இது மாதிரி சின்ன வயசுல, அதுவும் இப்படி இறந்தா, நிச்சயமா அதைத் தாங்க முடியாது.... ரொம்பக் கஷ்டம்தான்! தைரியமா இருங்கம்மா.... மனசைத் தளர விடாதீங்க. உங்க உடம்பையும் நீங்க பாத்துக்கணும்... இல்லியா?'' என்றாள் மானசா.

சுதா அவரிடம், ''எங்க அப்பா இறந்தப்பகூட எனக்கு அப்படித்தாம்மா! ஒவ்வொரு நாளும் நரகமா இருக்கும் - அம்மாவைப் பார்த்தா! என்ன செய்யறது? காலம் மனப் புண்ணை ஆத்தும்கிறது, ரொம்ப சரி.... இப்ப அம்மா, எவ்வளவோ தேறிட்டாங்க''. என்றாள் ஆதரவாக.

சிறிது நேரம் கழித்து, மனதை சமாதானப்படுத்திக் கொண்டு கண்களைத் துடைத்து நிமிர்ந்தார், அவர்.

''சரிம்மா! நான் போய் சமையலைப் பாக்கறேன்'' என்று எழுந்தபோது, சுதா அவரிடம் ''அவர்.... அதான்மா உங்க மகன்.... எங்கே வேலை செய்யறாரும்மா?'' என்று கேட்டாள்.

''சித்து, பி.இ முடிச்சான். சில சமயங்கள்லே, அவங்க அண்ணனுக்குத் தொழில்லே உதவி பண்ணுவான். பாதி நேரம், அவனோட அறையிலேயே உக்காந்து எழுதிட்டு இருப்பான். நிறைய கதை எல்லாம் எழுதறான்.... அதுவும் ராமு போனப்புறம், அவன் உலகமே எழுத்துதான்! சாப்பிடக் கீழே வரதோட சரி.... காலையில் நடக்கப் போவான்..... ஒவ்வொரு கதை வரும்போதும், என் கிட்டே சொல்லுவான். அவனை வாழ்த்துவேன்! எனக்குப் படிக்கிற ஆர்வம் இல்லாததாலே, அதைப் பத்தி எனக்கு எதுவுமே தெரியாதும்மா.'' - ஒரு சோகப் பெருமூச்சுடன் முடித்தார் அவர்.

மானசாவின் மனம் அதிர்ந்து போயிருந்தது. ஒரு பெண்ணின் சுயநலமான துரோகம், இந்தக் குடும்பத்தை எந்த அளவு பாதித்திருக்கிறது என்ற உண்மை புரிந்து, மனம் வலித்தது.

இதிலிருந்து அந்த சித்தார்த் எப்படி விடுபடப் போகிறான் என்று, மனதின் மையத்தில் தவிப்பாய் ஒரு சூனியமான சுழற்சி எழ, அவன் மேல் இருந்த கோபம் போய், மனம் அவனுக்காக உருகியது.

**அ**ன்று மதியம் சாப்பிட்ட பிறகு சுதா உறங்கி விட, தனிமையில் அமர்ந்து யோசித்தபோது, தனக்குப் பிடித்த ஆசிரியர் 'சுமேத'னின் நினைவு உடனே வந்தது.

என்ன எழுத்து அது.... எப்படி அவரால் மட்டும் இது போல் எழுத முடிகிறது....? அது சாதாரண எழுத்தல்ல! ஒரு எழுத்தாளரால் மட்டுமே உணர முடிந்த, ஒரு தொலை நோக்குடன் கூடிய சமூகப் பார்வை!

அவரைப் பற்றி நினைக்கும் போது, சமுதாய அவலங்களைத் தேர்ந்த நடையுடன் வழங்கும் ஒரு சிறந்த படைப்பாளியாய்த் தோன்றியது! ஆனால் அவரும் பெண்களை வெறுப்பவரோ.... மனம் யோசனையில் மூழ்கியது.

ஆனால், ஒருவித விரக்தி இழையோடும் வடிவமைப்புடன் இருந்தாலும், தன்னுடைய எழுத்துக்களால் படிப்பவர் மனதைக் கட்டிப் போடும் வல்லமை கொண்டவராகவும் அவரைப் பற்றி எண்ணத் தோன்றியது.

அன்று அவள் மனம் ஏனோ ஏகாந்தமாய் இருக்க, உள்ளத்தைப் பெரும் ஆயாசம் வந்து தழுவி - அந்த எழுத்தாளரைப் பார்க்க வேண்டும் போல் ஒரு ஆர்வமும் வந்தது.

தனக்குள் பொங்கிய உணர்வுகளை அப்படியே அவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் தாக்கமும் பெரிதாய் எழுந்தன.

பி.ஏ இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த போது, தன் தோழி விஜியின் வாழ்வில் நடந்த சம்பவம், அப்போது நினைவில் மோதியது.

அப்போது, விஜியின் அம்மாவும் அப்பாவும் ஏதோ பிரச்னையால் பிரிந்து இருந்ததால், அவள் மிகவும் மனமுடைந்து போயிருந்தாள். தன் குடும்பப் பிரச்னையை தனக்குப் பிடித்த எழுத்தாளரிடம் கூறி - அந்த மனிதரின் முயற்சியால் அவள் குடும்பம் ஒன்றாக இணைந்தது, இன்று நடந்தது போல் கனவாய்ப் படர்ந்தது - மானசாவுக்குள்!

மதியம், சுதா தூங்கிய பிறகும் உறக்கம் வராததால், பின்புறம் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து, சுமேதன் எழுதிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள், மானசா. அழகிய இளம் கனகாம்பர நிறத்தில் சூரிதார் அணிந்து, ஒரு பூக்குவியலைப் போல், ஊஞ்சலாடிக் கொண்டே இதழ்களில் படர்ந்த புன்னகையுடன், கதையில் ஆழ்ந்து இருந்தாள்.

மனதில் பொங்கிய உணர்வுகளின் ஆதிக்கத்தால், சித்தார்த் அவளருகில் வேகமாக வந்ததையோ, அருகில் நின்று அவளையே வெறுப்புடன் நோக்கியதையோ மானசா கவனிக்கவில்லை.

அவளுடைய கையிலிருந்த கதைப் புத்தகம் வெடுக்கென்று பறிக்கப்பட்டவுடன்தான், என்னவென்று பதறிப்போய் நிமிர்ந்து பார்த்தாள் மானசா.... தன் கனவுலகம் நொடியில் சிதைக்கப் பட்டது புரிந்து வேகமாக எழுந்தாள்.

## 4

மானசா பதட்டத்துடன் ஊஞ்சலிலிருந்து இறங்கி நின்றபோது, எதிரே வெறுப்பை உமிழும் விழிகளுடன் சித்தார்த் நிற்கவும், மிரண்டு விழித்தவளுக்கு ஒருகணம் தான் செய்த தவறு என்னவென்றே விளங்கவில்லை.

கடித்த பற்களிடையே, ''இது மாதிரி என் எதிரே உக்காந்து கதை படிக்கிற மாதிரி நடிச்சி, என்னை 'இம்ப்ரெஸ்' பண்ணிடலாம்னு நினைக்கிறியா?'' சீறினான் அவன்.

ஆனால், மலங்க விழித்தபடி - காயம் பட்ட சிறு குழந்தைபோல் நின்ற அவளுடைய தோற்றம் அவன் மனதை என்ன செய்ததோ, ''சே!'' என்றபடி அந்தப் புத்தகத்தை ஊஞ்சலில் போட்டுவிட்டு விரைந்து சென்று விட்டான்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை! தான் புத்தகம் படித்தால் இவனுக்கென்ன....? தவிப்பானது மனது!

ஏன் எப்போதுமே தன் மீது வார்த்தைகளில் நெருப்பள்ளி வீசுகிறான்? தான் என்ன செய்தாலும் அவனுக்குத் தவறாகவே தெரிவது ஏனென்று அவளுக்கு விளங்கவில்லை.

எக்காரணம் கொண்டும் இனிமேல் இவன் முன்னால் வரக்கூடாது என்ற வைராக்யத்துடன் உள்ளே சென்றபோது, அப்போது தான் சுதா தூக்கம் கலைந்து எழுந்து அமர்ந்திருந்தாள்.

மானசாவின் முகத்தைப் படித்துவிட்டு, ''என்னடி மானு? ரொம்பக் கோபமா இருக்கே?'' என்றாள்.

மானசாவும், ''ம்ப்ச்.... ஒண்ணுமில்லைடி!'' - கூறிவிட்டுப் புத்தகத்தில் ஆழ்ந்தபோது, சுமேதனின் எழுத்து, அவளை அமைதிப் படுத்தியது.

ஆனால், சுதாவின் மனதில், அவளின் முகம் யோசனையை வரவழைத்தது. ஏதோ நடந்திருப்பதை, மானுவின் சிவந்த முகமும் விழிகளும் கண்ணாடியாய் அறிவித்தன.

அன்றிரவு, மானசாவுக்குள்ளும் ஒரு யோசனை உதித்தது. தன்னுடைய பெயரும் முகவரியும் எழுதாமல் தன்னுடைய புதிய அனுபவங்களை அந்த ஆசிரியருக்கு எழுதி, சித்தார்த்தைப் பற்றிய தன் உணர்வுகள் சரியா என்று யோசனை கேட்கலாமென்று தோன்றியது.

மானசா, உடனே எழுத ஆரம்பித்தாள். தாங்கள் அனைவரும் ஒரு மலைவாசஸ்தலத்துக்கு சென்றிருப்பதையும், அங்கு நடந்த சுவாரசியமான நிகழ்வுகளைப் பற்றியும் முதலில் எழுதினாள்.

பிறகு அந்த மலைக் காட்டில், ஒரு உயரமான மனிதனைச் சந்தித்ததையும், அவன் அந்தப் பெரிய ஐயர்வின் விட்டில் இருப்பதைப் பற்றியும் எழுத்துக்களாய் வடித்தாள்.

முதன் முதலாக ஒரு ஆண் தன்னை சலனப் படுத்தியதையும் எழுதியவள், கடிதத்தை முடித்து பதிப்பகத்தின் விலாசத்தை உறை மேல் எழுதி, தனியே எடுத்து வைத்தாள்.

எழுத்தாளரின் பெயரில், பதிப்பகத்துக்குச் செல்லும் கடிதங்களை, அவர்கள் அவருக்கு அனுப்பி விடுவார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

தன் மனச்சுமைகளை அவனிடம் இறக்கி வைக்கப் போகிறோம் என்ற திருப்தியில் மனம் கண்மூட, உறக்கம் உடனே வந்தது, மானசாவுக்கு!

மறுநாள் காலையில், இருவரும் சிறிது தூரம் நடந்து வரலாம் என்று

எண்ணிக் கிளம்பினர்.

ராஜேசுவரி அம்மா அவர்களிடம் ''மானசா! பின்னாடி பெரிய சோலை இருக்கேம்மா! அங்கே போய் சுத்திப் பாத்துட்டு வாங்களேன்'' என்றார்.

''சோலைன்னா என்னம்மா?'' என்றாள் சுதா வியப்புடன்.

''தைலமரக் காட்டைத்தாம்மா இங்கே அப்படிச் சொல்றது வழக்கம்! பின்பக்கச் சரிவுல, பெரிய சோலை இருக்கு. அதுக்குப் பின்னாடி பெரிய ஏரி இருக்கும். நம்ம சின்னையனை அழைச்சிட்டு போனா, அவன் சுத்திக்காட்டுவான். அங்க நிறைய பொண்ணுங்க, சுள்ளி பொறுக்கிட்டு இருப்பாங்க.....அதனால் பயமில்லை!'' என்றார் புன்னகையுடன்!

சின்னையனின் துணையுடன், பின்புறமிருந்த சோலைக்குள் நுழைந்தபோது, அங்கு மெலிதாய்க் கேட்ட பறவைகளின் சலசலப்பும், ஊசியிலை மரங்களின் 'உஸ்' ஸென்ற சப்தமும் மனதிற்கு பெரிதும் இதம் தந்தன!

பின்னால் இருந்த ஏரிக்குச் சென்றபோது, காட்டுக்குள் மனிதரின் பார்வையிலிருந்து ரகசியமாய் மறைந்து ஒளிந்திருக்கும் ஏரிதான் எவ்வளவு அழகு என்று தோன்றியது மானசாவுக்கு!

அந்த இடமே அமைதியாய் - அப்போதுதான் உறக்கம் கலைந்துஎழுந்தாற் போலிருந்தது.

ஏரிக்கரையோரம் சிறிது நேரம் அமர்ந்து ரசித்துவிட்டுத் திரும்பி வரும்போது, எதிரே சித்தார்த் வந்து கொண்டிருந்தான்.

மானசாவுக்கு, அவனைக் கண்டதுமே ஏனோ மனம் தடுமாறியது. அவன் வந்த வழியை விட்டு விலகி வேறு பாதைக்குச் சென்று, அந்த வழியாகச் செல்லத் தொடங்கினாள் மானசா.

சின்னையனும் சுதாவும் மட்டும் அவன் வரும் வழியிலேயே சென்றனர். சுதா வியப்புடன் அவளை நோக்கிவிட்டு, அருகில் வந்தாள்.

''என்ன மானு தனியாப் போறே....? ஏன்டி, நேத்திலேருந்து என்னவோ போல இருக்கே....? வீட்டு ஞாபகம் வந்துடுச்சா?'' - கரிசனம் தெரிந்தது அவள் குரலில்.

மானசாவும் 'ஆமாம்' என்பது போலத் தலை அசைத்து விட்டு முன்னே சென்றாள்.

ஏனோ, சித்தார்த் எங்கே போகிறானென்று உடனே திரும்பிப் பார்க்கத் தோன்றியது அவளுக்கு!

அவள் மெதுவாகத் திரும்பிப் பார்த்த அதே நேரம் அவன் பார்வையும் அவள் மேல் இருந்தது. அங்கு விழிகள் வாள்களாய் மாற, உடனே போர்க்களமானது மானசாவின் மனது!

ஒரு கணம் மனம் பதறிவிடத் திரும்பி வேகமாக முன்னே செல்லத் தொடங்கினாள் அவள். அதுவரை இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த மனது, இப்போது அமைதி இன்றி அலை பாய்ந்தது.



அன்று மாலையில், சிவசுப்ரமணியம் அவளிடம் 'செல்'லில் பேசினார்.

''மானசா! எப்படி இருக்கே? சுதா நல்லா இருக்காளா? நாளைக்கு எப்படியும் பாதையை சரி செஞ்சிடுவாங்கன்னு சொல்றாங்க. நான், நாளைக்கு சாயந்தரமா அங்கே வந்து உங்களை அழைக்க வரேன். சுதாகிட்ட சொல்லு! பெரியவர்கிட்டே நான் பேசிடறேன்'' என்று கூறிவிட்டு வைத்தார்.

கூண்டை விட்டு விடுதலையாகப் போகும் பறவையாய் - மனதில் ஒரு பரவசம் வந்தது.

சித்தார்த்தின் குற்றம் சாட்டுகின்ற பார்வையிலிருந்து நாளை முதல் விடுதலை என்ற உணர்வு, மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் இணைத்துத் தந்தன.

மறுநாள் காலையில் மானசாவும், சுதாவும் பக்கத்திலிருந்த சிறிய மலைக்குன்றின் மேல் ஏறிச் சென்று கொண்டிருந்தனர்.

அந்தக் குன்றின் உச்சிக்குச் சென்றபோது, எங்கிருந்தோ வந்த ஒரு நாய்க்குட்டியின் தீனமான அலறல், இருவரின் மனதையும் உலுக்கியது.

மானசா முன்னே சென்று விளிம்பில் நின்று எட்டிப் பார்த்தபோது, ஒரு சரிவான பள்ளத்தில், சிறு நாய்க்குட்டி ஒன்று விழுந்து தவிப்பதைக் கண்டாள்.

உடனே பதறிப்போய் சுதாவிடம் திரும்பி, ''நான் மெதுவா இறங்கி, அந்த நாய்க்குட்டியை எடுத்துத் தரேன். வாங்கிக்கிறியாடி சுதா?'' என்றாள் ஆர்வமாக!

''வேண்டாம்டி மானு.... சொன்னாக் கேளு! அப்புறம், நீ எங்கயாவது கால் தவறிக் கீழே விழுந்திட்டேன்னா, உன்னை யாரு காப்பாத்தறது? நான் விட மாட்டேன்'' என்று கூறி, அவள் கையைப் பிடித்து இழுத்துத் தடுத்தாள் சுதா.

அப்போதுதான், அங்கு 'வாக்கிங்' வந்து கொண்டிருந்த சித்தார்த் இதைக் கண்டான். அந்த இடம்தான், ராமு தன் உயிர்மூச்சை நிறுத்திய இடம்!

அவனைக் கண்டதுமே சுதா, ''சார்! ஒரு நிமிஷம் இங்க வாங்களேன்! இவ சொன்னா கேக்க மாட்டேங்கறா! கொஞ்சம் இங்க வந்து எனக்கு உதவி பண்ண முடியுமா? நீங்களாவது வந்து காப்பாத்துங்களேன்'' என்றாள் உரத்த குரலில்.

சித்தார்த்தின் கண்களில் கோப மின்னல் ஒன்று கீற்றாய் வந்து போனது.

அதற்குள் நாய்க்குட்டியின் சப்தம் நின்று போனதால் பயந்து போன மானசா, சுதாவிடமிருந்து கையை விடுவித்துக் கொண்டு வேகமாக விளிம்பிற்குச் சென்று எட்டிப் பார்த்தாள்.

அப்படி அவள் எட்டிப் பார்க்கும் போதே, மானசாவின் கை வேகமாகச் சுண்டி இழுக்கப்பட்டது. வேகமாக ஓடி வந்ததால், சீறலான மூச்சுடன் அங்கு நின்றிருந்தான் சித்தார்த்.

கோபமான குரலில், ''எத்தனை தடவை சொன்னாலும், உனக்கு அறிவில்லை....? அதான், உன்னோட ப்ரெண்ட் இவ்வளவு சொல்றா இல்லை....! என்ன.... காதல் தோல்வியா? தற்கொலை பண்ணிக்கணும்னா,

வேறே எங்கேயாவது போ! எங்க இடத்துலே வேணாம்! ஆச்சரியமா இருக்கு.... உங்களுக்கெல்லாம், ஆண்களை மேலே அனுப்பித்தானே பழக்கம்?'' படபடவெனப் பொரிந்தான்.

மானசாவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ஆனால் புரிந்தவுடன் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

அவள் கலகலவென்று அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பிக்க, கூடவே கன்னமும் அழகாகக் குழிந்து, தானும் சிரித்தது.

சுதாவுக்கும் சிரிப்பு வந்தாலும், அதை அடக்கியபடி - ''சார்! அவ, தற்கொலை பண்ணிக்கப் போகலை. நான் அவளைக் காப்பாத்தவும் உங்களைக் கூப்பிடலை. அந்தப் பள்ளத்துல ஒரு நாய்குட்டி விழுந்திருக்கு! அதை, இறங்கிப் போய் காப்பாத்துவேன்னு மானு ஒரே பிடிவாதம் பிடிச்சா! அதுக்காகத்தான் உங்களைக் கூப்பிட்டேன்'' என்றாள்.

சித்தார்த்தின் முகம் உடனே கறுத்து இறுகிப் போனதைக் கண்ட மானசாவின் புன்னகை, உதடுகளிலேயே உறைந்தது.

முன்னால் சென்று எட்டிப் பார்த்தவன், அவனே மெதுவாக இறங்கிச் சென்று, அந்த நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து, மானசாவிடம் கொடுத்தான்.

அவள், நடுங்கிக் கொண்டிருந்த அந்த நாய்க்குட்டியைப் பாசத்துடன் தடவிக் கொடுத்துவிட்டு, மார்போடு அணைத்துக் கொண்டதைப் பார்க்கும் போது, சித்தார்த்தின் கண்களில் புரியாத ஒரு **பா**வம்!

ராமுவின் நினைவுகளுடன் அவன் வேகமாகத் திரும்பிச் சென்றபோது, மானசாவின் கன்னம் குழிந்த சிரிப்பு, ஒரு சிற்றோடையின் சலசலப்பாய் வெகு நேரம் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

வேகமாகப் போகும் அவனையே பார்த்துக் கொண்டிருந்த மான்சா, இவன் என்றாவது ஒரு நாள், தன்னைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்வானா என்ற ஏக்கத்துடன் - தவிப்பாய் முன்னே நடக்க ஆரம்பித்தாள்.

அவர்களிருவரையும் கவனித்துக் கொண்டிருந்த சுதாவின் விழிகளில், ஒரு சுவாரசியம் குடி வந்தது.... கூடவே் புதுக்கவலையும் தொற்றிக் கொண்டது!

**வீ**ட்டுக்கு வந்தபோது, தொடுத்து வைத்த மலர்ச்சரத்துடன் அவர்களை ராஜேசுவரி வரவேற்றார்.

''எங்க போயிட்டீங்க ரெண்டு பேரும்? உங்களுக்காகப் பூத் தொடுக்க சொல்லியிருந்தேன்.... கொடுக்கலாம்னு பாத்தா, உங்களைக் காணோம்'' என்றபோது அவருக்கு, சுதா தான் பதில் கூறினாள்.

மானசாவின் மனதினுள், 'உங்க பையனோட பாஷையிலே - நான் தற்கொலை செஞ்சுக்கப் போயிருந்தேன்' என்று கூறினால், இவர் முகம் எப்படி மாறும் என்ற கற்பனையில், சிரிப்பு வந்தது.

மலை வாசம், அவள் அழகை இன்னும் அதிகரித்து, கன்னங்களில் செம்மை கூடி, முகம் பளிங்காய் பளபளத்தது.



ராஜேசுவரி அம்மாவுக்கு இருவருமே சமையல் அறையில் உதவி செய்து கொண்டிருந்தனர்.

அன்று, பெரியவர் தர்மலிங்கத்தின் நண்பருடைய குடும்பத்தினர் விருந்துக்கு வருவதாக இருந்தனர்.

பெரிதாக சமையல் ஒன்றும் தெரியாவிட்டாலும், மானுவும் சுதாவும் தங்களுக்குத் தெரிந்த உதவிகளைச் செய்தனர்.

சமையல் முடிந்தபிறகு, எல்லாவற்றையும் பீங்கான் பாத்திரங்களிலும் கண்ணாடிப் பாத்திரங்களிலும் எடுத்து வைத்தாள் சுதா.

வாசலில் வாயகன்ற பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீர் விட்டு, அதில் அழகான வண்ண மலர்களையும் மெழுகுவர்த்திகளையும் மிதக்கும்படி அலங்காரம் செய்து வைத்தாள் மானசா.

மதியம் விருந்துக்கு வந்த குடும்பத்தினரில், அவர்களுடைய வயதையொத்த - வசந்த் என்ற - ஒரு இளைஞனும் இருந்தான்.

சாப்பாடு முடிந்து அனைவரும் பேசிக் கொண்டிருந்தபோது, மரியாதை நிமித்தமாக சித்தார்த்தும் அவர்களிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

சென்னையில் படித்துக் கொண்டிருந்த வசந்த், மானசாவிடமும் சுதாவிடமுமே பேசிக் கொண்டிருந்தான். அவன் ஏதோ சொல்ல, சிரிப்புடன் மானசா திரும்பியபோது, சித்தார்த்தின் விழிகள் சீற்றத்துடன் அவளையே ஊடுருவின.

உடனே எழுந்து, வந்தவர்களிடம் விடைபெற்று மாடிக்குச் சென்று விட்டான் அவன்.

இது எதையுமே அறியாத அந்த வசந்த், அவர்களை சென்னையில் தங்கள் வீட்டுக்கு வரும்படி நட்புடன் ஒரு அழைப்பு விடுத்தான்.

அன்றைய பொழுது இனிமையாகச் சென்றாலும், மானசாவிடம் மட்டும் இனம் புரியாத ஒரு தவிப்பு தெரிந்தது.

**பி**றகு வசந்தும் அவனது குடும்பத்தினரும் விடை பெற்றுச் செல்ல - யாரை விட்டுத் தூதனுப்பி சித்தார்த்துக்கு தன் மனதைப் புரிய வைப்பது என்ற கேள்விக்குத்தான் அவளிடம் விடை இல்லை.

இருவரும், மாலையில் வேறு வழியில் உலாவச் சென்றபோது, எதிரில் பெரிய காவல் தெய்வத்தின் சிலையைப் பார்த்து வணங்கிய மானசாவின் உதடுகள், யோசனை கலந்த புன்னகையில் விரிந்தன.

''ஏய் மானு! என்ன உனக்குள்ளேயே சிரிச்சிக்கறே....?'' கேலியாகக் கேட்டாள் சுதா.

''இல்லை.... நம்ம காவல் தெய்வங்களோட கையில வெட்டருவாளும், வேல்கம்பும் இல்லாம, சமாதானப் புறாவைக் கொடுத்தா எப்படி இருக்கும்னு நினைச்சிப் பாத்தேன்.... அதான்!'' குறும்புடன் கூறினாள் மானசா.

''அப்படியா? அப்ப அது மறுநாளே கோவில் பூசாரி வீட்டுக் குழம்பிலே மிதக்கும்.... போதுமா? அதோட, எப்பப்பாரு.... கடுகடுன்னு முகத்தை வச்சிட்டு வேட்டைக்காரன் மாதிரி விடுவிடுன்னு போற சித்தார்த் இருக்கற ஊரில, இதுதான் சரி! சமாதானமாவது.... புறாவாவது! ஊஹூம்.... சான்சே இல்லை!'' என்ற சுதாவிடம் ''போடி!'' என்று செல்லமாய் சிணுங்கினாள் மானசா.

## 5

மறுநாளே மலைப்பாதை சரியாகிவிட, அன்று மாலை சிவசுப்ரமணியம் ஜீப்பை எடுத்துக் கொண்டு, இருவரையும் அழைத்துச் செல்ல வந்துவிட்டார்.

அவரை வரவேற்று அமரச் செய்த ராஜேசுவரி, காபி எடுத்து வந்து கொடுத்து விட்டு, தன் கணவரிடம் 'சொல்லுங்கள்' என்பது போல - கண்களாலேயே ஜாடை செய்தார்.

தர்மலிங்கமும், 'சரி' என்பது போல் தலை அசைத்துவிட்டு, சிவசுப்ரமணியத்திடம் திரும்பினார்.

''சிவசு! இந்தப் பெண்கள் இங்கேயே இருக்கட்டுமே.... இன்னும் பத்து நாள் தானே! ராஜி ரொம்ப ஆசைப் படறா.... இங்கேயும், அவளுக்குத் துணையா பொண்ணுங்க யாருமில்லையா? அதனாலே, ரெண்டு பேரும் இங்கேருந்தே போயிட்டு வரட்டுமேங்கிறா! காலையிலே, நானே காரில அனுப்பிடறேன். சாயந்தரமா, நீ ஜீப்பில திருப்பி அனுப்பிடு'' என்றார்.

சிறிது நேரம் யோசித்த சிவசுப்ரமணியத்தைப் பார்த்தவர் ''இல்லே.... நீங்க எல்லாருமே, இங்க வந்து தங்கினாலும், எங்களுக்கு சந்தோஷம் தான். மாடியில், நிறைய அறைங்க இருக்கு!'' புன்னகையுடன் கூறினார்.

சிவசுப்ரமணியம் தர்மசங்கடத்துடன் மானசாவையும், சுதாவையும் பார்த்தார்.

உடனே, ''அவங்க சொல்றாமாதிரி நாங்க இங்கேயே இருக்கோம் சார். எங்களுக்கும் இங்கே நல்லாப் பழகிடுச்சி! அம்மா, எங்களைப் பொண்ணு மாதிரிப் பாத்துக்கறாங்க. வீட்டு நினைப்பே எங்களுக்கு வராத மாதிரி, கவனிச்சிக்கறாங்க. நாங்க இங்கேருந்தே, வரோம் சார்'' என்றாள் சுதா ஆர்வமாய்.

''சரிம்மா! தர்மலிங்கம் சார்.... அவங்களே விருப்பப்படறாங்க. அவங்க இங்கேயே இருக்கட்டும். நாளைக்குக் காலையில், எட்டு மணிக்கெல்லாம் வரவேண்டி இருக்கும். நான் ஜீப்பை அனுப்பிடறேன்'' என்றார்.

''வேணாம் சிவசு! நம்ம டிரைவர், காலையிலேயே வந்துடுவான். நான் அவங்களைக் காரிலேயே அனுப்பிடறேன். வீணா எதுக்கு நீங்க அனுப்பறீங்க?'' என்று கூறிவிட்டுப் பிறகு, பொதுவாகப் பேச ஆரம்பித்தார்.



மானசா, சுதாவின் காதருகில் குனிந்தாள். ''ஏன்டி இப்படிக் கவுத்திட்டே? நானே, எப்படா இங்கேயிருந்து கிளம்பலாம்னு பாத்துட்டு இருக்கேன். நீ என்ன திடீர்னு இந்த மாதிரி சொல்லிட்டே....?'' என்றாள் முணுமுணுப்பாக.

''உண்மையாவா....? அது சரி! நீதான் அழுத்தக்காரியாச்சே.... அங்கே இருந்தா, வீட்டு ஞாபகம் வருதுடி.... ரொம்ப! இங்கேன்னா, நிம்மதியா இருக்கலாம். அன்பா இருக்கற ராஜேசுவரி அம்மா.... நல்ல வீட்டு சாப்பாடு, அப்புறம்.... அதை விடு! நாம இங்கேதானே இருக்கப் போறோம். பாக்கலாம்.''

''சரியான சாப்பாட்டு ராமிடி நீ! அதோட, சரியான வீட்டுப் பறவை!'' செல்லமாகக் கடிந்தாள் மானசா.

காபி, டிபன் சாப்பிட்டுவிட்டு ஆசிரியர் விடைபெற்றுச் சென்ற பிறகு, இருவரும் அதுவரை தாங்களிருவரும் சேகரித்த குறிப்புகளை, தனியாக வரிசைப்படுத்தி எழுதி வைத்தனர்.

அன்றிரவு சுதா உறங்கிய பிறகு, எழுத்தாளருக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினாள் மானசா.

முதலில் அவருடைய எழுத்தைப் பாராட்டி விட்டு, பிறகு சித்தார்த்தைப் பற்றி எழுத ஆரம்பித்தாள்.

தான் இதுவரை சந்தித்த ஆண்களிலேயே, அந்த சித்தார்த் மட்டும் வித்தியாசமானவனாக இருப்பதும், இயல்பாகவே அழகிய பெண்களைக் கண்டதும் ஆண்களின் கண்களில் தெரியும் சிறு ஆவல்கூட அவனிடம் இல்லாததைப் பற்றியும் எழுதினாள்.

அதுவே தன்னை பாதித்ததையும், அந்தப் பாராமுகமும் கர்வமுமே தனக்குப் பிடித்திருந்ததையும், தான் என்ன செய்தாலும் அவன் தன்னைத் தவறாகவே புரிந்து கொள்வதையும், இதழ்களில் நெளிந்த குறும்புச் சிரிப்புடன் மெதுவாக வார்த்தைகளில் வடித்தாள்.

அவனும் ஒரு எழுத்தாளன் என்பதையும், மனிதர்களை சரியாக கணிக்கத் தெரியாதவன் எப்படிக் கதை எழுதுகிறானோ என்று தோன்றுவதாகவும் எழுதி முடித்து, எடுத்து வைத்தாள்.

மறுநாள் காலையில் இருவரும் விருந்தினர் இல்லத்துக்குச் சென்றபோது, தான் எழுதிய கடிதங்களை திலீப்பிடம் கொடுத்துத் தபாலில் சேர்க்கும்படிக் கூறினாள் மானசா.

அன்று அவர்கள், மலைவாழ் மக்களின் இருப்பிடத்துக்குச் சென்றபோது, அவர்களின் வாழ்க்கை முறைகளை வரிசைப் படுத்தி, ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்தார், சிவசுப்ரமணியம்.

பிறப்பு - அது சம்பந்தமான விஷயங்கள்,.... பொதுவான வாழ்க்கை

முறை.... திருமணம் - அது தொடர்பான சடங்குகள்.... அவர்கள் செய்யும் தொழில்கள்.... பெண்களின் வாழ்க்கை முறை.... முதியவர்கள் இறப்பு - அது பற்றிய கருத்துகள் என்று, ஆறு பிரிவாகப் பிரித்து, ஒவ்வொருவரிடமும் ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டது.

மானசாவுக்கு, 'திருமணம்.... அதன் தொடர்பான சடங்குக'ளும், சுதாவுக்கு, 'பெண்ணின் பொதுவான வாழ்க்கை முறை'யும் வந்தது.

ஆறு பேரும், தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் விசாரிக்க, முதியவர்களிடமிருந்து ஆச்சர்யமான விபரங்களும் சுவாரசியமான பதில்களும் கிடைத்தன.

அனைவரும் ஆர்வத்துடன் எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

ம்ானசாவுக்கு, அவர்களுடைய வாழ்க்கை முறையே வித்யாசமாகத் தெரிய, திருமணச் சடங்குகளும் வியப்பூட்டுவதாகவே இருந்தன.

சுதாவும் மானசாவும், ஆர்வத்துடன் வயதானவர்களிடமும் பெண்களிடமும் பேசிக் கொண்டிருந்தனர்.

பெண்களில் பலர், தர்மலிங்கம் ஐயாவுடைய காபித் தோட்டத்திலும் பழப் பண்ணையிலும் காய்கறித் தோட்டத்திலும் வேலை செய்வதாகக் கூறினர்.

அன்று அவர்களுக்கு, விநோதமான தகவல்களும் வித்தியாசமான வாழ்க்கை முறையும் அறிமுகப்படுத்தப் பட்டன.

அந்த வாரமே ஒரு திருமணமும் இருந்ததால், அனைவரும் அந்த வேலைகளில் மும்முரமாக இருந்தனர்.

அன்று வெகு நேரமாகி விட்டதால், அவர்களுக்கு, வேகவைத்த மரவள்ளிக் கிழங்கும், தேன், தினைமாவு கலந்த இனிப்பும், புதுவிதமான உணவு வகைகளும் பரிமாறப்பட்டன.

எல்லாமே வித்தியாசமான சுவையுடன், நன்றாக இருந்தன. அனைவரும் ரசித்துச் சாப்பிட்டனர்.

மாலையில் வீட்டுக்கு வந்தபோது மானசாவும் சுதாவும் வெகுவாகச் சோர்ந்திருந்தனர்.

**அ**ன்றிலிருந்து இரண்டு நாட்கள், தொடர்ந்து லேசான மழைபெய்து கொண்டிருந்தது. அந்த ம்ழையிலும் விடாமல் சென்று, தங்களுடைய தகவல் சேகரிப்புப் பணியைத் தொடர்ந்தனர்.

ஏனோ அந்த இரண்டு நாட்களுமே, சித்தார்த் மானசாவின் கண்களில் படவே இல்லை.

'அப்பாடா....! அவனுடைய குத்தல் பேச்சுகளிலிருந்தும் கூர்மையாக பார்வையிலிருந்தும் விடுதலை' என்று மனம் நினைத்தாலும், ஏனோ அவனைப் பார்க்க வேண்டும் போல், மனதின் ஓரம் சிறு தவிப்பும் படர்ந்தது.

அவனுடைய ஒதுக்கமும், கம்பீரமும், பாராமுகமுமே தன்னை



ஈர்க்கிறதோ என்ற எண்ணமே, புதிராய் மனதுக்குள் நிறைந்தது.

மறுநாள் காலையில், அனைவரும் மலைவாழ் மக்களி இருப்பிடத்துக்குச் சென்று விட்டு, மதியமே திரும்பி விட்டனர்.

பிறகும் பொழுது போகாததால், சுற்றியுள்ள இடங்களைப் பார்த் வரலாமென்று கிளம்பிச் சென்றனர்.

தர்மலிங்கத்தின் வீட்டிற்குப் பின்புறம் இருக்கும் சோலையையும் ஏரியையும் பற்றி, மானசாவும் சுதாவும் கூறி இருந்ததால், அனைவரும் அங்கு சென்று ஏரிக்கரையோரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த இடத்தின் அழகும், எங்கிருந்தோ வந்த குயிலின் இனிய குரலோசையும் கலந்து ரம்யமாக இருந்த அந்த சூழ்நிலை, அனைவருக்குமே மிகவும் பிடித்திருந்தது. ஏரியின் அழகும் மனதைக் கொள்ளை கொண்டது.

விக்ரம் நன்றாகப் பாடுவான் என்பதால், சுதா அவனை ஒரு பாட்டு பாடச் சொல்லிக் கேட்க அவனும் உடனே பாட ஆரம்பித்தான்.

''நான் ஏரிக்கரை மேலிருந்து, எட்டுத்திசை பாத்திருந்து, ஏந்திழைக்கு காத்திருந்தேன் காணலை....!'' என்று பாடி முடித்தபோது, அவனுடைய குரலில் அந்தப் பாடல், மென்மையாய் அனைவரின் காதுகளையும் வருடிச் சென்றது.

அவன் பாடி முடித்ததும், மானசா மகிழ்ச்சியுடன் கை தட்டினாள்.

உடனே, ''நீ எவ்வளவு நேரம் பாடினாலும், அவ வரமாட்டா.... இருந்தாதானே, வரதுக்கு? யாரு விக்ரம் அது? 'ஏந்திழை'.... பெயரேபாட்டி மாதிரி இருக்கு!'' என்றாள் சுதா கிண்டலாக.

''சும்மா இருடி சுதா!'' மானசா, மென் குரலில் அவளைக் கண்டித்தாள்.

பிறகு பரணியும், வாசுவும் உற்சாகமாய் பாடிக்கொண்டே ஆட, அங்கே ஒரே கொண்டாட்டமும் கும்மாளமுமாக இருந்தது.

சித்தார்த், அப்போதுதான் அந்தப் பக்கம் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவர்களைப் பார்த்ததும், ஒரு மரத்தின் அருகில் அங்கேயே நின்று விட்டவனுக்குள், பழைய ஞாபகங்களின் அணிவகுப்பு!

''மானு! இப்ப நீ உனக்கு என்ன எல்லாம் பிடிக்கும் அப்படிங்கறதை, கவிதையா சொல்லப் போறே!'' என்றான் திலீப்.

''ஏய் திலிப்! அந்த வரிசையில, நிச்சயமா நீ இருக்க மாட்டே!'' பரணியின் குரல் கிண்டலாக ஒலித்தது.

''அது எனக்கும் தெரியும்! நட்பைக் கொச்சைப்படுத்தாதே! ஒரு ஆர்வத்திலே கேட்டா, அது கூடத் தப்பா....? நீ சொல்லு, மானசா!'' என்றான் திலீப்.

சிறிது நேரம் யோசித்த மானசா, சிரித்துக் கொண்டே, ''நிறையப் பிடிக்கும்.... எதைச் சொல்றது.... எதை விடறது....?'' - மென்மையாகக் கேட்டாள்.

''எல்லாத்தையும் ஒவ்வொண்ணா சொல்லு.... நாங்க கேக்கிறோம்'' என்றனர், அனைவரும் ஒரே குரலில்!

''ம்.... இரவும் பகலும் கை குலுக்கி விடை சொல்ற அந்த அழகான விடியல்.... யாரோ துரத்தற மாதிரி, வேகமா வந்து பூமியில் சரணடையற மழை.... தனக்குள்ளே விதைகளையும் கனிகளையும் ரகசியமா ஒளிச்சி வச்சிருக்கற மலர்கள்.... அந்த மலர்களின் காதுகள்லே காதல் வேதம் பாடுற வண்ணத்துப் பூச்சிகள்.... அடர்ந்த மலைக் காட்டுக்குள்ளே சிரித்துச் சிதறும் வெண்மையான அருவி.... இப்படி நிறைய.... இப்ப இது போதுமே!'' - நிறுத்தியவளின் முகத்தில், மெல்லிய கூச்சம் தெரிந்தது.

''ப்ளீஸ் மானசா.... அப்புறம்.... இன்னும் சொல்லேன்!'' தூண்டினான் விக்ரம்.

சிணுங்கினாலும், ''ம்.... மனசை மயிலறகால வருடற மாதிரி உணர்வைத் தர்ற மென்மையான இசை.... என் தனிமையைத் தகர்க்கணும்னே, தளிர்நடை போட்டு வர்ற கவிதைகள்,.... குளிருக்கு இதமா, மேகத்தைப் போர்வையா அணிஞ்சிருக்கற மலைகள்.... மந்திரச் சிரிப்பால நம்ம மனசைக் கொள்ளையடிக்கற மழலைகள்.... அப்புறம் - தன்னோட அற்புதப் படைப்புகளால என்னைக் கவர்ந்த எழுத்தாளர் 'சுமேதன்'!'' என்று முடித்தாள் மானசா - சிறு முறுவலுடன்.

அனைவரும் உற்சாகமாகக் கைதட்டிப் பாராட்ட, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சித்தார்த்தின் கண்களில் ஒரு வித கூர்மையும் ஆச்சர்யமும் போட்டி போட்டுக் கொண்டு தெரிந்தன....!

''மானசா.... உனக்கு, 'கவிதா'ன்னு பேரு வச்சிருக்கலாம்.... உனக்குப் பிடிச்ச விஷயங்களை நீ ரசனையோட சொல்றப்போ, ரொம்ப இயல்பா இருந்தது தெரியுமா?.... நீ உன் அபிமான எழுத்தாளருக்குக் கடிதம் போடறியே? அவர் பதில் போடுவாரா?'' - கேட்ட திலீப்பின் குரலில் ஆர்வம் - தெரிந்தது.

உடனே, ''அது ஒரு வெட்டிவேலை திலீப்! சொன்னாக் கேக்காம, இவ அதையே தொடர்ந்து செஞ்சிட்டு இருக்கா. என்ன செய்யறது?'' சுதா சலிப்புடன் கூறினாள்.

''சுதா! நீ சும்மா இருடி.... 'சுமேதன்' எவ்வளவு பெரிய எழுத்தாளர் தெரியுமா? ராத்திரியிலே தூக்கம் கலைஞ்சு எழுந்தாலும் - அந்த நேரத்துலயும் மனசை விதிர்க்கச் செய்யற எழுத்து தெரியுமா, அவருது! ஒவ்வொரு கதாபாத்திரமும் அவ்வளவு எதார்த்தமா வடிவமைக்கப் பட்டிருக்கறதும்.... அந்த விரக்தி இழையோடுற ஒரு நடையும்....! போடி.... உனக்கு அதெல்லாம் புரியாது'' என்றாள் மானசா பெருமையுடன்.

அதன் பிறகு சித்தார்த், சப்தமில்லாமல் அந்த இடத்தை விட்டுச் சென்றதை அவர்கள் யாருமே அறியவில்லை.

வெகு நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, மாலை மங்கி இருட்டத் தொடங்கிய பிறகுதான், அனைவருமே அங்கிருந்து கிளம்பினர்.

மானசாவையும் சுதாவையும் தர்மலிங்கம் ஐயாவின் விட்டில் இறக்கி விட்டுவிட்டு, மற்றவர்கள் ஜீப்பில் கிளம்பிச் சென்றனர்.



அன்றிரவு மானசா சுமேதனின் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டு, அவருக்கு ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

முதலில் தான்படித்த கதையைப் பாராட்டியவள், பிறகு சித்தார்த்தைப் பற்றியும், அவனுடைய நண்பன் ராமுவின் மரணத்தைப் பற்றியும் எழுதினாள். அதை அறிந்தபோது தன் மனம் உடைந்து போனதையும், ஒரு நண்பனின் மரணம், அவனை எவ்வளவு காயப்படுத்தி இருக்கும் என்பதைத் தான் உணர்ந்து தவித்ததையும் எழுதினாள்.

அவனுடைய மனக் காயத்தை எப்படியாவது ஆற்ற வேண்டும் என்ற வேகம் தன்னுள் எழுந்ததைப் பற்றியும் உணர்ச்சி பூர்வமாக விவரித்துவிட்டுப் பிறகு கடிதத்தை முடித்தாள்.

விளக்கை அணைத்துவிட்டு படுத்தபோது, அன்று மாலை ஆஃபிஸிலிருந்து அப்பா தன்னுடன் பேசியது ஞாபகம் வர, அந்தப் பாச நினைவுகளின் இனிய பதிவுகளுடன் அப்படியே கண்ணயர்ந்தாள்.

காலையில் எழுந்த உடனே, அலமேலுவும் 'செல்'லில் பேசினார்.

''மானு! எப்படிடா இருக்கே? நீ ஊருக்குப் போய் இப்பவே பத்து நாளாகப் போகுது. இன்னும் ஒரு வாரத்துக்கு மேல ஆகும்னு அப்பாகிட்ட சொன்னியாமே....? சீக்கிரம் வந்துடும்மா.... நீ இல்லாமே எனக்கும் அப்பாவுக்கும் ரொம்பக் கஷ்டமா இருக்கு!'' ஏக்கத்துடன் கூறினார்.

''அம்மா! இங்கே மண் சரிஞ்சதாலே, எங்க வேலை எல்லாம் மூணு நாள் தள்ளிப்போயிடுச்சி! அதனால கொஞ்சம் தாமதமாகும் போலத் தெரியுது.... சீக்கிரம் வந்துடுவேன். இங்கே தர்மலிங்கம் சார் வீட்டிலதான் இருக்கோம். ராஜேசுவரி அம்மா எங்களை ரொம்ப நல்லாப் பாத்துக்கறாங்க.... நீங்க கவலையே படாதீங்க!'' என்றவுடன்தான் அவர் சமாதானமானார்.

விடிந்து வெகு நேரமாகியும், அன்றும் வானம் மேக மூட்டமாய் இருட்டி இருக்க - கரு நீல வானம் சடசடவென மழையைப் பொழியத் தொடங்கியது.

மானசா, ஜன்னல் வழியே மழையை ரசித்துக் கொண்டு நின்றிருந்தாள். மனம் மிகவும் சலனப்பட்டிருந்தது.

சித்தார்த்தைப் பற்றி நினைத்த போது, ஏதோ இனம் புரியாத ஒரு உணர்வு மனதில் பரவியது. அவன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்ற ஆராய்ச்சி, மனதில் மெல்ல அரும்பி, தளிர்களாய்த் துளிர்த்தது.

அன்று, மழை மிகவும் அதிகமாக இருந்ததால் காட்டுக்குள் போகவில்லை. மழையின் சாரலுக்கு இதமாக, சூடான தேநீரைப் பருகிக் கொண்டே சுதாவும் அவளும் பேசிக் கொண்டிந்தனர்.

திடீரென்று ''அந்த சித்தார்த்தைப் பத்தி நீ என்னடி நினைக்கிறே மானு?'' என்றாள் சுதா.

மனதில், ஏதோ ஒன்று தடம் புரள்வதைப் போலிருந்தது, மானசாவுக்கு! ''அவரைப் பத்தி நான் எதுக்கு நினைக்கணும்? அப்படியே நினைக்கறதுக்கும்தான் என்ன இருக்கு?'' என்றாள் விட்டேத்தியான

குரலில்.

சுதாவும், ''அவ்வளவுதானா? நான் என்னென்னவோ நினைச்சேன்! இதே பதிலை, நாம இந்த ஊரைவிட்டுப் போகும்போதும் நீ சொன்னா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என்றாள் குறும்புடன்.

மானசாவுக்குப் புதிதாய் மனதில் ஒரு பயம் வந்தது. தன்னையே ஏமாற்றிக் கொள்கிறோமோ என்ற எண்ணம் அவளை உறைய வைப்பதுபோல் இருந்தது....!

சிறுவயதில், மெழுகுவர்த்தி எரியும்போது உருகி வழியும் சிறு துளியைக் கையில் ஆர்வமாய் ஏந்தியதும், அது தரும் வலி கலந்த வேதனையில் மனம் ஈர்க்கப்பட்டதும், இன்று நடந்தது போல்....!

அது போலத்தான் காயப்படப் போகிறோம் என்று தெரிந்தும், தான் அவனிடம் ஈர்க்கப்படுகிறோமோ என்ற பயம் - உள்ளத்தில் படர்ந்து எரியும் மெழுகாய் உருகியது.

ஒவ்வொரு முறையும் அவனால் புறக்கணிக்கப் படும் மனது, ஆறுதல் தேடும்போது உடனே வீட்டு ஞாபகம் வருவதும், ஆனால் சிறுகுழந்தையாய் அவன் நினைவுகளை வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ள இதயம் மறுப்பதும் புரிந்தது.

ஆனால் 'சுமேத'னிடம் மட்டும் சித்தார்த்தைப் பற்றி எழுதுகிறோமே என்ற உணர்வும் அவ்வப்போது இடித்துரைத்தாலும், அவருக்கு எழுதிய பிறகு தன் மனம் எடையற்று லேசாகி இயல்பாவது புரிந்துவிட, ஏனோ அது தவறாகவே தோன்றவில்லை.

## 6

மறுநாள் காலையில் எழுந்தபோது, அன்று மலை வாழ் மக்களின் குடியிருப்பில் ஒரு திருமணம் நடைபெற இருப்பது மானசாவின் நினைவுக்கு வந்தது.

அவர்களுக்கும் அழைப்பு இருந்ததுடன், தர்மலிங்கம் ஐயாதான் எல்லாவற்றிற்கும் தலைமை ஏற்று நடத்த அழைக்கப்பட்டிருந்தார்.

சிவசுப்ரமணியம் ஒரு பரிசை முதலிலேயே வாங்கி வைத்திருக்க, காலையில் ராஜேசுவரி அம்மாவுடனேயே மானசாவும் சுதாவும் அங்கு சென்று விட்டனர்.

அனைவரும் ஆர்வத்துடன் திருமணச் சடங்குகளில் கலந்து கொள்ள, மானசாவும் சுதாவும் எல்லா சடங்குகளின் முறையையும் குறிப்பெடுத்துக் கொண்டனர்.

தர்மலிங்கத்துக்கு மாலை மரியாதை செய்தது போல் சித்தார்த்துக்கும் செய்வதற்கு வந்தபோது, அவன் உடனே மறுத்து விட்டான்.

இடையிடையே அவனையே கவனித்துக் கொண்டிருந்த மானசாவுக்கு,



அவன் தன் பக்கம் ஒரு முறை கூடப் பார்வையைத் திருப்பாதது ஏ பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

மலைவாழ் பெண்கள், குழுவாக நடனமாடினர். அவர்களுடை முறைப்படி, ஒருவர் தோளோடு ஒருவர் இணைந்து வட்டமாக ஆடி வித்யாசமாக இருந்தது.

வாசு, எல்லாவற்றையும் தன் கேமிராவில் பதித்துக் கொண்டிருந்தான்

அவர்கள் இருவரும் குறிப்பெடுப்பதைக் கண்ட ராஜேசுவரி, ''இங் வந்தும் ரெண்டு பேருக்கும் படிப்புதானா?'' என்றார் கிண்டலான குரலி கல்யாணம் இனிது நடந்து முடிந்தது.

அன்றிரவும், மானசா எழுத்தாளர் சுமேதனுக்கு ஒரு கடிதம் எழுதினா

அதில் சித்தார்த்தின் பாராமுகத்தைப் பற்றியும், அது தன்னை வெகுவாக பாதித்ததையும், இன்னும் அவன் தன்னைத் தவறாகவே நினைப்பதையு வருத்தத்துடன் விவரித்தாள்.

ஒரு நாய்க்குட்டியைக் காப்பாற்றச் சென்றபோது, தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக நினைத்து, அவன் தன்னைத் தடுத்ததையு சுவாரசியமாக எழுதிவிட்டு, அன்றைய கடிதத்தை முடித்தாள்.

கடிதத்தை எழுதி முடித்தும் ஏனோ உறக்கம் வரவில்லை. உணர்வுகள் கண்களுக்குள் உறக்கத்தை அறிமுகப்படுத்த மறுத்தன.

மனம் மிகவும் ஏகாந்தமாய் இருக்க, சித்தார்த்தின் நினைவுகள், நெஞ்சக் கூட்டிற்குள் நிரம்பி, மூச்சு முட்டச் செய்தன.

சிறிது நேரம் வெளிக் காற்றை சுவாசிக்க வேண்டுமென்று மனம் விரும்பியது.

மானசா, மெதுவாகத் தோட்டத்துக்கு வந்து புல்வெளியில் போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்து, நிமிர்ந்து பார்த்தாள்.

கருநீல வானமும், மரங்களின் மௌனமும், சில் வண்டின் ரீங்காரமும், பனிவாடைக் காற்றும், மனதை அமைதிப் படுத்தின.... சிலிர்ப்பாய் உள்ளே ஊடுருவின.

மாடியில், ஒரு அறையில் மட்டும் விளக்கெரிந்து கொண்டிருந்தது.

அறையிலிருந்து வெளியே விழுந்த வெளிச்சத்தில், இரவு உடையில் வரிவடிவமாக - பால்கனியில் தெரிந்த நிழலுருவம் சித்தார்த்துடையது என்று தெரிந்த போது, தன் நினைவுகளையே ஏணியாக்கி அவனைத் தொடத் தான் முயற்சிப்பது புரிந்தது.

உடனே மனம் குலுங்கிவிட, வேகமாக எழுந்து உள்ளே சென்று விட்டாள் அவள்.

உறக்கம் வராத நிமிடங்களில் எழுத்தாளர் சுமேதனைப் பற்றி நினைத்தபோது - தன் மனச் சுமைகளை இறக்கி வைக்கும் ஒரு சுமைதாங்கியெனத் தோன்ற, மெதுவாகக் கண்ணயர்ந்தாள் மானசா.

மானசாவுக்கு, மறுநாள் காலையில் 'செல்'லில் பேசிய அலமேலு,

ராஜேசுவரி அம்மாவிடம் பேசி நன்றிகூற வேண்டும் என்றார்.

அவரிடம் 'செல்'லைக் கொடுத்து விபரம் கூறிவிட்டுப் பின்புறம் சென்றபோது, அங்கிருந்த அந்த ஊஞ்சலைப் பார்த்த உடனே, சித்தார்த்தின் கடுமையான முகமும் கோபமும் நினைவில் மோதி முகத்தில் அறைந்தன.

திடீரென்று தன்னுடைய தோளை யாரோ தொடுவதை உணர்ந்து, கனவுகளிலிருந்து கலைந்து விழித்தால், எதிரே ராஜேசுவரி நின்றிருந்தார்.

''என்ன மானசா? அப்படி என்ன யோசனை? ரெண்டு தடவை கூப்பிட்டும் காதிலேயே விழாம ஊஞ்சலையே பாத்துகிட்டு நிக்கறே!''

''ஒண்ணுமில்லைம்மா.... ஏதோ பழைய ஞாபகம்! அம்மா கிட்டே பேசிட்டீங்களா?''

''ம்.... மானசா! நீ உங்க அம்மாகிட்டே என்ன சொல்லி வச்சிருக்கே என்னைப் பத்தி? எனக்கு ஒரே புகழாரமா சூட்டி, அவ்வளவு நன்றி சொல்றாங்க! அப்படி நாங்க என்ன பெரிசா செஞ்சிட்டோம்?'' என்றபோது, அவருடைய பெருந்தன்மை மானசாவை நெகிழச் செய்தது!

அன்புடன் அவரின் கைபற்றிய மானசா, ''நான் எதையுமே மிகைப்படுத்திச் சொல்லலைம்மா.... இங்கே, தினமும் நடக்கறதை சொல்லுவேன்! அம்மா, உங்க கூடப் பேசணும்னு ரொம்ப ஆசைப்பட்டாங்க.... அதான் குடுத்தேன்'' என்றாள்.

''நீ, உங்க அம்மா அப்பாவுக்கு ஒரே பொண்ணாமே.... ரொம்ப செல்லமாம்! பத்து வருஷம் கழிச்சி, தவமிருந்து பிறந்த குழந்தையாமே! ஏம்மா என்கிட்டே ஒண்ணுமே சொல்லலை?'' கேட்டார் அவர்.

பதிலேதும் கூறாமல் மென்மையாகப் புன்னகைத்த மானசாவின் கன்னம், அழகாகக் குழிந்தது.

திடீரென்று நினைவு வந்தாற் போல், ''அம்மா! இங்கே லெட்டர் எல்லாம் தபால்லே சேக்கறதுக்கு டவுனுக்கு யாராவது போவாங்களா? எனக்கு ஊருக்கு ஒரு லெட்டர் அனுப்பணும் -'' கேட்டாள் மானசா.

''நம்ப ராமையா, ரெண்டு மூணு நாளைக்கு ஒரு தடவை போய் சித்தார்த்துக்கு வர்ற லெட்டரெல்லாம் வாங்கிட்டு வருவாரு. அவர்கிட்டே கொடுத்தனுப்பலாம்மா....!''

''சரிம்மா'' என்றவள், தங்கள் அறைக்குச் சென்று தயாராகி வெளியே வந்தபோது, ராமையாவே அவளைத் தேடி வந்தார்.

''ஏதோ கடிதம், தபால்லே சேக்கணும்னு சொன்னீங்களாம்.... அம்மா சொன்னாங்க'' என்று கேட்க, அவரிடம் இரு கடிதங்களையும் கொடுத்து பத்திரமாக தபாலில் சேர்க்கும்படிக் கூறினாள் மானசா.

ராமையா தபால் நிலையத்துக்குச் சென்று அன்று வந்த கடிதங்களைப் பெற்றுக் கொண்டபோது, அதில் முக்கால்வாசிக் கடிதங்கள், சித்தார்த்துக்குத்தான் வந்திருந்தன.

மானசா கொடுத்த தபால்களைப் பெட்டியில் போடச் சென்ற போதுதான், அதன் மேல் எழுதி இருந்த பெயரையே அவர் கவனித்தார்.



முத்தான எழுத்தில், 'சுமேதன்' என்ற பெயரில், பதிப்பகத்தின் முகவரிக்கு எழுதப்பட்டிருந்தன, அந்தக் கடிதங்கள்!

தன் கையில் வைத்திருந்த கடிதங்களில் இரண்டும், அதே கையெழுத்துடன், ஒரே மாதிரி உறையில் சென்னைக்குச் சென்று திருப்பி அனுப்பப்பட்டிருந்ததும் அவர் கவனத்தைக் கவர்ந்தது.

அந்தக் கடிதங்களிரண்டையும் தபாலில் சேர்க்காமலேயே எடுத்து வந்தவர், நேரே சித்தார்த்திடம் சென்றார்.

''சின்னய்யா....! இன்னிக்கு ஒரு அதிசயம் நடந்துதுங்க! காலையிலே, நம்ப வீட்டில தங்கி இருக்கே மானசாங்கிற பொண்ணு - ரெண்டு லெட்டரை என்கிட்டே கொடுத்து, தபால்லே சேர்க்கச் சொல்லுச்சி. பாத்தா, அது உங்களுக்கு தான் எழுதி இருக்கு!

அதோட, இன்னும் ரெண்டு கடிதமும் சென்னையில் இருந்து இன்னிக்குத் தபால்லே வந்திருந்தது. அதனால, இதையும் தபால்லே சேக்காம, நேரே உங்ககிட்டயே தந்துடலாம்னு எடுத்துட்டு வந்துட்டேன். அந்தப் பொண்ணுக்கு, நீங்கதான் அந்தக் கதாசிரியர்னு தெரியாது போல இருக்கு'' என்றார் சிரிப்புடன்.

சித்தார்த், யோசனையாக அந்தக் கடிதங்களையே பார்த்தவன், ''ராமையா! நீங்க இந்த விஷயத்தை யார்கிட்டயும் சொல்ல வேணாம். முக்கியமா அந்தப் பொண்ணுகிட்டே சொல்லாதீங்க. அவ என் கதைகளோட ரசிகையா இருப்பான்னு நினைக்கிறேன்! நான்தான் அந்தக் கதாசிரியர்னு தெரிஞ்சா, அப்புறம் ரொம்பத் தொந்தரவாயிடும். எந்தக் காரணத்தைக் கொண்டும், நான்தான் சுமேதன்னு அவளுக்குத் தெரியக்கூடாது.... இனிமே அவ ஏதாவது கடிதம் போட்டா, அதை என்கிட்டயே கொண்டு வந்து கொடுத்திடுங்க'' என்றான் யோசனையுடன்.

''சரி சின்னய்யா'' என்று ராமையா சென்ற பிறகு, அவளுடைய முதல் கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான் அவன்.

வாசகர்களின் கடிதங்களுக்கு அவன் அதிகமாக பதில் எழுதுவதில்லை. அவள், தன் எழுத்துக்களைப் பற்றி என்னதான் எழுதி இருப்பாள் என்ற ஆர்வம் மனதில் எழப் படித்தபோது, அவனுடைய இரு புருவங்களும் யோசனையில் நெரிந்தன.

வரிசையாக ஒவ்வொரு கடிதமாகப் படித்தபோது, அவனுடைய முகத்தில் ஆச்சர்யம், அதிர்ச்சி, கோபம் என்று எல்லாம் கலந்த கலவையான உணர்ச்சிகள் வெளிப்பட, படித்து முடித்து நிமிர்ந்தவனின் முகத்தில் சிந்தனை வலைகள் பின்னலிட்டன.

இந்தக் கடிதங்களைத் தொடரவிடலாமா, அல்லது இன்றே தடுத்து விடலாமா என்ற எண்ணம், அவன் மனதில் அலைமோதியது.

ஆனால் அவள் தன்னைப் பற்றி என்னதான் எழுதுகிறாள் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம், அவனை அமைதிப் படுத்தியது.

வெகு நாட்களுக்குப் பிறகு, இதழ்களில் இயல்பான முறுவல் ஒன்று வந்து இதமாய் ஒட்டிக் கொள்ள ஒரு நீண்ட பெருமூச்சும் சூடாய் வெளிப்பட்டு, காற்றை அனலாக்கியது.

அன்று, மானசாவும் அதே யோசனையிலிருந்தாள். பகிர்தல் என்பது எல்லோரிடமும் சாத்தியமில்லை என்று தோன்றியது.

மனம் விட்டுப் பேசும் சந்தர்ப்பங்கள்.... சில நேரங்களில் தனக்குப் பிடித்தவர்களிடம் பழகிய உரிமை காரணமாய் தோழமையின் நெருக்கத்தில் வெளிப்படுவது இயல்பென்றாலும், ஒரு முகம் தெரியாத எழுத்தாளருக்குத் தான் கடிதம் எழுதுவது சரியா என்ற கேள்வி மீண்டும் உள்ளத்தில் நெருடலாய் எழுந்தது.

அவருடைய கதையைப் படித்து முடித்து, இரண்டு நாட்கள் சென்ற பிறகும் - மறையாத சுவடுகளாய், நெஞ்சில் பதிந்து, ஒரு கனமான இரும்புக்குண்டை வைத்து அழுத்தினாற் போன்ற உணர்வை ஏற்படுத்துகின்ற அந்த ஆழமான நடையும் உடனே மனதில் வந்தன.

இவ்வளவு அற்புதமாக எழுதுபவர் நிச்சயமாக அனுபவம் மிகுந்தவராக - வயதானவராக - மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்பவராகத் தான் இருப்பார் என்று மனம் பரிந்து வந்தது.

சித்தார்த்தைப் பற்றி அவருக்கு எழுதிய பிறகு, தன் மனதில் சஞ்சலங்கள் வெகுவாகக் குறைந்திருப்பதும் மனம் அமைதிப் படுவதையும் உணர்ந்த போது, அது தவறில்லை என்றும் தோன்றியது.

எந்த மாற்றமுமின்றி தினசரி காலண்டரில், இரு நாட்கள் இடம் பெயர்ந்தன.

அன்று காலையில், சித்தார்த் தன்னுடைய அறையில் எழுதிக் கொண்டிருந்தபோது, உள்ளே வந்த தர்மலிங்கத்தைக் கண்டதும் அவன் கண்களில் பெரும் ஆச்சர்யம் குடி வந்தது.

''என்னண்ணா....? காலையிலேயே என்னைப் பாக்க வந்திருக்கீங்க? ஏதாவது முக்கியமான விஷயமா?

''ஆமாம்ப்பா! நீதான், உன்னைச்சுத்தி ஒரு கூடு செஞ்சிட்டு, அதுக்குள்ளே இருந்து வெளியே வரவே மாட்டேன்றே! ஒரே வீட்டில் இருந்தாலும், தீவு மாதிரி இருக்கே! உன்கிட்டப் பேசிட்டுப் போலாம்னுதான் நானே வந்தேன்.''

''ஏன்னா ஒரு மாதிரிப் பேசறீங்க? என் மேல ஏதாவது கோபமா....? இல்லை, தொழில்லே ஏதாவது பிரச்னையா?'' அக்கறை தொனித்தது, அவன் குரலில்.

''தொழில்லே ஏதாவது பிரச்னைன்னா, நானே சமாளிச்சிடுவேன்.... இது நம்ம குடும்பப் பிரச்னை! உனக்குக் கல்யாணம் செஞ்சு வைக்கணும்னு உன் அண்ணி என்னைப் பிடிச்சித் தொணதொணக்கிறா!

நம்ப குடும்பம் தழைக்கணும்கிறது, அவளோட ஆசை! உனக்குக் கல்யாணமாகி, ஒரு குடும்பம் அமைஞ்சிட்டா, நாங்க நிம்மதியா இருப்போம் சித்து! நீயும் எவ்வளவு நாள்தான் தனியாளா இருப்பே.... சொல்லு.'' அவர் குரலில் ஆதங்கம் தெரிந்தது.

''சாரிண்ணா! ராமு இறந்த அன்னிக்கே, நான் முடிவு பண்ணிட்டேன் - என் வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு இடமே கிடையாதுன்னு!''

''சித்தார்த்! இப்போ நாங்க இல்லியா? உங்க அண்ணியும், நானும் சந்தோஷமா தானே இருக்கோம்!''

''அது வேறண்ணா! அண்ணி, ஒரு தெய்வம் மாதிரி! அவங்க மாதிரியெல்லாம் இந்தக் காலத்துல, ஒரு பொண்ணுகூடக் கிடையாது. இந்தப் பேச்சே வேண்டாமின்னு அண்ணிகிட்டே, நான் சொன்னேன்னு சொல்லுங்க. என் வாழ்க்கையையும் ஒரு பெண்கிட்டே பலி கொடுக்க, நான் தயாரா இல்லை'' என்று முடித்துவிட்டு, எழுந்து சென்று ஜன்னல் வழியே வெளியே பார்க்க ஆரம்பித்தான் சித்தார்த்.

போன மாதம் கூட, ஒரு பெண்ணை விரும்பி, அவள் கிடைக்காததால் மலையிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்ட ஒரு மலை வாழ் மனிதனின் முகம், கண்முன்னே கோரத் தாண்டவமாடியது.

அகண்ட வான்வெளியில் உருமாறும் மேகங்கள், பெண்ணெனும் மாயப் பிம்பமாய்.... ஆண்களின் மனதை ஒரு போகப் பொருளாய் எண்ணி வீசியெறியும் இரக்கமில்லாதவர்களாய்த் தோன்றின.

## 7

தர்மலிங்கம் பலத்த யோசனையுடன் சித்தார்த்தின் அறையை விட்டு வெளியே வந்தார்.

மனதில் குழப்பம் அதிகமாகி - என்ன செய்தால் இவனுடைய மனம் மாறும் என்ற தவிப்பு சூழ்ந்தது.

கவலையாக மாடிப்படிகளில் இறங்கியபோது கால்கள் தடுமாறியதில் கைப்பிடியைத் தவறவிட்ட தர்மலிங்கம், அப்படியே உருண்டு படிகளில் விழ ஆரம்பித்தார்.

அவருடைய அலறல் கேட்டு அனைவரும் ஓடிவந்தனர். படிகளின் விளிம்பில் மோதியதால் தலையிலிருந்து ரத்தம் அதிகமாக வர ஆரம்பித்தது.

மாடியிலிருந்து பதறி ஓடி வந்த சித்தார்த் - உடனே அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தான்.

தலைக் காயத்துக்கு, ஈரத்துணியால் கட்டுப்போட்டு அழைத்துச் சென்றாலும், ரத்தம் நிறையவே சேதாரமாகி இருந்தது.

ராஜேசுவரி, அவரைத் தன்மேல் சார்த்தி இருந்ததால், அவருடைய புடவையெல்லாம் ஈரமாக இருக்க, தர்மலிங்கம் மயங்கியிருந்தார்.

அப்போதுதான் கிளம்பிக் கொண்டிருந்த மானசாவும் சுதாவும் உடனே,

ராஜேவரிக்கு புடவைகளும் மருத்துவமனைக்குத் தேவையான ஃபிளாஸ்க், தண்ணீர், பிஸ்கட் மற்றும் தேவையான பொருட்களுடன், இன்னொரு காரில் கிளம்பிச் சென்றனர்.

மானசா, செல்லும் வழியிலேயே சிவசுப்ரமணியத்துக்கு விபரம் தெரிவித்து, அனைவரையும் ஜீப்பில் மருத்துவமனைக்கு வரும்படி கூறினாள்.

தங்களில் யாருடைய ரத்த வகையாவது அவருக்குப் பொருந்தினால் - ஏதாவது அவசரத் தேவை என்றால், அனைவருமே அங்கிருப்பது நல்லதென்று மானசாவுக்குத் தோன்றியது.

மருத்துவமனைக்குச் சென்றபோது, அனைவரும் பதட்டத்தில் இருந்தனர். ரத்தப்போக்கு அதிகமாக இருந்ததால், உடனே அவருக்கு ரத்தம் தேவைப்பட்டது.

மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்துக் கொண்டிருந்தனர். ராஜேசுவரி அழுது கொண்டிருந்ததைப் பார்த்தால், மானசாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.... இதயம் கனத்துப்போனது! அழுததில் முகம் வீங்கி, தளர்ந்து போய் அமர்ந்திருந்தவரை மானசாவும் சுதாவும் சமாதானப்படுத்தி, ஆறுதல் கூறினர்.

சித்தார்த் இறுகிய முகத்துடன் - கைகளைக் கட்டியபடி எதிரே நின்று கொண்டிருந்தான். அப்போது அந்த அறையிலிருந்து வெளியே வந்த மருத்துவர் ஒருவர், அவனிடம் வந்தார்.

''நீங்க அவர் தம்பிதானே? அவருக்கு உடனே ரத்தம் தேவைப்படுது. அந்த குரூப் நம்மகிட்ட இப்ப ஸ்டாக் இல்லை. வெளியே சொல்லி, ஏற்பாடு பண்ணச்சொல்லி இருக்கோம். கொஞ்சம் ரேர்குரூப்தான்.... 'AB நெகடிவ்'! நீங்க யாராவது, அந்த குரூப் இருக்கீங்களா? உடனே கிடைச்சா, கொஞ்சம் நல்லது!'' என்றார்.

''நானும் அதே குரூப்தான் டாக்டர்.... ஆனா பத்து நாளைக்கு முன்னாலதான் நான் டொனேட் பண்ணினேன்.... நான் என் ஃப்ரெண்ட்சுக்கு பேசி, உடனே ஏற்பாடு பண்றேன்'' என்று கூறிவிட்டு 'செல்'லை எடுத்தான் சித்தார்த்.

அவர்கள் பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்த மானசா, வேகமாக எழுந்து முன்னால் வந்தாள்.

''டாக்டர்.... ஒரு நிமிஷம்! நான் AB நெகடிவ் தான்! எனக்கு எந்தப் பிரச்னையும் கிடையாது. நான் தரேன்'' என்றாள்.

ஒரு வேகத்துடன் நிமிர்ந்த சித்தார்த்தின் கண்களில், தன் அண்ணனைக் காப்பாற்ற வேண்டும் என்ற தவிப்பும் வேதனையும் அதிகமாகத் தெரிந்தன.

''சரி! நீங்க மட்டும் உள்ளே வாங்க'' என்று கூறிவிட்டு, டாக்டர் உள்ளே செல்ல, பின் தொடர்ந்தாள் மானசா.

அவள் உள்ளே சென்றவுடன், சிவசுப்ரமணியத்துடன் மாணவர்களும் வந்தனர். விபரம் அறிந்து நிம்மதிப் பெருமூச்சு விட்ட சுப்ரமணியம்,



ராஜேசுவரி அம்மாவை அமைதிப் படுத்திவிட்டு, சித்தார்த்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

மானசா, ரத்தம் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது, ராஜேசுவரி அம்மா, ஓடி வந்து விம்மலுடன் அவளை அணைத்துக் கொண்டார்.

''ரொம்ப நன்றிம்மா!'' என்றவர், உணர்ச்சிப் பெருக்குடன், ''எங்களோட குலதெய்வத்தையே உன் உருவத்துல நேரில பாத்த மாதிரி இருக்கும்மா.... நான் இதை, எப்பவும் மறக்க மாட்டேன்'' - கூறியபடிக் கண்ணீர் விட்டார்.

அவரை அணைத்து சமாதானப் படுத்திய மானசா, ''அம்மா! நீங்க எதுக்கு எனக்கு நன்றியெல்லாம் சொல்றீங்க? என்னை என்னவோ அந்நியப்படுத்தற மாதிரி இருக்கு. எங்க ரெண்டு பேரையும் உங்க வீட்டிலேயே தங்க வச்சி, உங்க சொந்தப் பொண்ணுங்க மாதிரி பாத்துக்கறீங்க! அதுக்கு நாங்க என்ன சொல்றது.... தினம் நன்றி சொல்லணும்! நீங்க முதல்லே வந்து, அமைதியா உக்காருங்க'' என்று கூறிவிட்டு, அவருக்குப் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டாள்.

திலீப், உடனே சென்று பால் வாங்கி வந்து, அவளைப் பருக வைத்தான்.

சுதா அவரிடம், ''அம்மா! நாங்க எல்லாருமே ஆறு மாசத்துக்கு ஒருதடவை ரத்ததானம் செஞ்சுடுவோம்மா.... மானசாவும், விக்ரமும் கொஞ்சம் ரேர் குரூப்புங்கறதாலே, அவசரம்னு வந்தா, ரொம்பத் தேவைன்னா குடுக்கற மாதிரி பாத்துப்போம்'' என்று கூறியபோது, சித்தார்த்தின் விழிகள் மானசாவையே ஒரு கணம் ஆழமாய் ஊடுருவின!

பிறகு மெதுவாக எழுந்து அவளருகில் வந்து ''தேங்க்யூ மானசா'' என்று அவன் கூறியபோது, அந்தக் குரலில் இருந்த உணர்ச்சிப் பெருக்கு - முகத்தில் இல்லாமல்.... கற்பாறையாய் இறுகி இருந்தது!

பதிலாக ஒன்றும் கூறாமல், ஒரு தலையசைப்பை மட்டும் அளித்த மானசாவுக்கு, அந்த நேரத்திலும் தன்னுடைய பெயர், அவனது உச்சரிப்பில் இனிமையாய் ஒலித்தது புரிந்தது.

அன்று தன் பெயருக்கே புது அர்த்தம் தொனித்தாற் போலிருந்ததும், தனக்குள்ளேயே புன்னகைத்துக் கொண்டாள் அவள்.

தர்மலிங்கம், உடல்நிலை சரியாகி வீட்டுக்கு வருவதற்கு இரண்டு நாட்கள் ஆக, அந்த நாட்களில் மாலை நேரத்தில் அவரை மருத்துவமனைக்குச் சென்று பார்த்து விட்டுத்தான் மானசாவும் சுதாவும் வீட்டுக்கு வந்தனர்.

மானசாவைப் பார்க்கும் போதெல்லாம், தர்மலிங்கம் நன்றியுடன் புன்னகைத்தார்.

ராஜேசுவரி அம்மா காலை நேரங்களிலும் - சித்தார்த் இரவிலும் என மாறி மாறி, அவருக்குத் துணையிருந்தாலும், ராமையாவும் அங்கேயே இருந்தார்.

அன்று, சித்தார்த்தும் ராஜேசுவரியும் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போதுதான், மானசாவும் சுதாவும் வந்தனர்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ''அப்ப நாங்க கிளம்பறோம்

சார்! உடம்பைப் பாத்துக்கங்க.... நாளைக்கு வீட்டுக்குப் போயிடலாம்னு நர்ஸ் சொன்னாங்க'' என்று எழுந்தாள் மானசா.

அவர் உடனே, ''நீங்க எப்படித் திரும்பிப் போறீங்க?'' என்றார் அக்கறையுடன்.

''ஜீப் இருக்குங்க.... அதுலேதான் போறோம்''

''வேண்டாம்! நீங்க ஜீப்பைத் திருப்பி அனுப்பிடுங்க. சிவசுவுக்கு உதவியா இருக்கும். சித்து, ராஜியை வீட்டிலதான் விடப் போறான். அவனோட போயிடுங்க. எனக்கு துணைக்கு ராமையா இருப்பான்.''

''சரி சார்!'' என்ற சுதாவும் மானசாவும், சித்தார்த்துடன் கிளம்பிச் சென்றனர். வழியில் மானசா மௌனமாக இருக்க, சுதாவும் ராஜேசுவரி அம்மாவும் பேசிக்கொண்டு வந்தார்கள்.

எல்லோரிடமும் இயல்பாகப் பழகும் மனது, சித்தார்த்திடம் பழக மறுத்து, ஏனோ ஒரு ஒதுக்கம் அவளிடம் வந்திருந்தது.

''என்னம்மா.... மானசா ஒண்ணுமே பேசாம அமைதியா வரா? அவளுக்கு வீட்டு ஞாபகம் வந்துடுச்சோ என்னவோ, பாவம்!'' சுதாவிடம் ராஜேசுவரி பரிதாபப்பட்டார்.

தன் நினைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்த மானசா, ''ம்.... ஆமாம்மா!'' என்றாள் தடுமாற்றத்துடன்.

உடனே அவர், ''அன்னிக்கு அம்மாவுக்குக் கடிதம் எழுதினியே மானசா? ராமையா கிட்ட கொடுத்து தபால்லே சேர்க்கச் சொல்லிட்டியாம்மா....?'' என்று அவளிடம் கேட்டார்.

சுதா சிரிப்புடன் திரும்பி, ''அவ ஒண்ணும் அவங்க வீட்டுக்குக் கடிதம் எழுதலைம்மா. அதான், தினம் 'செல்'லிலே பேசிடறாளே! அவளுக்கு, ஒரு கதாசிரியரை ரொம்பப் பிடிக்கும்மா.... அவரோட எழுத்துன்னா, உயிர்! அவரோட ஒவ்வொரு கதையையும் படிச்சிட்டு, உடனே விமர்சனம் செஞ்சு, கடிதம் எழுதிடுவா....!''

''அப்படியா? யாரும்மா அந்த எழுத்தாளர்?'' - மானசாவைக் கேட்டார் ராஜேசுவரி.

''அவர் பேரு 'சுமேதன்'ம்மா'' என்று சுதா கூறிய உடனே இடைமறித்தார் ராஜேசுவரி.

''நம்ம சித்து....'' என்று ஆரம்பித்தபோது, தடுத்தது சித்தார்த்தின் குரல்.

''அண்ணி! நம்ப விஷயமெல்லாம் அவங்களுக்கு எதுக்கு? மிஸ் சுதா! நானும் கதை எழுதறேன் - என்னோட பேரிலேயே! அதைத் தான் அண்ணி சொல்ல வராங்க.... இல்லண்ணி?'' அழுத்தமாக இருந்தது, அவன் குரல்!

அவனுடைய பார்வையிலும் பேச்சிலும், எதையோ உணர்ந்தாற்போல, அமைதியாக இருந்தார் ராஜேசுவரி.

வீட்டுக்குச் சென்ற உடனே, அவரைத் தனியே அழைத்துச் சென்றான்



சித்தார்த்.

''அண்ணி! எந்தக் காரணத்தைக் கொண்டும், நான்தான் 'சுமேதன்'கிறது, அவளுக்குத் தெரிய வேண்டாம். அண்ணன்கிட்டயும் சொல்லிடுங்க. இந்த மாதிரி வாசகர்களோட தொந்தரவு இருக்கக்கூடாதுன்னுதான், நான் என்னை வெளிப்படுத்திக்கறதில்லைங்கிறது உங்களுக்கே தெரியும்! அதனால, இதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்'' என்றான் முடிவாக.

''சரிப்பா.... நான் சொல்லலை!'' - அவர் மனம் யோசனையிலிருந்தது.

நேரே மானசாவிடம் சென்றவர், ''மானசா! உங்கம்மா அப்பாகிட்ட பேசி, நான் நன்றி சொல்லணும். நம்ம வீட்டுப் போனிலேயே பேசலாம்.... வா!'' என்றார்.

மானசா முதலில் அம்மாவிடம் பேசிவிட்டு, அவரிடம் தந்தாள்.

ராஜேசுவரி அம்மா அலமேலுவிடம், ''ரொம்ப நன்றிம்மா! நீங்க அருமையான ஒரு பெண்ணைப் பெத்திருக்கீங்க! இந்தக் காலத்துல இப்படி அன்பா, மனுஷத் தன்மையோட இருக்கிற மானசாவைப் பாக்கறப்போ, மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு! நீங்க எல்லாரும், அவசியம் நம்ம விட்டுக்கு வந்து தங்கிட்டுப் போகணும். அவர்கிட்டயும், நான் நன்றி சொன்னதா சொல்லிடுங்க!'' என்று, நலம் விசாரித்து விட்டு வைத்தார்.

அவர் மனதில், ஒரு எதிர்பார்ப்பு வேரூன்றியது. அது, அவர் மனதிற்கு சந்தோஷத்தை அளித்தாலும், இது நடக்குமாவென்ற பெருமூச்சும் உடனே எழுந்தது.

இன்னும் மூன்று நாட்களில் அவர்கள் ஊருக்குக் கிளம்ப வேண்டும். மானசாவுக்கு அந்த நினைப்பே உள்ளத்தில் ஏமாற்றத்தைத் தந்தது.

தன் இதயத்தை விட்டுவிட்டுத் தான் மட்டும் எங்கோ செல்லப் போவது போல் ஒரு தவிப்பை விதைத்தது.

மனதில் சொல் விரித்து, விண் நோக்கி கருவை சுருக்கி, கவிதையாய் காதல் வந்தாலும், அது முழுமை பெறுவதென்னவோ அவனுடைய முகதரிசனம் கிடைத்த பிறகுதான் என்று தோன்றியது.

'இன்று, இத்தனை உரிமையுடன், என் இதயக் கதவுடைத்து உள்ளே வந்த நீ, இத்தனை நாட்களாய் எங்கு இருந்தாய்?' என்று அவனிடம் கேட்க வேண்டும் போல்!

அன்றிரவு மானசா, எழுத்தாளர் 'சுமேத'னுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

தன் மனதில் சித்தார்த் ஆழமாகப் பதிந்துவிட்டதும், தன் மனம் அவனுக்காக ஏங்கித் தவிப்பதையும், ஆனால் அதன் எதிரொலி - சிறிதுகூட அவனிடம் இல்லாததும், தன்னிடம் அவன் எந்த வித ஆர்வமும் காட்டவில்லை என்பதையும் எழுதினாள்.

தான் இன்னும் ஒரு வாரத்திற்குள் சென்னைக்கு சென்று விடப்போவதையும், தனக்கு ஒரு நல்ல ஆலோசனை கூறும்படியும், தொந்தரவிற்கு மன்னிக்கும் படியும் எழுதி, தன் முகவரியும் எழுதி உறையிலிட்டு, எடுத்து வைத்தாள்.

மனம் முழுவதும் நிறைந்திருந்த சித்தார்த், அவளுடைய உறக்கத்தைப் பறித்துக் கொண்டான்.

வெகு நேரம் கழித்து வந்த கனவிலும், தன் முகவரியைப் பதித்துக் கொண்டான்.

---

# 8

---

அடுத்த நாள் காலையில் மானசா அந்தக் கடிதத்தை தபாலில் சேர்ப்பதற்காக ராமையாவிடம் கொடுத்தபோது அவர் முகத்திலிருந்த புன்னகை ஏனோ வித்தியாசமாய் தெரிந்தது.

யாரோ ஒரு முகம் தெரியாத எழுத்தாளருக்கு, தான் அடிக்கடிக் கடிதம் எழுதுவது அவருக்கு விநோதமாகத் தோன்றுகிறதோ என்ற எண்ணம், அவள் மனதில் எழுந்தது.

அவர் கிராமத்து மனிதரானதால், ஒரு வேளை தன்னைப் பற்றி தவறாக நினைத்து விடுவாரோ என்று தோன்றவும், இனி இங்கிருந்து தான் கடிதம் எழுதப் போவதில்லையே என்ற உணர்வு, அமைதியை மீட்டுத் தந்தது.

சித்தார்த்தை இந்த இரண்டு நாட்களாகப் பார்க்கவே முடியவில்லை. தர்மலிங்கம் மருத்துவமனையில் இருந்தவரை, சித்தார்த்தின் அழுத்தமான தொனியுடன் கூடிய ஆழ்ந்த குரலையாவது அவளால் கேட்க முடிந்தது.

இப்போது அதுவும் முடியவில்லை என்பது வேறு, அவளை வேதனைப்படுத்தியது. தான் ஏன் இது போல் ஆகிவிட்டோம் என்ற கேள்விக்கு, விடைதான் அவளிடம் இல்லை!

அன்பைப் பரிசாக அளித்து, அவன் புன்னகையை பதிலாகப் பெற அவள் மனம் விழைந்தது.

'வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, உடையுடன் இதழில் புன்னகையையும் உடுத்திச் செல்ல, மகத்தான வெற்றிகள் எளிதில் கைகூடும்' என்று, எதிலோ படித்த நினைவு உடனே சரம் கோர்த்தது.

ஆனால், மானசா அவனைப் புன்னகையுடனே எதிர்கொண்ட போதெல்லாம், வெற்றுப் பார்வையும் உணர்ச்சிகளைத் துடைத்த முகமும்தான் பதிலுக்குப் பரிசாய்க் கிடைத்தது நினைவுக்கு வந்தது.

மனம் தொட்டாசிணுங்கியாய் துவண்டு போய்.... உள்ளம் கொடியாய்ப் படர இடம் தேடித் துடித்தது.

அன்று முழுவதும், மனதினுள் ஒரு சூனியமான உணர்வு படர்ந்துவிட - அன்றும் சித்தார்த்தைப் பார்க்க முடியவில்லை.

இந்த எதிர்காலமில்லாத காதல், தனக்குள் ஏன் வந்தது என்ற கேள்வி கண்ணீர்ப் பூக்களுடன் நெருடலாய் உட்புகுந்தது.

மறுநாள், அவர்கள் ஊருக்குக் கிளம்ப வேண்டும். இரவு, உறக்கத்தை



வழங்க மறுக்க அன்றைய விடியல், மானசாவின் மனதைப் போலவே மேகமூட்டத்துடன் இருந்தது.

அன்று காலையில் வாக்கிங் சென்றபோதும் சித்தார்த் அவள் கண்களில் படவே இல்லை.

துணிகளை அடுக்கி முடித்து எடுத்து வைத்து மதியம் சாப்பிட்டுவிட்டு இருவரும் கிளம்பினார்கள். சிவசுப்ரமணியம் அவர்கள் இருவரையும் அழைத்துச் செல்ல வந்திருந்தார்.

பெரியவர்களின் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு, நன்றி கூறிய போது, இருவருக்கும் அழகிய பட்டுப் புடவைகளை, மஞ்சள் குங்குமத்துடன் வைத்துக் கொடுத்தார் ராஜேசுவரி.

சுதாவும் மானசாவும் எவ்வளவு மறுத்தும் அவர் விடவே இல்லை. சிவசுப்ரமணியமும் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டார்.

அதுவரையிலும் கூட சித்தார்த் கீழே இறங்கி வரவே இல்லை. தர்மலிங்கம்தான், ராமையாவை அனுப்பி சித்தார்த்தை அழைத்து வரச் சொன்னார்.

அழுத்தமான காலடிகளுடன், மெதுவாக வந்தவன், சிவசுப்ரமணியத்துடன் கை குலுக்கிப் பேசிவிட்டுப் பிறகு அவர்களிடம் மெதுவாகத் திரும்பினான்.

''நாங்க ஊருக்குக் கிளம்பறோம் சார்!'' என்ற சுதாவிடம், ''இனிய பயணத்துக்கு, என் வாழ்த்துக்கள்!'' என்று கூறிவிட்டு மானசாவை அவன் பார்த்தபோது மானசா தலை குனிந்து நின்றிருந்தாள்.

வார்த்தைகள் அவள் தொண்டைக்குள் சிக்கித் தவித்தன. பிறகு பதைப்புடன் நிமிர்ந்தபோது - அவனுடைய விழிகள் அவளிடமே கூர்மையாகப் பதிந்திருந்தன.

பார்வை, கூர் அம்புகளாய்ப் பாய்ந்து, அவள் இதயத்தைத் தைக்க, இருவருமே எதுவும் பேசாமல் - அங்கு ஒரு மௌன விடைபெறுதல் நிகழ்ந்தது. உடனே சிவசுப்ரமணியத்திடம் திரும்பிய சித்தார்த், ஒரு தலையசைப்புடன் புன்னகைத்து விட்டு திரும்பியும் பார்க்காமல் வேகமாக மாடிக்குச் சென்று விட்டான்.

அவன், தன்னுடைய இதயத்தைத் தராமலேயே, தன் மனதை மட்டும் சுமந்து செல்வது மானசாவுக்குப் புரிந்தது. விடைபெற்றுக் கிளம்பும்போது, ராஜேசுவரி மட்டும் மிகவும் கண்கலங்கினார்.

அவர்களுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, ''நீங்க ரெண்டு பேரும், உங்க குடும்பத்தோட வந்து கட்டாயம் நம்ம வீட்டில தங்கிட்டுப் போகணும்.... என்ன புரிஞ்சுதா?'' என்றபடி விடை கொடுத்தார்.

ஜீப்பில் ஏறி அமர்ந்த பிறகு, மாடியிலிருந்த அவன் அறையைப் பார்த்தபோது, அந்த ஜன்னலும் அவன் மனதைப் போலவே வெற்றிடமாகவே இருந்தாலும், தன் மனம் களவு போனது மட்டும் புரிந்தது.

பிறகு, குன்னூரிலிருந்து கோயம்புத்தூருக்குச் சென்று, இரவு ரயிலில்

கிளம்பி சென்னைக்கு வந்தனர்.

**கா**லையில், ரயில் நிலையத்துக்கே வந்து காத்திருந்த அப்பாவையும் அம்மாவையும் பார்த்தபோது, மானசாவுக்கு ஏனோ கண்ணைக் கரித்துக் கொண்டு அழுகையாக வந்தது.

அவளுடைய கண்கள் கலங்கியதைக் கண்டதும் வெங்கடேசன் பதறிப்போக, அலமேலு அவளைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

இத்தனை நாள் தங்களைப் பிரிந்திருந்ததால் வந்த அழுகை என்று அவர் நினைக்க, அது சித்தார்த்தைப் பிரிந்து வந்ததினால் வந்த கண்ணீர் என்று அவளுக்கு மட்டுமே புரிந்தது.

காதல், அவளைப் பலவீனப்படுத்தி இருந்தது. பிரிவின் கொடுமை, பெருந் துயராய் மாறி இருந்தது.

''ஏய் மானு! நீ என்ன குட்டிப் பாப்பாவா? அம்மாவைப் பாத்தவுடனே இப்படி அழறே....? அழுமூஞ்சி!'' நண்பர்கள் கிண்டல் செய்ய, வெட்கமாக இருந்தது மானசாவுக்கு!

மறு வாரம் முழுவதும், புராஜெக்டை முழுமையாக செய்து முடிக்கவே அவர்களுக்கு நேரம் சரியாக இருக்க, அனைவரின் முயற்சியும் வெற்றிகரமாக முடிந்து, நல்ல மதிப்பெண்களும் கிடைத்தன.

கல்லூரியில் இறுதிப் பரீட்சைக்காகப் படிப்பதற்கு விடுமுறை விடப்பட்டிருக்க, தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன.

மானசாவின் மனம் படிப்பில் பதிய மறுத்து சத்தியாக்கிரகம் செய்ய - சித்தார்த்தின் நினைவு, அதிகமாய் அவளை ஆக்கிரமித்து உருக்கியது.

சரியாகச் சாப்பிடாததால் உடல் மெலிய ஆரம்பிக்க, இரவு அவள் அறையில் வெகு நேரம் கண் விழித்துப் படிப்பதால் வந்த மெலிவென்று அலமேலு நினைத்தார்.

அன்று கூரியரில் அவளுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

தனக்குக் கடிதம் எழுதுவது யாராக இருக்கும் என்று நினைத்துக் கொண்டே பிரித்தபோது, எழுத்தாளர் சுமேதனிடம் இருந்துதான் வந்திருந்தது.

அதில், முத்துச்சரங்களைக் கோர்த்தாற் போல், நான்கே வரிகள் இருந்தன.

என் வாசகி மானசாவுக்கு.... உங்கள் கடிதங்களைப் படித்தேன். காதல் வெறும் மாயை என்பது, என் கருத்து மட்டுல்ல.... உண்மையும் கூட! சித்தார்த்தின் மனதை அறிய முடியவில்லை என்று எழுதி இருந்தீர்கள்! உங்கள் நலம் கருதிக் கூறுகிறேன்.... உங்கள் கவனத்தையும் மனதையும் படிப்பில் செலுத்தி உங்கள் பெற்றோரின் விருப்பத்துக்கு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். இதுவே, எனது கடைசிக் கடிதமாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன் - சுமேதன்!

கடிதம் வந்தவுடனே, வானில் பறப்பது போன்ற ஒரு சந்தோஷத்தைத் தந்த மனது, அதைப் படித்த பிறகு மிகவும் சோர்ந்து போனது.



அவர் பொதுவாக வாசகர்களுக்குக் கடிதம் எழுதுவதை விரும்புவதில்லை என்பது புரிந்து, இனி அவரைத் தொந்தரவு செய்யக்கூடாதென்ற உறுதி மனதில் வந்தது மானசாவுக்கு.

பிறகு வந்த நாட்களில், வாழ்க்கை எந்திர கதியில் செல்வது போலிருந்தது. தேர்வுகள் தொடங்கி, நடந்து, கல்லூரியின் இறுதி நாளும் வந்துவிட்டது.

இன்று, கல்லூரி அத்தியாயத்தின் கடைசிப் பக்கம்! மாணவர்களின் கண்களில் கவலையின் முதல் தாக்கமும் பிரிவின் இறுதி சோகமும் நிறைந்திருந்தன.

எதிர்காலத்தைக் குழப்பத்துடன் எதிர்நோக்கும் கருத்துப் பதிவுகள் - கனவுகளாய் கண்களில்! தோழிகளின் கண்ணீரும், ஆட்டோகிராஃபும் - கல்லூரி வாழ்வின் மிச்சங்களாய் பதிந்தன.

இதுவரை, படிப்பதைத் தவிர வேறு எந்தக் கவலையுமின்றி சுதந்திரமாய் சிறகடித்த பருவம் தொலைந்து போனது மட்டும் புரிந்தது.

எல்லோர் மனமும், கனத்துப் போயிருந்தது. விடைபெற மனமின்றிப் பிரிந்தன, அந்த ஒரு கூட்டுப் பறவைகள்!

**கா**லம் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. நாட்கள் வேகமாகக் கடந்தன. இப்போது தொலைபேசியில் மட்டுமே நண்பர்களிடம் நலம் விசாரிக்க முடிந்தது.

அன்று லாயிட்ஸ் ரோடிலிருக்கும் ஈஸ்வரி லெண்டிங் லைப்ரரிக்கு சென்றிருந்தாள் அவள். ராபர்ட் கியோசுகியின் 'ரிச்பேட் புவர்பேட்' என்ற புத்தகத்தை எடுத்து வந்து படிக்க ஆரம்பித்தாள். மனம் அதில் வயிப்புடன் ஆழ்ந்து போனது.

படித்து முடித்து யோசனையுடன் அமர்ந்திருந்தபோது, மனதில் சித்தார்த்தின் நினைவுகள் ஆழமாய்!

அன்று, சுதா அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தாள். மானசாவை ஆசையுடன் அணைத்துக் கொண்டு, பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டாள்.

பிறகு, ஒரு வித வெட்கம் கலந்த தடுமாற்றத்துடன், ''மானு! எனக்கு அடுத்த மாசம் கல்யாணம்.... ஊரில இருந்து தேதி குறிச்சி மாமா லெட்டர் போட்டுருந்தார். உடனே உன்னைப் பாக்கணும் போல இருந்தது. உன்கிட்ட சொல்லலாம்னுதான் வந்தேன்'' என்றாள்.

''ஏய் சுதா.... வாழ்த்துக்கள்டி! வந்த உடனே இந்த முக்கியமான விஷயத்தை முதல்லே சொல்லாம, ஏன்டி என்னென்னவோ பேசிட்டிருந்தே? அப்புறம்... மாப்பிள்ளை எப்போ வராராம் ஊரிலேருந்து....?'' என்றாள் குறும்புடன்.

சுதாவின் மாமா பையன் செல்வம், டெல்லியில் வேலை செய்து கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்தே, இருவருக்கும் திருமணப் பேச்சிருந்ததால், இருவருக்குமே அதில் விருப்பம்தான் என்பதை மானசா அறிந்திருந்தாள்.

சுதா பதில் சொல்வதற்குள், உள்ளே இருந்து வந்த அலமேலுவும் விஷயத்தைக் கேள்விப்பட்டு விட்டு அவளை வாழ்த்தினார்.

''ரொம்ப சந்தோஷம்மா சுதா! அப்படியே உன்னோட ஃப்ரெண்டும் என்ன சொல்றான்னு, கொஞ்சம் கேட்டு சொல்லேன். கல்யாணத்தைப் பத்திப் பேசினாலே எங்க கிட்டே பிடி கொடுத்துப் பேச மாட்டேங்கிறா! இப்ப கல்யாணம் வேணாம்கிறா.... நிறைய வரன் வருது! இவ பிடிவாதமா முடியாதுங்கறா. எங்க ரெண்டு பேருக்கும், அந்தக் கவலைதான்'' என்றவரின் குரலில் வேதனை தெரிந்தது.

''நான் கேக்கறேம்மா! நீங்க கவலைப்படாதீங்க'' என்றவள், மானசாவுடன் அவளுடைய அறைக்குச் சென்றாள்.

உள்ளே சென்று கதவை மூடி விட்டுத் திரும்பியவள், ''மானு! நீ இன்னும் அந்த சித்தார்த்தை மறக்கலை இல்லை....?'' என்றபோது மானசாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''ஏய்.... சுதா.... நீ என்ன சொல்றே?''

''ம்.... உண்மையைச் சொல்றேன்! எனக்கு எப்படித் தெரியும்னு பாக்கறியா? உன்னோட நடவடிக்கை, பார்வை இதெல்லாம் வச்சி, நான் ஊரிலயே கண்டு பிடிச்சிட்டேன். அதனாலதான் அவங்க வீட்டிலயே தங்க சம்மதிச்சேன். அப்பவாவது உன் காதல் வளருமான்னு பாத்தா, அந்த சித்தார்த்துக்கு கண்ணிலயும் மனசுலயும் ஏதோ கோளாறு போலிருக்கு!

நான் மட்டும் அந்த இடத்துல இருந்திருந்தா, உன்னைக் கொத்திட்டுப் போயிருப்பேன் தெரியுமா?'' என்றாள் சுதா.

''ப்ளீஸ்! சுதா.... அவரை ஒன்றும் சொல்லாதேடி''

''வேற என்னடி சொல்லச் சொல்றே....? ஒரு பெண்ணோட பார்வையில இருந்து அவளைப் புரிஞ்சக்கத் தெரியாத மனுஷர் மென்மையான உணர்வுகளே தெரியாதவர்.... என்ன கதை எழுதி, எதை சாதிக்கப் போறார்னு எனக்குத் தெரியலை. சொன்னா உனக்குக் கோபம் வந்துடும்! ஏன்னா, நீதான் அவரோட காதலியாச்சே....!''

மானசா, ''ப்ச்.... அதை விடு சுதா! உன்னோட கல்யாணம், எப்போ, எங்கேங்கிற விஷயத்தைப் பத்திப் பேசுவோம்'' என்றவுடன், பேச்சு திசை மாறியது.

அலமேலு, தட்டில் டிபன் எடுத்து வந்து இருவருக்கும் கொடுத்துவிட்டுப் போனார்.

''அடுத்த மாசம் பத்தாம் தேதி கல்யாணம்.... சென்னையில தான்! மாமா அடுத்த வாரம் வந்து, எல்லா ஏற்பாடும் செய்யறேன்னு சொல்லி இருக்காரு. அவருடைய நண்பர் மூலமா கல்யாண மண்டபத்தைக் கூட பேசி முடிச்சிட்டாராம். இப்ப செல்வம் வரவேண்டியதுதான் பாக்கி.''

''சுதா! என்ன.... இன்னும் செல்வத்தைப் பேர் சொல்லிக் கூப்பிடறே....? நான் ஒரு நாத்தனார் இருக்கேன்டி உனக்கு! எனக்கு எ்திர்லேயே மரியாதை இல்லாமப் பேசறே.... செல்வம் எனக்கு அண்ணா.... தெரியுமா?'' என்றாள்



கேலியாக.

''ஒரு விஷயத்துல அது சரிதான்! எதையும் வெளியே சொல்லாம அமுக்குணி மாதிரி இருக்கீங்க பாரு, ரெண்டு பேரும்! அதுல ரெண்டு பேரும் ரொம்ப ஒத்துமைதான்.''

''சரி! தர்மலிங்கம் சார் வீட்டுக்கு பத்திரிகை அனுப்புவேயில்லை?'' மானசாவின் கேள்வியில் ஆர்வமிருந்தது.

''ம்!.... நிச்சயமா! ரெண்டு பத்திரிகை அனுப்பப் போறேன். அப்புறம் போனிலயும்.... எல்லாரையும்.... அதுவும் முக்கியமா, அந்த சாமியாரைக் கூப்பிடப் போறேன்.''

''போடி! ஏன் அவரைப் பத்தி அப்படி எல்லாம் சொல்றே?'' என்றாள் மானசா செல்லக் கோபத்துடன்.

''ம்!வேற எப்படி சொல்றதாம்.... இவ்வளவு அழகான பொண்ணு ஒருத்தி பக்கத்துல இருக்கான்ற நினைப்பே இல்லாம, மூஞ்சியைத் தூக்கி மலை முகட்டுல வச்சுகிட்டு அலையறவரை பின்னே என்னன்னு சொல்றது?''

''சரி! அதவிடு சுதா.... உன்னோட கல்யாண வேலை ஏதாவது இருந்தா சொல்லு! நான் வந்து செய்யறேன்''

''அதச் சொல்லத்தான் வந்தேன். மாமா வந்த உடனே, நிறைய சாமான் வாங்க வேண்டியது இருக்கு....மாமியும் வராங்க! நமக்கு நேரம் பத்தாது. சரி! அப்ப நான் கிளம்பறேன் மானு'' என்றபடி, சுதா சென்றவுடன் மானசாவுக்கு சித்தார்த்தின் நினைவு வந்தது.

மனதின் ஓரம், சித்தார்த் இந்தத் திருமணத்துக்கு வருவானா என்ற கேள்விக்குறியும் எழுந்தது.

அந்த வாரம் முழுவதும் சுதாவின் கல்யாண வேலையாக வெளியே சுற்றுவதற்கும் பொருட்கள் வாங்குவதற்குமே நேரம் சரியாக இருந்தது.

சுதாவின் மாப்பிள்ளை செல்வம், அடிக்கடி அவளிடம் பேசிக்கொண்டு இருந்தான்.

நண்பர்களுக்குப் பத்திரிகை கொடுக்கச் செல்வதும், சுதாவைக் கிண்டலும் கேலியும் செய்வதுமாகப் பொழுது இனிதாகச் சென்று - அவளுடைய திருமண நாளும் வந்தது.

முதல் நாள் மதியமே மானசா சுதாவின் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அவளை அழகு நிலையத்திற்கு அழைத்துச் சென்று அலங்கரித்து, தானும் தயாராகி மண்டபத்துக்குச் சென்றாள்.

சுதாவே, சித்தார்த்திடம் தொலைபேசியில் பேசிவிட்டு, திருமணத்துக்கு அழைத்ததாகக் கூறியது ஞாபகம் வந்தது.

அவன் வந்தால், மானசாவை விரும்புவதாக அர்த்தம் என்று சுதா அன்று கூறியது, அவள் மனதில் பெரும்தவிப்பை இன்று ஏற்படுத்தி இருந்தது!

வெங்கடேசனும் அலமேலுவும் ஆர்வத்துடன் கல்யாணக் காரியங்களில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர்.

மானசாவின் விழிகள், அவன் வரும் வழியில் பதிந்து, தவமிருந்தன.... கண்கள், கனவுகளைச் சுமந்திருந்தன.

அவன் வருவானா என்ற கேள்வி, சுதாவின் மனதிலும் எழுந்தது.... மானசா, காத்திருந்தாள்!

அந்த நிமிடம், 'என் உயிருள்ளவரை உன்மேல் கொண்ட காதலையும், நினைவுகளையும் சுகமாய் சுமப்பேன்' என்று உறுதி பூண்டது மனது.

---

## 9

---

திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது.

சுதாவிற்கு அருகில் நின்று உறவுப் பெண்களிடம் பேசியபடி மானசாவும் பரிசுகளை வாங்கி அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

அடிக்கடி மண்டபத்து வாசலையே அவளுடைய விழிகள், ஒரு எதிர்ப்பார்ப்புடன் நோக்கின.

அங்கு தர்மலிங்கமும் ராஜேசுவரியும் வருவதைக் கண்ட மானசாவின் பார்வை, ஆவலுடன் சித்தார்த்தைத் தேடியது. ஆனால், சுவர்ப் பந்தாய் நிராசையுடன் திரும்பி வாடியது....சித்தார்த் வரவில்லை!

அவள் வேகமாகக் கீழே இறங்கிச் சென்று, புன்னகையுடன் இருவரையும் வரவேற்றாள்.

சுதாவின் அம்மாவுக்கு அவர்களை அறிமுகம் செய்துவிட்டு, தன் பெற்றோரிடம் அழைத்துச் சென்றாள்.

ராஜேசுவரி, அவள் கையைப் பிடித்துக் கொண்டு. ''எப்படி இருக்கேம்மா....? எங்களை எல்லாம் மறந்திட்டியா, மானசா? அப்பா, அம்மாவ அழைச்சிட்டு, நம்ப வீட்டுக்கு வந்து தங்கிட்டுப் போம்மா!'' என்றார்.

''உங்க எல்லாரையும் எப்படிம்மா என்னாலே மறக்க முடியும்? நீங்க வந்ததிலே, எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்!'' என்றாள்.

தர்மலிங்கத்திடம் திரும்பி ''உங்களுக்கு, இப்ப உடம்பு நல்லா இருக்குங்களா? அடிக்கடி டாக்டர் கிட்டப் போய், ரத்த அழுத்தம் எப்படி இருக்குன்னு பாத்துக்குங்க!'' என்றாள் அக்கறையுடன்.

''நான் நல்லா இருக்கேம்மா - உன்னோட புண்ணியத்தில.... உங்க அப்பா, அம்மாவைப் பாக்கணுமே'' என்றார் தர்மலிங்கம்.

மானசா, தன் பெற்றோர்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அலமேலு, ராஜேசுவரியிடம், ''நானே உங்களைப் பாக்கணும்னு, மானுகிட்ட சொல்லிட்டே இருந்தேன். எப்படி இருக்கீங்கம்மா? சார் நல்லா இருக்காங்களா?'' என்று விசாரித்தார்.

பிறகு வெங்கடேசனும் தர்மலிங்கமும் தங்களின் தொழில் பற்றிக் பேசிக்கொண்டிருந்தார்கள். பொதுப்பணித் துறையில், தன் பணியைப் பற்றி, அவரிடம் வெங்கடேசன் கூறிக் கொண்டிருந்தார்.

ராஜேசுவரி அலமேலுவிடம், ''மானசா ரொம்ப நல்ல பொண்ணுங்க! அவளை எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். ஐயாவோட உயிரைக் காப்பாத்தினதே அவதான்.... அத, எங்களாலே மறக்கவே முடியலை!'' பெருமையாகக் கூறினார்.

''மனுஷங்க ஒருத்தருக்கொருத்தர் இந்த உதவிகூட செய்யலைன்னா, அப்புறம் என்னம்மா இருக்கு? நீங்க அவங்க ரெண்டு பேரையும், அப்படிப் பாத்துக்கிட்டீங்கன்னு ரெண்டு பேருமே சொன்னாங்க. நாங்க அதுக்கு என்ன கைமாறு செய்யறது? நீங்க எங்க வீட்டுக்குக் கட்டாயம் வந்து, ஒரு வேளையாவது சாப்பிட்டுட்டுத்தான் போகணும்!''

''கட்டாயம் வரோம்மா! நாளைக்குக் காலையில, இன்னொரு கல்யாணம் இருக்கு. அதனால சாயந்தரமா வரோம்! ராத்திரிதான் நாங்க ஊருக்குக் கிளம்பறோம்.''

''உங்க வீட்டில சமையல், ரொம்ப வித்தியாசமா, ரொம்ப நல்லா இருக்கும்னு மானசா சொன்னா. உங்களைப்பத்தி அவ பேசாத நாளே கிடையாது!'' என்று அலமேலு கூறியவுடன், அவர் பாசத்துடன் மானசாவை அணைத்துக் கொண்டார்.

''அம்மா! சுதா தனியா இருக்கா.... நான் மேடைக்குப் போறேன்'' என்று மானசா கிளம்பியபோது, சுதா மேடையிலிருந்தே அவர்களைப் பார்த்து உற்சாகமாகக் கை அசைத்துச் சிரித்தாள்.

அன்று மானசா, உற்சவச் சிலையினைப் போன்ற அழகுடன் மிளிர்ந்தாள். அழகிய இளம் நீலப் பட்டணிந்து, இடைவரை நீண்ட கூந்தல் தோகையாய் விரிய, தங்க நகைகள் அவள் அழகிற்கு அழகு சேர்க்க, மென்மையான எழிலுடன் இருந்தாள்.

மேடையேறிச் செல்லும் அவளையே பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ராஜேசுவரி, ஒரு பெருமூச்சுடன் திரும்பினார்.

''நான் என்னென்னவோ கற்பனை எல்லாம் பண்ணிட்டேம்மா. நேரடியாவே உங்ககிட்டே சொல்றேன்! மானசாவை, எங்க வீட்டு மருமகளாக்கிக்கணும் அப்படின்னு, நான் ரொம்ப ஆசைப்பட்டேன். ஆனா, எங்க சித்துதான், கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னுட்டானே!'' என்றார் அலமேலுவிடம்.

புரியாமல் விழித்த அலமேலுவிடம், சித்துவைப் பற்றிய எல்லா விபரங்களையும் ராஜேசுவரி மெதுவாகக் கூறினார்.

''இந்தக் கல்யாணத்துக்கு, சுதா போனிலே கூப்பிட்டா! எங்க கூட வாப்பான்னா, சித்து வரமாட்டேன்னுட்டான். அந்தக் கடவுள்தான் எங்க வீட்டில விளக்கேத்தணும்'' என்றபோது, அவர் முகம் பெரும் கவலையைச் சுமந்திருந்தது.

''நீங்க கவலைப்படாதீங்கம்மா! எல்லாம், நடக்க வேண்டிய நேரத்துல நல்லா நடக்கும்! உங்க பையனுக்குன்னு ஒரு பொண்ணு நிச்சயமா பிறந்திருப்பா! எல்லாம் நல்லபடியா நடக்கும்மா.... எங்க மானுகூட, இப்பக்

கல்யாணமே வேணாம்னு ஒரே பிடிவாதமா இருக்கா. அவருக்கும் அதான் வருத்தம்.... என்ன பண்றது?'' என்றார் அலமேலு.

''நாம பெரியவங்க படற கஷ்டம், இந்த சின்ன பிள்ளைங்களுக்கு தெரிய மாட்டேங்குது.'' பெருமூச்செறிந்தார் ராஜேசுவரி.

வரவேற்பு முடிந்ததும், பரிசளித்த பிறகு, நாளை மானசாவின் வீட்டுக்கு வருவதாகக்கூறிவிட்டு, தர்மலிங்கமும் ராஜேசுவரியும் கிளம்பிச் சென்றனர்.

அன்றிரவு, காரில் வீட்டுக்குத் திரும்பி வரும்போது ராஜேசுவரி அம்மா சித்துவைப் பற்றிக் கூறியதை தன் கணவரிடம் கூறிக் கொண்டே வந்தார் அலமேலு.

கேட்டுக் கொண்டே வந்த மானசாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன்னைப் போலவே பெரியவர்களுக்கும் ஆசை இருந்திருக்கிறது என்ற நினைவே இனித்தது.

ஆனால், யாருக்கு இருக்கவேண்டுமோ, அவனுக்கு அந்த விருப்பம் இல்லையே என்ற தவிப்பில் கண்ணோரம் நீர் கசிந்தது.

உடனே, வெளிப்புறம் திரும்பிக் கொண்டாள் அவள்.

அலமேலு, ஓரப் பார்வையில் அவள் கலக்கத்தை கவனித்து விட்டார். அவர் மனம் யோசனையில் ஆழ்ந்து, மனதிலிருந்த விடை தெரியாத கேள்விக்கு ஒரு விடை கிடைத்தது போலிருந்தது.

மறுநாள் திருமணத்தின்போது, பொழுது இனிமையாய் சென்றது.

ஏற்கெனவே அறிமுகம்ஆகி இருந்ததால், சுதாவும் செல்வமும் பேசுவதும், சீண்டிக் கொள்வதும், மானசாவின் மனதில் பெரும் ஏக்கத்தைப் படரச்செய்து, சித்தார்த்தின் நினைவை அவளுக்குள் அதிகமாக விதைத்தன.

அங்கேயே மதியம் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்த மானசா ஓய்வெடுத்துவிட்டு எழுந்து தயாராகி, தர்மலிங்கம் தம்பதிகளுக்காகக் காத்திருந்தாள்.

அலமேலுவும், நிறைய டிபன் வகைகளைச் செய்து வைத்து விட்டு ஆவலுடன் காத்திருந்தார்.

ஐந்து மணிக்கு வந்த இருவரும், வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இயல்பாக எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்தனர்.

''அங்கே உங்க வீடு, ரொம்பப் பெரிசா இருக்கும்னு மானு சொல்லுவா! ரொம்ப அழகா, அவங்க பாட்டி வீட்டிலே இருக்கற மாதிரி - பின்னாடி பெரிய ஊஞ்சல் ஒண்ணு இருந்ததா சொல்லுவா. உங்களைப் பத்தி அடிக்கடி நாங்க பேசிப்போம்.''

''ஏம்மா மானசா! நீ எப்பவாவது, போனிலயாவது, என்கூடப் பேசலாமில்லை.... பேசவே மாட்டேன்கிறே! அந்த ஊஞ்சல், நீ இல்லாம உக்கார ஆளில்லாமே வெறிச்சுன்னு இருக்கு....!''

அமைதியாகப் புன்னகைத்த மானசாவின் மனதில், ஊஞ்சல் என்றதுமே சித்தார்த்தின் நினைவு சுடுகின்ற பனித்துளியாய்!



'ஏன், என்னைத் தன் நினைவுகளாலேயே வதைக்கிறான்' என்று அவ மீது வந்த கோபம், தன் மீதே திரும்பியது.

பெரியவர்கள், வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் மான மட்டும் ஏனோ மௌனமாகவே இருந்தாள்.

தர்மலிங்கமும், ராஜேசுவரியும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பியபோ அவருக்கு ஒரு புடவையைத் தாம்பூலத்துடன் வைத்துக் கொடுத்த அலமேலு.

அவர்கள் விடைபெற்றுச் சென்ற பிறகு, சுதாவுக்குப் போன் செய்து பே கிண்டல் செய்து அவளை சிவக்க வைத்துவிட்டு, மானசா தன் அறைக் வந்தபோது, வெளியே மழை தூற ஆரம்பித்திருந்தது.

ஜன்னலருகில் சென்று நின்று, பூமியெங்கும் பரவி வைர வினியோக செய்து கொண்டிருந்த மழையை ரசித்துக் கொண்டிருந்தாள் மானசா.

அப்போது, மழை தன்னுள் ஏற்படுத்துகின்ற எல்லா சலனங்களையும் சித்தார்த்தும் தன்னுள் ஏற்படுத்துவது புரிந்தது....! மழை நின்ற பிறகும், அ தன் தடத்தை விட்டுச் செல்வது போல, அவள் மனதிலும் அவன் தடங்க

மழை நின்றும், இலைகளிலிருந்து விடாமல் சொட்டிக் கொண்டிருக்கு நீர்த்துளியைப் போல, அவனைப் பிரிந்து வந்த பிறகும் அவ நினைவுத்துளிகள் தன்னுள் சாசுவதமாகி இருப்பது இன்று புரிந்தது.

ஒரு நெடுமூச்சுடன் திரும்பியபோது, அங்கு அலமேலு அவளை பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்.

''மானு! நான் உன்கிட்ட ஒண்ணு கேக்கணும்டா! நீ அந்த சித்தார்த் விரும்பறியா? அப்படின்னா சொல்லு....! நான் அப்பாவை விட்டு, அந்த தம்பிகிட்டயே நேரா பேசச் சொல்றேன்!'' என்ற போது அவர் குரல், பெரு பரிதவிப்புடன் இருந்தது.

அவளின் நிலை, அந்தத் தாய்க்குப் புரிந்தது.

மெதுவாக நிமிர்ந்த மானசா, ''அம்மா! இந்த விஷயத்தைப் பத்தி, இனிமே யாரும் பேச வேண்டாம்..., அப்பா கூட தலையிட வேண்டாம். எனக்கு ஒ வருஷம் டைம் கொடுங்கம்மா.... ப்ளீஸ்! முதல்லே, நான் ஒரு வேலைக்கு போறேன். அப்புறமா பாக்கலாம்! இப்ப எனக்கு மனசே சரியில்லை. இந்த பேச்சை இன்னியோட விட்டுடுங்க'' என்றாள்.

தன் மகள் காயப்படக்கூடாதென்ற தவிப்புடன், ''சரிடா! நா அப்பாகிட்ட ஒண்ணும் சொல்லலை. அந்த அம்மா பேசினதை அவர்கிட் சொன்னப்போ, 'இது மாதிரி சம்பந்தம் கிடைக்கக் குடுத் வச்சிருக்கணும்'னு, உங்கப்பாதான் சொன்னார். எவ்வளவு பெ மனுஷங்க.... ஒரு மலை கிராமமே அவங்களுக்குச் சொந்தமாமே? எவ் எளிமையா இருக்காங்கன்னு ரொம்ப ஆச்சர்யப்பட்டார். அதான் உன்கி கேட்டேன்'' என்று கூறி, அவள் தலையை வருடி முத்தமிட்டு விட் சென்றார்அவர்.

புதிதாக வந்திருந்த அவரது கதையைப் பாராட்டி எழுதியவள், இந்த ஐந்து மாதங்களாகத் தான் எவ்வளவோ முயற்சி செய்தும் தன்னால் சித்தார்த்தை மறக்க முடியவில்லை என்பதையும், தன் மனம் மிகவும் உடைந்து போயிருப்பதையும் எழுதினாள்.

ஒரு பெண் தன்னைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து சென்றதால், அன்று அவனுடைய நண்பன் இறந்தான்.... இன்று சித்தார்த், தன்னைப் புரிந்து கொள்ளாமல் தன்னைப் பிரிந்து விட்டதால், தானும் அதைப்போல் ஒரு முடிவெடுத்து விடுவோமோ என்ற பயம், சிலநாட்களாக தனக்குள்ளேயே படர்வதையும் வருத்தத்துடன் ஏடுகளில் வடித்தாள்.

இங்கு தன் மனதில் விளைந்த பூகம்பத்தின் விளைவையும், அதனால் சிதறிக் கிடக்கும் தன் மனத் துகள்களையும், நகலெடுத்து அனுப்பினால், அதன் பிறகாவது அவன் தன்னுடைய காதலைப் புரிந்து கொண்டு தன்னை விரும்புவானாவென்று தோன்றுவதையும் ஏக்கத்துடன் எழுதினாள்.

அவனைப் போல் இன்னொருத்தர் இருக்க முடியாதபடி, அவன் உயர்ந்து நிற்பதையும், அவனைப் பற்றி நினைக்கும் போதே தன் மனதில் எண்ணங்களாக நிறைவதையும் கண்ணீர் மல்க எழுதியவள், கட்டாயம் அவரிடமிருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும், இதுவே, தான் அவருக்கு எழுதும் கடைசிக் கடிதமாகவும் இருக்கும் என்றும் முடித்தாள்.

பிறகும் உறக்கம் வராமல் போகவே, ராஜேசுவரி அம்மா கூறியது நினைவில் வர, அவரிடம் பேசலாமென்று எண்ணி, அவர் வீட்டு எண்களை போனில் அழுத்தினாள் அவள்.

மணி அடித்தவுடன், எதிர் முனையில் எடுத்த சித்தார்த்தின் குரல், ஆழமான கம்பீரத்துடன் ''ஹலோ'' என்று, அவள் இதயத்தை வருடிச்சென்றது.

ஒரு நிமிடம், அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவன் அதற்குள் பொறுமை இழந்து ''ஹலோ'' என்று இரைந்தான்.

''நான்.... மானசா!'' தவிப்புடன் மெதுவாக அவள் கூறியபோது, அதற்கு மேல் எந்த சப்தமும் இல்லாமல், ஒரு சீரலான மூச்சு மட்டுமே கேட்டது.... எதிர் முனையிலிருந்து!

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, ராஜேசுவரி அம்மா அவளுடன் பேசினார்.

அவரிடம் பேசி முடித்து வைத்துவிட்டுப் படுத்தபோது, ஏனோ அவளால் நிம்மதியாக உறங்க முடிந்தது.

மறு நாளிலிருந்து, ஏதோ இனம் புரியாத அமைதி தன்னுள் படர்வதை உணர்ந்தாள் மானசா.

தன்னுடைய மனபாரத்தை சுமேதனிடம் இறக்கி வைத்தது, அவளுள் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியிருந்தது.

ஏனோ சித்தார்த்தின் குரல், காதுகளில் ஒலித்தபடியே இருந்தாலும் மனம் சலனங்களற்ற குளமாய்!



அன்று காலையில், சித்தார்த்தனக்கு வந்திருந்த கடிதங்களைப் படித் கொண்டிருந்த போதுதான், அதில் மானசாவிடமிருந்தும் ஒரு கடி வந்திருப்பதை அறிந்தான்.

பலத்த யோசனையுடனும், இறுக்கத்துடனும் அதை எடுத் பிரித்தபோது அவளுடைய கடிதம், ஆயிரம் அதிர்ச்சிச் செய்திகளை அவனு வாசித்தன.... உள்ளத்தையும், உடலையும் ஒரு சேரப் பதறச் செய்தன.

அந்தக் கடிதத்தைப் படித்தவுடனே, அவன் மனம் ஏதோ ஒரு வித குற்றவுணர்ச்சியில் குலுங்கி, ராமுவின் மரணத்தை உடனே கண் மு கொண்டு வருவதாய்!

அதன் வலி அகலாத ரணமாய் இன்றும் மனதில் படியச் செய் வாழ்க்கையில் முதன்முதலாகப் பெரும் குழப்பம் சூழ்ந்துவிட, அவ உள்ளத்தை உருக்கியது கடிதத்தின் சாரம்!

தன் கண்மூடித்தனமான பிடிவாதத்தினால் ஒரு உயிர் பலியா விடுமோவென்ற பயம் சஞ்சலமாய் மாறி மனம் பதறிவிட, ஒரு மரண தன்னுள் இன்னும் ஆறாமலிருப்பதும் புரிந்தது.

இனி ஒரு இழப்பைத் தன்னால் தாங்க முடியுமென்று தோன்றவில்லை

ஒரு பெண், தன்னால் அப்படி ஒரு விபரீத முடிவை எடுத்துவிட்டா என்ன செய்வதென்ற விடைதெரியா கேள்வி அவனைப் பெரிது உலுக்குவதாய்!

முன்பு, தன் காதலி புறக்கணித்ததால் ராமு இறந்தது போல், இன்று த புறக்கணிப்பு இன்னொரு மரணத்திற்கு வித்தாகி விட்டால் தன்னால் உயி வாழும் வரை நிம்மதியாக இருக்க முடியாதென்பதும் புரிந்தது.

அவன் மனமும் உயிரும் உருகி, உணர்வுகள் மரத்துப் போயின.

அந்த நிலையில், அவளுக்காகத் தான் ஏன் இவ்வளவு பரிதவிக்கிறோ என்று ஆழ்ந்து யோசித்தபோதுதான், தன் மனமே மெல்ல மெல் அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

அவனுடைய இறுகிப்போன இதயப்பாறையிலும், காதல் ஈரம் கசி ஆரம்பிக்க - அன்று புரியாத பல விஷயங்கள்.... இன்று புரிவதாய்....!

மானசா ஓசையின்றித் தன் மனதில், ஒரு மௌன சங்கீதமா நுழைந்திருப்பதும், தனக்குள் அமைதிப் புரட்சி ஒன்று நடப்பதையும் இன் புரிந்து கொண்டான் சித்தார்த்.

ரகசியமாய் தன் இதயத்திற்குள் காதல் விதையைத் தூவிவிட்டு, அவ மௌனமாகப் பிரிந்து சென்றிருப்பதும், இன்று அது மரமாகி, நே மலர்களைச் சுமப்பதும் இப்போது புரிந்தது!

வாழ்க்கையில் காதல் என்பது வரமா.... சாபமா என்று சித்தார்த்துக் புரியவில்லை.

ஆனால் கல் மனிதரையும், பொடிப் பொடியாகச் சிதற வைக்கும் வித் காதலுக்குத் தெரிந்திருந்தது.

அதற்குப் பிறகு, தொடர்ந்து வந்த நாட்களும் பெரும் துன்பத்தையே அவளுக்குப் பரிசாக அளித்தன.

சுதா இருந்தாலாவது, அடிக்கடி வந்து பேசிக் கொண்டிருப்பாள். அவளும் இப்போது மாமியார் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

காரைக்குடியிலிருந்து நேற்று இரவு பேசியவள், இன்னும் ஒரு வாரத்தில் செல்வம் டெல்லிக்கு செல்லப்போவதாகவும், அங்கு வீடு பார்த்துவிட்டு, ஆடி முடிந்த பிறகு, தன்னை வந்து அழைத்துச்செல்வான் என்றும் கூறினாள்.

மானசாவுக்கு தனிமையே பெரும் தவமாய் இருக்க, சித்தார்த்தின் நினைவுகள், உள்ளே பெரு நெருப்பாய்த் தகித்தன.

தர்மலிங்கமும் ராஜேசுவரியும், ஊருக்குப் போய்ச் சேர்ந்த மறுநாள் மதியம், சித்தார்த்திற்கு சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்த ராஜேசுவரி, மெதுவாக அவனிடம் ஆரம்பித்தார்.

''நேத்து சுதாவோட கல்யாணம் ரொம்ப நல்லா நடந்தது சித்து! சுதா, உன்னை ஏன் வரலைன்னு ரொம்ப விசாரிச்சா.... எல்லாருமே கேட்டாங்க!''

''ம்....!'' என்ற தலையசைப்புடன், மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான், அவன்.

அவனையே ஓரக்கண்ணால் நோக்கிய ராஜேசுவரி, ''நேத்து ராத்திரி, நாங்க ரெண்டு பேரும் மானசாவோட வீட்டிலதான் சாப்பிட்டோம். கல்யாணத்துல, மானசாதான் சுதாவோட இருந்து எல்லா வேலைகளையும் செஞ்சா. ரொம்ப நல்ல பொண்ணு! இங்க வந்துட்டுப் போனதுக்கு, இப்ப ரொம்ப மெலிஞ்சிருக்கா! இல்லைங்க....?'' என்றார் அவர்.

சித்தார்த்தின் முகத்தில் எந்தவித மாற்றமும் இல்லையென்றாலும், எண்ண ரேகைகள் யோசனையாய்ப் பரவி, அவன் புருவங்கள் நெரிந்தன.

ராஜேசுவரி இயல்பாகப் பேச்சைத் தொடர்ந்தார். ''சித்து! உன்னை மாதிரிதான் போல இருக்கு - அந்தப் பொண்ணு மானசாவும்! இப்பக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்கிறாளாம். அவங்கம்மா சொல்லி, ரொம்ப வருத்தப்பட்டாங்க! அவ அழகுக்கு, நிறைய வரன் வருதாம். இந்தப் பொண்ணுதான் ஒத்துக்க மாட்டேங்குதாம்! இந்த விஷயத்துல மட்டும், உன்னை மாதிரியே, அவளுக்கும் ரொம்பப் பிடிவாதம் போலிருக்கு'' என்றார்.

தர்மலிங்கமும் அப்போது அவனையே கவனிக்க, விருட்டென்று வேகமாக எழுந்து, பாதி சாப்பாட்டிலேயே கை கழுவி விட்டுச் சென்றான் சித்தார்த்.

இருவரும், ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் நோக்கினாலும், அவன் சாப்பிட்டு முடித்த பிறகு இதைப் பற்றிப் பேசி இருந்திருக்கலாமோ என்று இருவருக்குமே தோன்றியது.

என்னவோ புரிந்தது போலவும்.... புரியாதது போலவும் இருந்தது.

தன்னுடைய அறைக்குச் சென்ற சித்தார்த்தின் மனம், முதன் முறையாக மானசாவின் நினைவைத் தத்தெடுத்தது.

என்ன பெண் இவள்.... எவ்வளவு சொன்னாலும் புரிந்து கொள்ளாமல், தன் வாழ்க்கையுடன் மௌன யுத்தம் செய்கிறாளென்று, எரிச்சலாக வந்தது அவனுக்கு!

அவளுக்குக் கடிதம் எழுதக் கூடாதென்ற முடிவு மனதில் உறுதியாக இருந்ததால், ஒரு கணம் என்ன செய்வதென்றே புரியவில்லை.

பெண்களே இப்படித் தானோ என்று தோன்றியது. தன் விருப்பத்திற்கு ஆண்களை வளைத்து, அடிமைப்படுத்தி, பிறகு அழித்துவிடும் வல்லமை கொண்டவர்களோ என்றும், பெண்ணினத்தின் மேலேயே வெறுப்பு வந்தது.

ஆனால், தன் நினைவுகளாலேயே அவனை சிதறடிக்க ஆரம்பித்திருந்தாள் மானசா.

## 10

மானசா, சித்தார்த்தைப் பிரிந்துவந்து இன்றுடன் ஐந்து மாதங்கள் ஆகின்றன.

பார்வையிலிருந்து மறைந்து விடும் எந்த விஷயமும், நினைவில் இருந்தும் நீங்கிவிடும் எனும் மொழி பொய்யென்று இன்று தெரிந்தது.

அன்று தென்றலாய் மனதின் உள்ளே நுழைந்தவன், இன்று அவளுக்குள் பெரும் புயலாய் மையம் கொண்டிருந்தான்.

தன் இதயம் சுவாசிப்பதே சித்தார்த்துக்காகத்தானோ என்று தோன்றியது.

கடந்த ஒரு மாதமாக, மானசா ஒரு பள்ளியில் ஆசிரியையாக வேலைக்குப் போக ஆரம்பித்திருந்தாள். அவளுக்கும் ஒரு மாற்றம் தேவையாக இருந்தது.

அவள் வேலைக்குப் போகிறேன் என்றதுமே, வெங்கடேசன் முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் மானசா பிடிவாதமாக இருந்தாள்.

அவளின் மனநிலையை நன்றாக உணர்ந்திருந்ததால், அலமேலு தன் கணவரிடம் எடுத்துக்கூறி அவரைச் சம்மதிக்க வைத்தார்.

பகலில் பள்ளிக் குழந்தைகளுடனும், மற்ற நேரங்கள் அலமேலுவுடனும் பொழுது மெதுவாகச் செல்ல, இரவின் தனிமையைத்தான் அவள் பெரும் கொடுமையாக உணர்ந்தாள்.

சித்தார்த்தின் நினைவுகள் அவளை உறங்கவிடாமல் செய்தன. தனக்குள் கனவுகளை விதைத்தவனே, தன்னுடைய உறக்கத்தைப் பறித்துக் கொண்ட மாயம் மட்டும் அவளுக்குப் புரியவில்லை.

திடீரென்று மனதில் ஒரு எண்ணம் தோன்றவும், எழுந்து அமர்ந்தாள் மானசா.

எழுத்தாளர் சுமேதனுக்குக் கடைசியாக ஒரு கடிதம் எழுதலாமென்று தோன்றவும், யோசனையுடன் எழுத ஆரம்பித்தாள்.

புதிதாக வந்திருந்த அவரது கதையைப் பாராட்டி எழுதியவள், இந்த ஐந்து மாதங்களாகத் தான் எவ்வளவோ முயற்சி செய்தும் தன்னால் சித்தார்த்தை மறக்க முடியவில்லை என்பதையும், தன் மனம் மிகவும் உடைந்து போயிருப்பதையும் எழுதினாள்.

ஒரு பெண் தன்னைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து சென்றதால், அன்று அவனுடைய நண்பன் இறந்தான்.... இன்று சித்தார்த், தன்னைப் புரிந்து கொள்ளாமல் தன்னைப் பிரிந்து விட்டதால், தானும் அதைப்போல் ஒரு முடிவெடுத்து விடுவோமோ என்ற பயம், சிலநாட்களாக தனக்குள்ளேயே படர்வதையும் வருத்தத்துடன் ஏடுகளில் வடித்தாள்.

இங்கு தன் மனதில் விளைந்த பூகம்பத்தின் விளைவையும், அதனால் சிதறிக் கிடக்கும் தன் மனத் துகள்களையும், நகலெடுத்து அனுப்பினால், அதன் பிறகாவது அவன் தன்னுடைய காதலைப் புரிந்து கொண்டு தன்னை விரும்புவானாவென்று தோன்றுவதையும் ஏக்கத்துடன் எழுதினாள்.

அவனைப்போல் இன்னொருத்தர் இருக்க முடியாதபடி, அவன் உயர்ந்து நிற்பதையும், அவனைப் பற்றி நினைக்கும் போதே தன் மனதில் எண்ணங்களாக நிறைவதையும் கண்ணீர் மல்க எழுதியவள், கட்டாயம் அவரிடமிருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும், இதுவே, தான் அவருக்கு எழுதும் கடைசிக் கடிதமாகவும் இருக்கும் என்றும் முடித்தாள்.

பிறகும் உறக்கம் வராமல் போகவே, ராஜேசுவரி அம்மா கூறியது நினைவில் வர, அவரிடம் பேசலாமென்று எண்ணி, அவர் வீட்டு எண்களை போனில் அழுத்தினாள் அவள்.

மணி அடித்தவுடன், எதிர் முனையில் எடுத்த சித்தார்த்தின் குரல், ஆழமான கம்பீரத்துடன் ''ஹலோ'' என்று, அவள் இதயத்தை வருடிச்சென்றது.

ஒரு நிமிடம், அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவன் அதற்குள் பொறுமை இழந்து ''ஹலோ'' என்று இரைந்தான்.

''நான்.... மானசா!'' தவிப்புடன் மெதுவாக அவள் கூறியபோது, அதற்கு மேல் எந்த சப்தமும் இல்லாமல், ஒரு சீரலான மூச்சு மட்டுமே கேட்டது.... எதிர் முனையிலிருந்து!

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, ராஜேசுவரி அம்மா அவளுடன் பேசினார்.

அவரிடம் பேசி முடித்து வைத்துவிட்டுப் படுத்தபோது, ஏனோ அவளால் நிம்மதியாக உறங்க முடிந்தது.

மறு நாளிலிருந்து, ஏதோ இனம் புரியாத அமைதி தன்னுள் படர்வதை உணர்ந்தாள் மானசா.

தன்னுடைய மனபாரத்தை சுமேதனிடம் இறக்கி வைத்தது, அவளுள் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியிருந்தது.

ஏனோ சித்தார்த்தின் குரல், காதுகளில் ஒலித்தபடியே இருந்தாலும் மனம் சலனங்களற்ற குளமாய்!



அன்று காலையில், சித்தார்த்தனக்கு வந்திருந்த கடிதங்களைப் படித்
கொண்டிருந்த போதுதான், அதில் மானசாவிடமிருந்தும் ஒரு கடி
வந்திருப்பதை அறிந்தான்.

பலத்த யோசனையுடனும், இறுக்கத்துடனும் அதை எடுத்
பிரித்தபோது அவளுடைய கடிதம், ஆயிரம் அதிர்ச்சிச் செய்திகளை அவனு
வாசித்தன.... உள்ளத்தையும், உடலையும் ஒரு சேரப் பதறச் செய்தன.

அந்தக் கடிதத்தைப் படித்தவுடனே, அவன் மனம் ஏதோ ஒரு வி
குற்றவுணர்ச்சியில் குலுங்கி, ராமுவின் மரணத்தை உடனே கண் மு
கொண்டு வருவதாய்!

அதன் வலி அகலாத ரணமாய் இன்றும் மனதில் படியச் செய்
வாழ்க்கையில் முதன்முதலாகப் பெரும் குழப்பம் சூழ்ந்துவிட, அவ
உள்ளத்தை உருக்கியது கடிதத்தின் சாரம்!

தன் கண்மூடித்தனமான பிடிவாதத்தினால் ஒரு உயிர் பலியா
விடுமோவென்ற பயம் சஞ்சலமாய் மாறி மனம் பதறிவிட, ஒரு மரண
தன்னுள் இன்னும் ஆறாமலிருப்பதும் புரிந்தது.

இனி ஒரு இழப்பைத் தன்னால் தாங்க முடியுமென்று தோன்றவில்லை

ஒரு பெண், தன்னால் அப்படி ஒரு விபரீத முடிவை எடுத்துவிட்டா
என்ன செய்வதென்ற விடைதெரியா கேள்வி அவனைப் பெரிது
உலுக்குவதாய்!

முன்பு, தன் காதலி புறக்கணித்ததால் ராமு இறந்தது போல், இன்று த
புறக்கணிப்பு இன்னொரு மரணத்திற்கு வித்தாகி விட்டால் தன்னால் உயி
வாழும் வரை நிம்மதியாக இருக்க முடியாதென்பதும் புரிந்தது.

அவன் மனமும் உயிரும் உருகி, உணர்வுகள் மரத்துப் போயின.

அந்த நிலையில், அவளுக்காகத் தான் ஏன் இவ்வளவு பரிதவிக்கிறோ
என்று ஆழ்ந்து யோசித்தபோதுதான், தன் மனமே மெல்ல மெல்
அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

அவனுடைய இறுகிப்போன இதயப்பாறையிலும், காதல் ஈரம் கசி
ஆரம்பிக்க - அன்று புரியாத பல விஷயங்கள்.... இன்று புரிவதாய்....!

மானசா ஓசையின்றித் தன் மனதில், ஒரு மௌன சங்கீதமா
நுழைந்திருப்பதும், தனக்குள் அமைதிப் புரட்சி ஒன்று நடப்பதையும் இன்
புரிந்து கொண்டான் சித்தார்த்.

ரகசியமாய் தன் இதயத்திற்குள் காதல் விதையைத் தூவிவிட்டு, அவ
மௌனமாகப் பிரிந்து சென்றிருப்பதும், இன்று அது மரமாகி, நே
மலர்களைச் சுமப்பதும் இப்போது புரிந்தது!

வாழ்க்கையில் காதல் என்பது வரமா.... சாபமா என்று சித்தார்த்துக்
புரியவில்லை.

ஆனால் கல் மனிதரையும், பொடிப் பொடியாகச் சிதற வைக்கும் வித்
காதலுக்குத் தெரிந்திருந்தது.

அவளைப் பார்த்த உடனே, தன்னை அவள் ஆட்படுத்திக் கொண்டு விடுவாளோ.... அவளிடம் தன்னை இழந்து விடுவோமோ என்ற பயம் தனக்குள் வந்ததையும், இன்று புரிந்து கொண்டான் அவன்.

அதனாலேயே அவளைக் கண்டதிலிருந்து, தான் அவள் மேல் காரணமின்றிக் கோபப்பட்டதும், அவளைத் தவறாகவே கணித்ததும், தன் இதயத்தை அன்றே அவளிடம் தொலைத்து விட்டதும், இன்று தாமதாய் புரிந்தது!

புழுதி படிந்து, மீட்டப் படாமலே இருந்த தன்னுடைய மன வீணையை புதையலாய்க் கண்டெடுத்துப் புதுப்பித்து மீட்டிய ஒரு தேவதையை எண்ணி, முதன் முதலாய் மனம் ஏங்கித் தவித்தது.

தன்னைப் பற்றி அவள் எழுதியிருந்த மன உணர்வுகள், அவளுடைய அன்பை அவனுக்கு முழுமையாய்ப் பறை சாற்றின.

சித்தார்த், உடனே தன்னுடைய லெட்டர் பேடை எடுத்து ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தான்.

தன் மனதின் வேகம் புரிந்து, அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது.... பிரமிப்பாகவும் கூட!

என் வாசகி மானசாவுக்கு,

உங்கள் கடிதம் படித்தேன்! உங்கள் கடிதத்திற்கான பதிலை நேரில் கூற ஆசைப்படுகிறேன். அடுத்த வாரம், எனக்கு சென்னையில் ஒரு பாராட்டு விழா நடக்க இருக்கிறது. இத்துடன், அதற்கான அழைப்பிதழை அனுப்பி உள்ளேன். என் பதிலுக்காகக் காத்திருப்பீர்கள் என்றும், நீங்கள் அங்கு கட்டாயம் வருவீர்கள் என்றும் எதிர்பார்க்கிறேன். - சுமேதன்

கடிதத்தை எழுதி முடித்துக் கூரியரில் அனுப்பிவிட்டு வந்தபோது, இந்த ஒரு வாரமும் மானசாவைப் பிரிந்து, தான் எப்படி இருக்கப் போகிறோம் என்ற தவிப்பு அவனைப் பெரிதும் ஆக்ரமித்தது!

காத்திருப்பதன் கொடுமை, இன்று அவனுக்குப் புரிந்தது! தான் அவளைப் புரிந்து கொள்ளாமல் அவள் மனதைக் காயப்படுத்தியதற்கு, ஒரு வாரப் பிரிவே பெரும் தண்டனையாய் தோன்றியது.

எல்லாம் இருந்த போதும், அவள் என்னருகில் இல்லையே என்ற வேதனை, அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிவதை பிரமிப்புடன் உணர்ந்தான்அவன்.

புதிதாய் காதலைச்சுமந்த மனம், தனக்குள் மாற்றம் தந்த அவளைத் தேடிக் காத தூரம் அலைந்தது.

ஆனால் தர்மலிங்கத்திடமும் ராஜேசுவரியிடமும் சித்தார்த் எதையுமே கூறவில்லை. தன் மனதை, மானசாவிடமே முதலில் வெளியிட வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.

அந்த வாரம் முழுவதும்,.... ஊஞ்சலைப் பார்க்கும் போதும்.... காலையில் உலாவச் செல்லும் போதும்.... ஏரிக் கரையிலும்.... குன்றின் உச்சியிலும்..... தோட்டத்து பெஞ்சிலும்.... இப்படி எல்லா இடங்களிலும் அவள் உருவமே தெரிந்தது!

அவனுடைய நினைவுகள், அவளை நிஜமாய் செதுக்க, மனதில் சிறகு விரித்த சிற்பமாய் அவள்!

அன்று காலையில், மானசாவின் பெயருக்கு ஒரு குரியர் வந்திருந்தது. அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பிக்கும் போதே, அவள் மனம் முழுவதும் சந்தோஷப் பூக்கள் தம் இதழ் விரித்தன.

எழுத்தாளர் சுமேதனை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆவல் மனதினுள் கிளர்ந்தது. விழாவிற்குக் கட்டாயம் செல்லவேண்டும் என்று முடிவு செய்தாள், அவள்.

அந்த ஒரு வாரமும், மனம் பரபரப்பாக இருந்தது மானசாவுக்கு!

அன்று மாலையில்தான், சுமேதனுக்குப் பாராட்டு விழா! காலையிலேயே, அப்பா அம்மாவிடம் கூறி இருந்ததால், பள்ளியிலிருந்து வந்த உடனே தயாராகி இருவருடனும் கிளம்பிச் சென்றாள்.

விழா முடிந்ததும், எழுத்தாளர் சுமேதனைப் பார்த்துவிட்டுத்தான் செல்வது என்ற முடிவை அப்பாவிடமும் கூறினாள்.

''அப்பா....! விழா முடிய எவ்வளவு நேரமானாலும், அவரைப் பார்த்துப் பேசி விட்டுத்தான் போகணும்ப்பா.... அவர்கிட்டே நான் ஆட்டோகிராஃப் வாங்கணும். சரியா?'' - அவள் குரலில் ஆர்வமிருந்தது.

''சரிடா.... உன் சந்தோஷம் அதுதான்னா, நிச்சயம் நாங்க காத்திட்டுருக்கோம். விழா முடிஞ்சப்புறம், நாம போய் பேசிட்டு வரலாம்'' என்று அப்பா கூறியவுடன் மனம் லேசாகிப் பறந்தது.

தன் மனதிற்குப் பிடித்த எழுத்தாளரை, முதன்முதலில் சந்திக்கப் போகிறோம் என்ற பரவசமும், அவரிடமிருந்து இன்று தனக்கு ஒரு நல்ல ஆலோசனை கிடைக்கப்போகிற நிம்மதியும், அவளுக்குள் பரவின.

ஒரு நல்ல சிற்பி செதுக்கிய சிலை போல் அவருடைய ஒவ்வொரு கதைகளும், ஒரு காவியமாய் நினைவில் படர்ந்தது.... மானசாவுக்குள்!

விழா ஆரம்பிக்கும் முன்பே, ஒவ்வொரு எழுத்தாளராக மேடைக்கு வந்து அமர்ந்தனர்.

இவர்களில் சுமேதன் யாராக இருக்கும் என்று, அவள் விழிகள் பரபரப்புடன் தேடி அலைந்தன. அவர்களுடைய இருக்கைகள், மூன்றாவது வரிசையில் இருந்ததால், எல்லோரையும் அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

சித்தார்த்தைப் பற்றிய எண்ணங்கள், திடீரென அவளை ஆக்கிரமித்து, திசை திருப்பின.... அவன் இங்கு வருவானா என்ற சிறு ஆவலும் எதிர்பார்ப்பும் மனதின் ஓரம் வந்தன.

அந்த நினைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்து பார்த்தால், அங்கு அவளின்

எண்ணங்களுக்கு நாயகனான சித்தார்த்தே மேடை ஏறிக்கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் மானசாவின் கண்கள் விரிந்து, நொடியும் அவனை விட்டு அகலாமல் அவன் மீதே பதிந்தன.

தாகத்துடனிருந்த பறவை ஒன்று, தண்ணீரை ஆவலுடன் பருகுவதைப் போலிருந்தது அவள் நிலையும். அவனை விழிகளாலேயே பருகினாள் மானசா.

சக எழுத்தாளன் என்ற முறையில் அவனும் அழைக்கப்பட்டிருப்பானோ என்று தோன்றும் போதே, சித்தார்த் மேடையேறி அனைவருக்கும் வணக்கம் கூறிவிட்டு, நடுவிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவனைக் கண்டதும், கூட்டத்தில் எழுந்த சலசலப்பும், அவனுக்கு அளிக்கப்பட்ட மாலை மரியாதைகளும், அவன்தான் 'சுமேதன்' என்பதை அவளுக்குப் புரிய வைத்தன.

நிஜங்களின் நிதர்சனம், அவள் முகத்தில் அறைந்த அந்த நொடியில் மானசாவின் மனம் அதிர்ந்து போனது.

இவனா சுமேதன்....? இவனிடமா, தன்னுடைய உணர்ச்சிகளைக் கொட்டினோம். அவனைப் பற்றி அவனுக்கே எழுதி இருந்திருக்கிறோமே என்ற குற்ற உணர்வு, அவளைப் படபடக்கச் செய்தது.

தன்னைப் பற்றி அவன் எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பான் என்ற வேதனையில் துவண்டு போனாள் அவள்!

நிச்சயமாக அந்தக் கடிதங்கள், அவனுக்குத் தன்மீது வெறுப்பையும் கோபத்தையும் அதிகப்படுத்தி இருக்கும் என்று தோன்றினாலும், 'என் 'சித்து'வா சுமேதன்?' என்ற பரவசம் உடலெங்கும் பரவி உருகச் செய்தது.

உயிர்க் காதலின் விளைவாய் தான் எழுதிய கடிதங்கள், அவனிடம் மதிப்பிழந்து போனதோ என்ற ஏக்கமும் தவிப்பாய் அவளுள் படர்ந்தது.

மனதில் யாரோ சூட்டுக் கோலால் இழுத்தது போல், ரணமாய் ஒரு வலி!

ஆனாலும்; அற்புதமாய் தன் எண்ணப் பதிவுகளை எழுத்துக்களாய் வடித்து கதையாய் செதுக்கி, வாசகர்களின் மனதை ஆளும் ஒரு பெரிய எழுத்தாளரையா தான் காதலித்திருக்கிறோம் என்ற பிரமிப்பு மனதிற்குள் ஊடுருவ, மனம் கசிந்து போனது.

## 11

மேடையில் அமர்ந்திருந்த சித்தார்த்தின் விழிகளும், மானசாவைத் தேடி அலை பாய்ந்தன.

பிறகு அவள்மீது கூர்மையுடன் பதிந்து ஊடுருவி, புதிய உலகமொன்றை அவனுக்கு அறிமுகம் செய்தன.

இன்றுதான் புதிதாய்ப் பார்ப்பது போல், அவளைப் பார்வையாலேயே வருடினான் சித்தார்த்.

அவன் விழிகள் தீக்குச்சியாய் அவளை உரச, எரிமலையின் அடிவாரத்தில் நிற்பது போல் தகித்தது மானசாவுக்கு!

நீண்டவும் முடியாமல், விலகவும் மனமில்லாமல், ஒரு தவிப்பு நிலை தன்னுள் படர்வதை உணர்ந்தாள் அவள்.

அவனுடைய பார்வை, சுடுகின்ற பனித்துளியாய் உள்ளிறங்க, தலை விண்ணென்று தெறித்து, அவள் விழியோரம் நீர் கசிந்தது.

சித்தார்த்துக்குப் பரிசு கொடுத்த உடனே எழுந்த மானசா, ''அப்பா! எனக்கு ரொம்பத் தலை வலிக்குது. நாம் கிளம்பலாமா? எனக்கு, உடனே விட்டுக்குப் போகணும்'' என்று கூறிவிட்டு, எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

இப்போது, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவளால் இனம் பிரிக்க முடியவில்லை.

'சித்தார்த்'தான் 'சுமேதன்' என்பதையும் அவளால் நம்பமுடியவில்லை.

அன்று காரில் செல்லும்போது, தன் பெயரிலேயேதான், பத்திரிகைகளில் கதை எழுதுவதாக ஏன் கூறினான் என்ற சந்தேகம், எழுந்த வேகத்திலேயே அழிந்தது.

புத்தருக்கு, சித்தார்த் என்பதைத் தவிர, சுமேதன், போதிசத்வன், சாக்கியமுனி, கௌதமன் என்று பல பெயர்கள் இருப்பது, அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது.

அதனால்தான், ''தன் பெயரிலேயே'' என்று, அழுத்திக் கூறி இருக்கிறான் என்பதும் இன்று புரிந்தது.

பெண்களையே பிடிக்காதவன்.... அவர்களிடம் சிறிதும் மதிப்பில்லாதவன்.... தன்னுடைய உணர்வுகளையும், அதன் புனிதத்தையும் எப்படிப் புரிந்து கொள்வானோ என்ற அச்சம், அவள் விழிகளில் மெல்லிய தீச்சுடராய்....!

திரும்பி வரும் வழியில், காரில் ஒலித்த பாடல், மனதை மிகவும் பாதித்து, விழியோரம் கண்ணீர் அரும்புகளை அறிமுகப்படுத்தியது.

**'ஒரு பொய்யாவது சொல் கண்ணே.**
**உன் காதல் நான்தான் என்று!**
**அந்த ஒரு சொல்லில் உயிர் வாழ்வேன்'**

மனம் இறுகிவிட வீட்டிற்குள் சென்றவுடன், ''அம்மா.... என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க.... நான் கொஞ்ச நேரம் படுக்கப் போறேன். ஏதும் ஃபோன் வந்தாக்கூட, நீங்களே பேசிடுங்க.... எனக்கு ரொம்பத் தலை வலிக்குது'' என்று கூறிவிட்டு, தன் அறைக்குள் சென்று, அவசரமாகக் கதவை மூடிக் கொண்டாள் மானசா.

வெங்கடேசன் தன் மனைவியிடம் ''என்னடி இவ.... 'விழா முடிஞ்சுதான் வருவேன்.... அந்த எழுத்தாளர்கிட்டே பேசணும்' அப்படின்னெல்லாம் சொன்னா! திடீர்னு, தலைவலின்னு பாதியிலேயே எழுந்திரிச்சி வந்துட்டா! இந்தக் காலத்துப் பொண்ணுங்களைப் பத்தி, ஒண்ணுமே புரிஞ்சிக்க

முடியலை.... போ!'' என்று அலுத்துக் கொண்டார். அலமேலுவுக்கும் ஒன்றும் புரியவில்லை.

அங்கு விழா மேடையில் அமர்ந்திருந்த சித்தார்த்திற்கும், மானசாவின் விழிகளில் தெரிந்த உணர்ச்சியும், விழாவின் நடுவில் அவள் திடீரென்று எழுந்து சென்றதையும் கண்டதும் ஒன்றுமே புரியவில்லை.

தன் இதயமே தன்னை விட்டு நீங்கிச் செல்வதுபோல் வலித்தது.

அவளுக்கு, எப்படி தன்னைப் புரிய வைக்கப் போகிறோம் என்ற பயமும் உடனே அவளைப் பின் தொடர்ந்து செல்ல முடியாத சூழ்நிலையும் மனதில் அறைவதாய்!

விழா முடியும்வரை சித்தார்த்தின் மனம் அவன் வசமில்லை. அவளை உடனே சென்று பார்க்க வேண்டும் என்று மனம் துடித்தது.

காதலியின் அருமை, அவள் பிரிவில் அதிகமாய் தெரிந்தது. வாழ்க்கை பின் நோக்கிச் சென்று, அவளைத் தான் பார்த்த முதல் நாளிலிருந்து தொடங்காதா என்றிருந்தது.

இன்று, அவள் விழிபேசும் ரகசியங்களின் மொழி புரியாது, தவித்துத் திணறியது.... இதயம்!

விழா முடிந்தவுடன் வேகமாக இறங்கிச் சென்ற சித்தார்த், தர்மலிங்கத்தையும் ராஜேசுவரியையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்து, நேரே மானசாவின் வீட்டிற்குக் கிளம்பினான்.

டிரைவரிடம் முகவரி எழுதிய காகிதத்தைக் கொடுத்துவிட்டு அவன் இருக்கையில் சாய்ந்தபோது, தர்மலிங்கத்திற்குத் தாங்கள் எங்கு செல்கிறோமென்றே விளங்கவில்லை.

ஓட்டலுக்குச் செல்லும் வழி இல்லாமல், கார் சைதாப்பேட்டைக்குச் செல்லவும், ''யார் வீட்டுக்குப்பா சித்து?'' என்றார், கேள்வியாக.

''மானசாவோட வீட்டுக்குத்தான், அண்ணி! அண்ணா! டிரைவருக்கு வழி சொல்லுங்க!'' என்றவுடன், ஏதோ புரிந்தாற் போல், இருவர் முகமும் ஆனந்தத்தில் மலர்ந்தது.

மானசாவின் வீட்டிற்குச் சென்றபோது, வெங்கடேசனும் அலமேலுவும் அவர்களைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சித்தார்த் வந்ததும், அவனைக் கண்டு வியப்பில் விழிகள் விரிய நின்ற அலுமேலுவுக்கு, இப்போது எல்லாமே புரிந்தது போலிருந்தது.

அவர்களை உட்கார வைத்துவிட்டு, மானசாவின் அறைக் கதவைத் தட்டினார் அவர்.

அறையை விட்டு வெளியே வந்த மானசா, சித்தார்த்தை அங்கு எதிர்பார்க்கவில்லை என்பதை, அதிர்ந்து போன அவளின் முகம் கூறியது.

சித்தார்த்தின் முகம், அவளைக் கண்டதும் புன்னகையில் விகசித்து மலர்ந்துவிட, கண்கள் இரண்டும் பளபளப்பாய் மின்னின.

அவனுடைய முதல் நேசப் பார்வை, மானசாவின் நெஞ்சக் கூட்டுக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகளை ஒரே நேரத்தில் பறக்கச் செய்தன!

அவன் தான் சுமேதன் என்று புரிந்த அதிர்ச்சியில் இருந்து அவள் மீண்டு விட்டதை நெகிழ்ச்சியுடன் கசிந்த அவள் கண்கள் அறிவித்தன.

சித்தார்த் அவள்மீது கொண்ட காதல், விழிகளின் வார்த்தையாய் - அவன் நேசம் கவிதையாய் வந்து மானசாவை முத்தமிட்டது.

வேகமாக எழுந்த சித்தார்த், ''மானசா! நான் உன்னோட கொஞ்சம் பேசணும்.... என்னோட வருவியா?'' என்றவன், வெங்கடேசனிடம் திரும்பி, ''உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லியே அங்கிள்?'' - கம்பிரமாகக் கேட்டான்.

அதற்குள், மனைவியின் மூலம் விபரமறிந்திருந்த அவரும், மகிழ்ச்சியுடன் 'இல்லை' எனத் தலையசைத்தார்.

அவன் பார்வை, மானசாவிடம் கேள்வியாய்த் திரும்பியது. அவள், மௌனமாக அவனருகில் வந்து நிற்கவும், பெரியவர்களின் முகத்தில் மகிழ்ச்சியும் நிறைவும் தெரிந்தன.

பிறகு, அவனுடன் காரில் ஏறியபோது, அவள் மனம் மகிழ்ச்சியில் முரசு கொட்ட ஆரம்பிக்க, சிறிது நேரம் காரில் சுவாசச் சப்தம் கூடக் கேட்காத அமைதியே ஆட்சி செய்தது.

நேரே கடற்கரைக்குச் சென்று காரை நிறுத்திய சித்தார்த், அவளிடம் திரும்பினான். சிறிது நேரம் மூச்சுக் காற்றுக்குத் தவிப்பது போல், வார்த்தைகளுக்காகத் தவித்தவன், ''மானு! நான் உன்னை, என் உயிரா நேசிக்கிறேன்.... இதச் சொல்றதிலே, இப்ப எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை!'' - பெருமூச்சுடன் நிறுத்தினான்.

பிறகு ''பொதுவா ஒரு எழுத்தாளனா, எல்லாரையும் சரியா கணிக்கிற நான், உன்னைப் பார்த்த பிறகு முதல் முறையா சலனப்பட ஆரம்பிச்சேன். எங்கே, நீ என்னை ஆட்படுத்திடுவியோன்னு பயந்து.... அந்தத்தடுமாற்றமே உன்னைப் பத்தி என்னைத் தவறாகவே புரிஞ்சிக்க வச்சுது....

உன்கிட்டே என்னை இழந்துடுவேனோன்ற பயமே, என்னைக் கோபப்பட வெச்சுது. முதல்லே உன்னைக் காட்டுல பார்த்தபோது.... அந்த நாய்க்குட்டியக் காப்பாத்தினபோது.... அந்த வசந்த்கூட நீ பேசினபோது.... உன் ரசனைகளோட, என்னைப் பத்தியும் நீ விமர்சனம் செஞ்சபோது.... கடைசியா நீ அண்ணனுக்கு ரத்தம் கொடுத்தபோது எல்லாம்.... நீ ஆரம்பத்தில இருந்தே என்னைச் சலனப்படுத்தி இருந்திருக்கே!

உன்னை எனக்குப் பிடிக்காமப் போயிருந்தா, நான் தான் 'சுமேதன்'னு முதல்லேயே வெளிப்படுத்தி, கடிதங்களே வராம செஞ்சிருக்க முடியுமே....?

நான் அதுமாதிரி செய்யலை! ஏன்னா நான் என்னை அறியாமலேயே உன்னை விரும்ப ஆரம்பிச்சேன். அதனாலதான், என்னைப் பத்தி நீ என்ன

நினைக்கிறேங்கறதை உன்னோட கடிதம் மூலமாவே தெரிஞ்சுக்க விரும்பினேன்!

அதுவும், உன் மனசை வெளிப்படுத்தி, நீ எனக்கு எழுதின அந்தக் கடிதம்....!

அதனாலதான், நீ ஊருக்குக் கிளம்பினப்பக் கூட, என்னாலே உன்னை எதிர்கொள்ளவே முடியலை.... உன்னைப் பாக்கறதையே தவிர்த்தேன்!

முதல்லே, அதை வெறுப்புன்னு தப்பா நினைச்சிட்டு இருந்தேன்! அப்புறம்தான் தெரிஞ்சுது.... இத்தனை நாள், என் மனசு முழுக்க காதலைத்தான், நான் சுமந்துட்டு இருந்திருக்கேன்னு!

நான் உன் மனசை ரொம்பக் காயப்படுத்திட்டேனா மானு?'' என்ற கேள்வியுடன் முடித்த சித்தார்த்தின் குரல், மிகவும் மென்மையாய், மயிலிறகாய் வருடியபடி உணர்ச்சிப் பெருக்குடன் இருந்தது.

மௌனமாக 'இல்லை' என்பது போல், தலையசைத்து நிமிர்ந்த அவளுடைய கன்னங்களிரண்டும் வெட்கப் புன்னகையில் குழிந்தன.

அவன் பார்வை, அந்தக் கன்னக் குழியிலேயே ஒரு கணம் அதிகமாகப் பதிய, அதற்குள் தன்னை அன்றே அந்தக் குன்றின் உச்சியில் தொலைத்து விட்டதும், சித்தார்த்துக்கு இன்று புரிந்தது.

கடிதங்கள், அவள் மனதைக் கூறி இருந்ததால் அங்கு வார்த்தைகள் பயனற்றுப் போயின.

அவள் காதோரம் குனிந்து, ''மானு.... அப்படியே கொஞ்ச தூரம் கடல் வரைக்கும் நடந்து போயிட்டு வரலாமா....?'' என்றான் மென்மையாக!

விழியோரங்கள் மின்னலாய்ப் பளபளக்க, வெட்கத்துடன் நிமிர்ந்து அவள் மெல்லத் தலையசைத்ததும், அவளுடைய முன்னுச்சி முடியை ஒற்றை விரலால் ஒதுக்கி ஆவலுடன் முகத்தை ஏந்தி நெற்றியில் மெல்லத் தன் இதழ் பதித்தான் சித்தார்த்.

உடனே அவள் முகம் நாணத்தால் ஓர் இளஞ் சிவப்பு ஆடையைச் சூடிக் கொண்டதைக் கவனித்தவன், குறும்புடன், ''நான்.... ரொம்ப நாள் உன்னைக் காக்க வச்சிட்டேன் இல்லை.... சாரி மானு!'' என்றான்.

அவனுடைய உதடுகளைத் தன் விரல்களால் மென்மையாக மூடியவள், ''எதுக்கு சாரி எல்லாம்....?'' என்றாள் உணர்ச்சிப் பெருக்குடன்.

தண்ணோரம் தெரிந்த கேலியுடன், ''நான் உன் கையப் புடிச்சிக்கலாமா மானு.... கடைசி வரைக்கும்....?'' என்றான் சீண்டலாக.

தன் அனுமதியின்றியே வேகமாக அவளுடைய கை மேலே உயர, மனம் இவ்வளவு அழகாக இருக்கும் ஒரு மனிதன் தனக்குக் கிடைத்தது ஒரு இனிய வரமாய்த் தோன்றியது.

இனி எப்போதும் விடப் போவதில்லை என்பது போல், அவள் கையைத் தன்னுடன் இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டான் சித்தார்த்.

'என் உயிரும் உள்ளமும் உனக்கே சொந்தம்' என்ற உணர்வுடன், செல்லமாக அவன் தோளில் தன் முகம் பதித்தாள் மானசா.

எதிரே, கடல் தன் நுரைப் பூக்களை அலங்காரத் தோரணங்களாக்கி, அவர்களை வரவேற்றது.

செல்லமான ஒரு வளர்ப்பு பிராணியைப் போல் காலை வருடிச்செல்லும் அலைகளைப் பிரிய மனமின்றி, இருவரும் வெகு நேரம் அங்கு நின்றிருந்தனர்.

எதிரே பரந்து விரிந்திருந்த கடலின் ஓசை சுக ராகமாய்க் கேட்க, இருவருக்கும் வாழ்க்கை கண்முன் சந்தோஷமாய் தெரிந்தது.

நட்சத்திர மின்மினித் தோரணங்களால் வானம் இரவுக்குக் கட்டியம் கூற, எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்த மெல்லிசை, ஆன்மாவில் கலக்கின்ற ஓர் அற்புத பாஷையாய் மனதை நிறைத்தது.

''வீணையடி நீ எனக்கு.... மேவும் விரல் நானுனக்கு
பூணும் வடம் நீ எனக்கு.... புது வயிரம் நானுனக்கு''

ஒரு கணம் சிலிர்த்து நின்ற சித்தார்த், தன் மன வீணையை மீட்டியவளை, தனக்குள் ஓர் உயிராய் இணைந்தவளை, மென்மையுடன் அணைத்துக் கொண்டான்.

முழு நிலவின் மஞ்சள் கிரணங்களால், கடலும் தங்கச் சாயம் பூசிக்கொண்டு தகதகக்க, வானம் மென்பனித்தூவி அவர்களை ஆசிர்வதித்தது.

**நிறைந்தது....**